# பகுதி IV

## மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் கடமைகளும் தொழிற்பாடுகளும் தொடர்பான 1993 ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | 1993 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (திருத்தச்) சட்டம் | I |
| 2. | 1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் | IV |
| 3. | 1993 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் | VIII |
| 4. | 1993 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டம் | XI |
| 5. | 1993 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம் | XXI |
| 6. | 1993 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரி (திருத்தச்) சட்டம் | XXVII |
| 7. | 1983 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம் | XXXII |
| 8. | 1993 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, அந்நிய செலாவணி (மன்னிப்பு) சட்டம் | XXXIX |
| 9. | 1993 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் | XLVII |
| 10. | 1993 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் (திருத்தச்) சட்டம் | LXIV |
| 11. | 1993 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | LXV |
| 12. | 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபைச் சட்டம் | LXVII |
| 13. | 1993 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இரத்தினக்கல் வியாபார வங்கிச் சட்டம் | C |
| 14. | 1993 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் | CXXI |
| 15. | 1993 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவீட்டு (திருத்த)ச் சட்டம் | CXXV |
| 16. | 1993 ஆம் ஆண்டின் 63 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (திருத்தம்) சட்டம் | CXXX |

# 1993 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (திருத்தச்) சட்டம்

*[1993, மார்ச் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

**1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 23 ஆம் பிரிவு, அப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் காப்பு வாசகத்தைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. :-

"ஆயின் பந்திகள் (ii), (iv) என்பவற்றிற் குறிப்பீடு செய்யப்படாத ஏதேனும் சேவையில் ஊழியர் ஒருவரால் வகிக்கப்பட்ட ஓய்வூதியம் பெறற்பாலதல்லாத பதவியொன்று, எந்தத் தேதியன்று அவர் முதலில் ஓய்வூதியம் பெறற்பாலதல்லாத பதவியில் தொழிலில் அமர்த்தப்பட்டாரோ, அந்தத் தேதியிலிருந்து பயனுறும் வகையில் ஓய்வூதியம் பெறற்பாலதான பதவியாக்கப்படுமிடத்து, எந்தத் தேதியன்று பதவியானது ஓய்வூதியம் பெறற்பாலதானதாக்கப்பட்டதோ அந்தத் தேதியன்று அந்த ஊழியரின் தனிப்பட்ட கணக்கில் வரவிருக்கின்ற உதவு தொகைப்பணம் அவரது தொழில்தருநருக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்."

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்து, பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(3அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பெயர் குறித்த நியமனம் எதுவும் செய்யாதவிடத்தும், அத்தகைய உறுப்பினர் ஊழியர் சகாயநிதியச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாயநிதியத்தின் அல்லது அச்சட்டத்தின்கீழான அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியமொன்றின் உறுப்பினர் ஒருவராகவும் இருக்குமிடத்து அச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் பெயர் குறித்து, நியமிக்கப்பட்ட எவரேனும் நியமித்தல், சட்டத்தின்கீழ் நியமித்தர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அந்நியமித்தர் தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதலும் வேண்டும்."

4. பின்வரும் புதிய பிரிவானது 37 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், முதன்மைச் சட்டவாக்கத்தின் 37அ என்னும் பிரிவாக அது பயனுறுதலும் வேண்டும் :-

"தவணை தவறும் தொழில் தருநர்கள் மீது மிகைவரி விதித்தல்."

37அ. இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் அல்லது உதவுதொகைகள் தொடர்பான விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவும்படி சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பினால் தேவைப்படுத்தப் பட்டுள்ளவரான தொழில்தருநரொருவர், அதனகத்துக் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக, இந்த விபரத்திரட்டைக் கொடுத்துதவத் தவறியுள்ளவிடத்து, அல்லது செம்மையற்ற அல்லது குறைபாடான விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவியுள்ள விடத்து அத்துடன் அக்காலப்பகுதிக்குள் விபரத்திரட்டை அல்லது விடயத்திற்கேற்றாற்போன்று செம்மையான அல்லது பூரணமான விவரத்திரட்டைக் கொடுத்துதவத் தவறியமைக்கான காரணத்தை, சபையின் அல்லது அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் திருப்திக்கு விளங்கப்படுத்த இயலாதுள்ளவிடத்து, எந்தக் கடைசித் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் விபரத்திரட்டு வருமதியாக உள்ளதோ அந்தத் தேதியிலிருந்து, முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது செம்மையான திரட்டொன்று பெற்றுக்கொள்ளப்பட்ட தேதிவரையிலான, ஒவ்வோர் பூர்த்தியாக்கப்பட்ட மாதத்திற்கும், அல்லது அதன் ஏதேனும் பாகத்திற்கு, விபரத்திரட்டு தொடர்புறுகின்ற உதவுதொகையின் ஒரு சதவீத மிகைவரியொன்றை அவர் நிதியத்துக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்."

5. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் 47 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறாக முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது. :–

(1) "உழைப்புகள்" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :–

"உழைப்புக்கள்" என்பது -

(அ) கூலிகள், சம்பளம், அல்லது கட்டணங்கள்;

(ஆ) வாழ்க்கைச் செலவுப்படி, விசேட வாழ்க்கைப்படி, அத்துடன் வேறு எவையேனும் அவை போன்ற படிகள்;

(இ) விடுதலை நாட்கள் தொடர்பான கொடுப்பனவுகள்;

(ஈ) ஊழியர் சகாய நிதியத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட தொழில்களில் தொழில்தருநரால் ஊழியர்களுக்கு அளிக்கப்படும் ஏதேனும் சமைக்கப்பட்ட அல்லது சமைக்கப்படாத உணவின் செலவுதொகை அத்துடன் அவ்வாறு

அளிக்கப்பட்ட ஏதேனும் உணவின் தயாரிப்பில் அல்லது கலப்பில் பயன்படுத்தப்படும் ஏதேனும் அத்தகைய பொருளின் செலவு தொகை, தொழில் ஆணையாளருக்கான மேன்முறையீட்டுக்கு அமைந்ததாக தொழில்தருநரால் மதிப்பிடப்படும் அத்தகைய மேன்முறையீட்டில் அவரது தீர்மானம் இறுதியாதல் வேண்டும்.

(உ) சாப்பாட்டுப்படிகள்; அத்துடன்

(ஊ) ஊழியர்' சகாயநிதியச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு வகையான ஊழியம்;

(2) "தொழில்தருநர்" என்னும் சொல்லின் வரைவிலக்கணத்தில் உள்ள "கம்பெனி, கூட்டுத்தாபனம் அல்லது தொழிற்சங்கம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக. "கம்பெனி, கூட்டுத்தாபனம், உள்ளூரதிகார சபை அல்லது தொழிற்சங்கம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

6. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

*[1993, மார்ச் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் உயர்கல்வி நிறுவனங்களினதும் ஊழியர்களுக்கு 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளை ஏற்புடையனவாகச் செய்வதற்கும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 97அ என்னும் பிரிவை நீக்குவதற்கும், அத்துடன் அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதற்கு இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க ஊழியர்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 97அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

3. (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றுக்கும் 1980 திசெம்பர் ஒன்பதாம் தேதியிலிருந்து ஏற்புடையனவாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் ஒவ்வோர் உயர்கல்வி நிறுவனங்களும் நிதியத்திற்கு உதவு தொகைகள் செலுத்த வேண்டிய பொறுப்பு 1981 மார்ச் 1 ஆம் தேதி தொடங்கி விட்டதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு, எந்த ஆளெவரும் விடயத்துக்கேற்றாற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் ஊழியர் ஒருவராக இருக்கின்றாரோ அல்லது அவ்வாறு இருந்தாலோ அந்த ஆளொருவர் தொடர்பாக –

(அ) 1981 மார்ச் 3 ஆம் தேதியன்று அத்தகைய ஆள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது உயர் கல்வி நிறுவனத்தின் ஊழியர் ஒருவராக இருந்ததோடு இச்சட்டம் தொடங்கும் தேதியன்று விடயத்துக்கேற்றாற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தின் ஊழியர் ஒருவராகத் தொடர்ந்தும் இருக்குமிடத்திலான ஏதேனும் விடயத்தின் அத்தகைய ஆள் தொடர்பில் விடயத்துக்கேற்றாற் போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தினால் அக்காலப்பகுதியின் போது நிதியத்திற்குச் செய்யப்பட்ட எவையேனும்

உதவுதொகைகளைக் கழித்து 1981 மார்ச் 1 ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்கான ஒவ்வொரு மாதத்திற்கும் அத்தகைய ஆளின் மொத்த உழைப்புக்களின் மூன்று சதவீதத்திற்குச் சமமான தொகை;

(ஆ) 1981 மார்ச் 1 ஆம் தேதிக்குப் பிந்திய தேதியில் அத்தகைய ஆள் விடயத்துக்கேற்றாற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் ஊழியர் ஒருவராக வந்து இச்சட்டம் தொடங்கும் தேதியன்று விடயத்துக்கேற்றாற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் ஊழியர் ஒருவராக இருக்குமிடத்திலான ஏதேனும் விடயத்தில் அத்தகைய ஆள் தொடர்பில் விடயத்துக்கேற்றாற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைகுழுவினால் அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தினால் அக்காலப்பகுதியின் போது நிதியத்திற்குச் செய்யப்பட்ட எவையேனும் உதவுதொகைகளைக் கழித்து எந்தத் தேதியன்று அத்தகைய ஆள் விடயத்திற்கேற்றாற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் ஊழியர் ஒருவராக வந்துள்ளாரோ அந்தத் தேதியன்று தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியிலான ஒவ்வொரு மாதத்திற்கும் அத்தகைய ஆளின் மொத்த உழைப்புக்களின் மூன்று சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை;

(இ) 1981 மார்ச் 1 ஆம் தேதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றின் ஊழியர் ஒருவராக இருந்து இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னரான தேதியொன்றில் விடயத்துக்கேற்றாற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தின் ஊழியர் ஒருவராக இல்லாதொழியுமிடத்திலான ஏதேனும் விடயத்தின், அத்தகைய ஆள் தொடர்பில் விடயத்திற்கேற்றாற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தினால் அக்காலப்பகுதியின் போது செய்யப்பட்ட எவையேனும் உதவுதொகைகளைக் கழித்து 1981 மார்ச் 1 ஆம் தேதியன்று தொடங்கி எந்தத் தேதியன்று அத்தகைய ஆள் விடயத்துக்கேற்றாற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் ஊழியரொருவராக இல்லாதொழிகின்றாரோ அந்தத் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியிலான ஒவ்வொரு மாதத்திற்கும், அத்தகைய ஆளின் மொத்த உழைப்புக்களின் மூன்று சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை;

(ஈ) 1981 மார்ச் 1 ஆம் தேதிக்குப் பின்னரான ஏதேனும் தேதியில், அத்தகைய ஆள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றின் ஊழியரொருவராக வந்து இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னரான தேதியொன்றில் ஊழியர் ஒருவராக இல்லாதொழியு மிடத்திலான ஏதேனும் விடயத்தில், அத்தகைய ஆள் தொடர்பில் விடயத்துக்கேற்றாற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தினால் அக்காலப்பகுதியின் போது நிதியத்திற்குச் செய்யப்பட்ட எவையேனும் உதவுதொகைகளைக் கழித்து அத்தகைய ஆள் எந்தத் தேதியன்று விடயத்திற்கேற்றாற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் ஊழியர் ஒருவராக வந்துள்ளாரோ அந்தத் தேதியன்று தொடங்கி, எந்தத் தேதியன்று விடயத்திற்கேற்றாற் போன்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தின் ஊழியரொருவராக இல்லாதொழிந்தாரோ அந்தத் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியிலான ஒவ்வொரு மாதத்திற்கும் அத்தகைய ஆளின் மொத்த உழைப்புக்களின் மூன்று சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை

இச்சட்டம் தொடங்கி ஆறு மாதங்களுக்குள்ளாக அது நிதியத்திற்குச் செலுத்தினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலான அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தினாலான உதவுதொகைகளின் கொடுப்பனவைத் தேவைப்படுத்துகின்றதான முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும், உயர்கல்வி நிறுவனமொன்றும், எல்லா நோக்கங்களுக்காகவும் இணங்கி யொழுகின்றனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) எவரேனும் ஆள் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றினால் (1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட எவையேனும் கொடுப்பனவுகள், சபையினால் அத்தகைய ஆளின் தனிப்பட்ட கணக்குக்கு நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

5. இச்சட்டத்தின் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி –

“சபை” என்பது முதன்மைச் சட்டவாக்கத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை என்று பொருள்படும் ;

"நிதியம்" என்பது முதன்மைச் சட்டவாக்கத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்று பொருள்படும் ;

"உயர்கல்வி நிறுவனம்" என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் உள்ள அதே கருத்தைக் கொண்டதாகும் ;

"முதன்மைச் சட்டவாக்கம்" என்பது 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் என்று பொருள்படும் ;

"பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு" என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்று பொருள்படும்.

# 1993 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி (திருத்தச்) சட்டம்

*[1993, யூன் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

**உள்ளூர் கடன்கள் அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. ("முதன்மைச் சட்டவாக்கம்" என இதனகத்துப்பின்னர் குறிப்பீடு செய்யப்படும்) உள்ளூர் கடன்கள் அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(2) ஆணையாளர்கள் குறைந்தபட்சம் பதின்மூன்று ஆட்களையாவது கொண்டிருப்பதுடன் அவர்களனைவரும் அமைச்சரால் நியமிக்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் -

(அ) அவர்களில் ஒருவர் அமைச்சரினது அமைச்சுச் செயலாளராக இருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் அதன் தவிசாளராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) அவர்களில் ஒருவர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் பெயர் வழியில் அல்லது பதவி வழியில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பகிரங்க அலுவலர் ஒருவராய் இருத்தல் வேண்டும் ;

(இ) அவர்களில் எண்மர், சம்பந்தப்பட்ட மாகாணங்களின் சம்பந்தப்பட்ட ஆளுநர்களினால் பெயர் வழியில் அல்லது பதவி வழியில் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களான அத்தகைய மாகாணங்களின் மாகாண பொதுச்சேவை உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவர்களான வேறு மூன்று ஆட்களில் குறைந்தபட்சம் ஒருவராவது வங்கித்தொழிலில் அனுபவம் கொண்டவொரு ஆளாக இருத்தல் வேண்டும்".

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(4) தவிசாளரினால் அவசியமெனக் கருதக்கூடியவாறு அடிக்கடி ஆணையாளர்கள் கூடுதல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும், ஆணையாளர்களின் கூட்டமொன்று குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது நடைபெறுதல் வேண்டும்.

(5) ஆணையாளர்களின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்தாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அவர்களில் குறைந்தபட்சம் ஒருவர், (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணையாளராகவிருத்தலும் வேண்டும்."

3 முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(2) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளின் மூலம் ஆணையாளர்களுக்குக் கொடுபட வேண்டுமென அதிகாரமளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிரயாணப் படிகளுக்கு அல்லது வேறு செலவுகளுக்கு மேலதிகமாக, அமைச்சரின் அங்கீகாரத்துடன், ஆணையாளர்களினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய விகிதப்படியான ஊதியம் ஆணையாளர்களுக்குக் கொடுபடலாம்."

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(ஆ) "உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்" என அறியப்பட வேண்டியதும் ஆணையாளர்களினால் தாபிக்கப்பட்டு பேணப்பட வேண்டியதுமான விசேட நிதியத்துக்கு உதவுதொகையளிப்பதன் மூலம், அமைச்சரினால் காலத்துக்குக் காலம் கட்டளையிடப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்,"

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு நீக்கப்பட்டுவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"கடன்கள் வழங்கப்படக் கூடிய நோக்கம்."

9. உள்ளூரதிகாரசபை ஏதேனுக்கும், அல்லது உள்ளூரதிகார சபையொன்று அதன் பணிகளைக் கைமாற்றியுள்ள சபை ஏதேனுக்கும், அத்தகைய உள்ளூரதிகார சபை அல்லது சபை பொறுப்பேற்பதற்கு சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படக்கூடியதான தொழில்நுட்ப உதவியுட்பட ஏதேனும் பொதுசனப்

பாவனை வேலையின் நோக்கத்துக்காக, அமைச்சரின் அங்கீகாரத்துடன் கடன்கள் வழங்கலாம்."

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "உள்ளூரதிகாரசபை" என்னும் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-

"உள்ளூரதிகாரசபை" என்பது ஏதேனும் மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபை எனப் பொருள்படும் ;"

(2) "அமைச்சர்" என்னும் வரைவிலக்கணத்துக்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-

"அமைச்சர்" என்பது, உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நிதியம் என்னும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தொதுக்கப்படுகின்றதோ அவ்வமைச்சர் எனப் பொருள்படுவதுடன் "அமைச்சு" என்பதும் அதற்கிணங்கவே பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும் ;"

7. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1993 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டம்

*[1993, ஜூன் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

**இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 7(1) ஆம் பிரிவு தவிர்ந்தனவான இச்சட்டத்தின் ஏற்பாடுகள், எந்தத் தேதியன்று இச்சட்டம், பாராளுமன்றச் சட்டமாக வருகின்றதோ அந்தத் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும். 7 (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. (இதனகத்துப் பின்னர் "இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் 4 ஆம் பிரிவு, அதன் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

> "(அ) தனியார், கைத்தொழில், கமத்தொழில், அத்துடன் வர்த்தகத் தொழில் முயற்சிகளை மேம்படுத்தல், தாபித்தல், விசாலித்தல், கொண்டுநடாத்துதல் அத்துடன் நவீனமயப்படுத்தல் என்பவற்றில் உதவிசெய்தல்; அத்துடன்"

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவில் (1) ஆம் பந்தியில் உள்ள "நெடுங்கால, நடுத்தரக்காலக் கடன்கள் வடிவில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கடன்கள் வடிவில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (vii) ஆம் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

> "(vii) முகாமைத்துவ, தொழினுட்ப, செயலக மற்றும் நிருவாக ஆலோசனை, வணிக வங்கிச் சேவைகள் போன்ற அத்தகைய சேவைகளை அளித்தலும், அத்துடன்; இலங்கையில் தனியார், கைத்தொழில், கமத்தொழில், அத்துடன் வர்த்தகத் தொழில் முயற்சிகளுக்கும் அல்லது அவற்றிற்காகவும் முகாமைத்துவ தொழினுட்ப, செயலக நிருவாக அத்துடன் வணிக வங்கி சேவைகளைப் பெறுவதற்கு உதவுதலும்,"

(3) அப்பிரிவின் (xiii) ஆம் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(xiii) பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைய கைத்தொழில், கமத்தொழில், வர்த்தகத் தொழில் முயற்சிகளின் நாணயமாற்றுண்டியல்களையும் வாக்குறுதிப் பத்திரங்களையும், உரிமைச் சீட்டுக்களையும், உண்டியல்களையும், கடனீட்டுப் பத்திரங்களையும், சான்றிதழ்களையும், பங்குச் சான்றிதழ்த் தொகுதிகளையும், வேறு சாதனங்களையும், பிணைப் பொறுப்புக்களையும் அவை கைமாற்றத்தக்கனவாகவிருப்பினுஞ்சரி அவ்வாறு இல்லாவிடினுஞ்சரி, ஏற்றுக்கொள்வதற்கும், கழிவு கொடுப்பதற்கும், மீளக் கழிவு கொடுப்பதற்கும், வாங்குவதற்கும், விற்பதற்கும், கையாளுவதற்கும் தத்துவம் ;"

(4) அப்பிரிவின் (xv) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(xv) பிணைமுறிகளையும் தொகுதிக் கடன்களையும் வழங்குதலும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையிலும், அத்தகைய காலப்பகுதிக்கு ஆளொருவரிடமிருந்தும் அத்துடன் தவணைக் கால வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதலும்;"

(5) அப்பிரிவின் (xxii) ஆம் பந்தி (xxiii) என மீள இலக்கமிடுவதன் மூலமும் ; அத்துடன்

(6) அந்தப் பிரிவின் (xxi) ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(xxii) ஏதேனும் கைத்தொழில், கமத்தொழில், அல்லது வர்த்தகத் தொழில் முயற்சியிடமிருந்து வருமதியாகவுள்ள அல்லது அதனால் ஏதேனும் கடப்பாட்டை நிறைவேற்றியமைக்கான கொடுப்பனவுகளுக்கு உத்தரவாதமளித்தல்;"

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(i) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(1) வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனமானது ஐந்நூறு கோடி ரூபாவாதல் வேண்டும். இது ஒவ்வொன்றும் பத்து ரூபாப் பெறுமதிகொண்ட ஐம்பது கோடிப் பங்குகளாகப் பிரிக்கப்படல் வேண்டும்;"

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "பொதுமக்களுக்கு" என்னும் சொற்களை விட்டுவிடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அந்தப் பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(3) கூட்டுத்தாபனமானது -

(அ) ஏதேனும் குறித்தொதுக்குகை அல்லது பதிவானது, கூட்டுத்தாபனத்தின் மொத்த வழங்கப்பட்ட பங்குமூலதனத்தின் பதினைந்து சதவீதத்திற்கும் அதிகமானதனை அத்தகைய கம்பெனி கூட்டிணைக்கப்பட்ட குழு அல்லது தனியாள் சொந்தமாக வைத்திருப்பதற்கு இட்டுச்செல்லுமானால் ஏதேனும் கம்பெனியின் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது தனியாளின் பெயரில் ;

(ஆ) அத்தகைய குறித்தொதுக்குகை அல்லது பதிவானது வங்கியின் மொத்த வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் பதினைந்து சதவீதத்திற்கும் அதிகமானதனை அத்தகைய கம்பெனியும் (i) ஆம் (ii) ஆம் (iii) ஆம் அத்துடன் (iv) ஆம் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஓராள் அல்லது ஒருவருக்கு மேற்பட்டவர் கூட்டுமொத்தமாக சொந்தமாக வைத்திருப்பதற்கு இட்டுச் செல்லுமானால் ஒரு கம்பெனியின் பெயரிலும் பின்வரும் ஏதேனும் அல்லது பலவற்றின் பெயரிலும் -

(i) அதன் துணைநிலைக் கம்பெனிகளுள் ஏதேனும் ஒன்று ;

(ii) அதன் கொளிக் கம்பெனி ;

(iii) அதன் கொளிக் கம்பெனியில் துணைநிலைக் கம்பெனி அல்லது

(iv) அத்தகைய கம்பெனி அல்லது அதன் துணைநிலைக் கம்பெனி அல்லது அதன் கொளிக்கம்பெனி அல்லது அதன் கொளிக் கம்பெனியின் துணைநிலைக் கம்பெனி கணிசமானளவு அக்கறை கொண்டுள்ள ஒரு கம்பெனி.

(இ) அத்தகைய குறித்தொதுக்குகை அல்லது பதிவுசெய்தலானது வங்கியின் மொத்த வழங்கப்பட்ட மூலதனத்தின் பதினைந்து சதவீதத்திற்கு அதிகமானதனை அத்தகைய தனியாளும் (i) ஆம் (ii) ஆம் (iii) ஆம் (iv) ஆம் (v) ஆம் (vi) ஆம் (vii) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஓராள் அல்லது ஒருவருக்கு மேற்பட்டோர் கூட்டுமொத்தத்தின் சொந்தமாக வைத்திருப்பதற்கு இட்டுச்செல்லுமானால் தனியாளின்

பெயரிலும் பின்வரும் எவரேனும் ஒருவரின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரின் பெயரிலும்

(i) அவரது ஆகக்கிட்டிய உறவினர்கள் ;

(ii) அவர் கணிசமானளவு அக்கறை கொண்டுள்ள அல்லது அவரது ஆகக்கிட்டிய உறவினர் கணிசமானளவு அக்கறை கொண்டுள்ள ஒரு கம்பெனி ;

(iii) உட்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனி ஒன்றின் துணைநிலைக் கம்பெனி ;

(iv) உட்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனி ஒன்றின் கொளிக் கம்பெனி ;

(v) உட்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனி ஒன்றின் கொளிக் கம்பெனியின் துணைநிலைக் கம்பெனி;

(vi) உட்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனி ஒன்றில் அல்லது அதன் துணைநிலைக் கம்பெனியில் அல்லது அதன் கொளிக் கம்பெனியில் அல்லது அதன் பங்கு வைத்திருக்கும் கம்பெனியின் துணைநிலைக் கம்பெனியில் கணிசமான அக்கறை கொண்டுள்ள கம்பெனி ; அல்லது

(vii) அத்தகைய தனியாள் அல்லது அவரது ஆகக்கிட்டிய உறவினர் கணிசமானளவு அக்கறை கொண்டுள்ள கம்பெனி ஒன்று தவிர்ந்த கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்று.

(1) ஆம் உட்பிரிவின் கீழ் எவையேனும் பங்குகளைக் குறித்தொதுக்குதலோ எவையேனும் பங்குகளைப் பதிவு செய்தலோ ஆகாது.

ஒரு கம்பெனி அல்லது தனியாள் அத்தகைய கம்பெனியின் அல்லது விடயத்திற்கேற்றாற் போன்று கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பங்குகளில் ஐம்பத்தொரு வீதத்திற்கு அதிகமானதைச் சொந்தமாக வைத்திருக்கின்றவிடத்து, இவ்வுட்பிரிவின் கருத்துக்குள்ளாக அக்கம்பெனி அல்லது அத்தனியாள் ஒரு கம்பெனியில் அல்லது ஒரு கம்பெனி தவிர்ந்த கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணிசமானளவு அக்கறை வைத்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்."

(4) மூன்றாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக –

"ஆள் ஒருவர் தொடர்பில் ஆகக்கிட்டிய உறவினர்" என்பது அவ்வாளின் பெற்றோர், வாழ்க்கைத்துணை அல்லது பிள்ளை அல்லது அவ்வாளின் பிள்ளையின் வாழ்க்கைத் துணை என்று பொருள்படும் ;

"துணைநிலைக் கம்பெனி" என்பது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் குறித்தொதுக்கப்பட்ட கருத்தைக் கொண்டுள்ளது."

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்;பிரிவை நீக்குவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (4) ஆம், (5) ஆம், (6) ஆம், (7) ஆம் உட்பிரிவுகளை முறையே அப்பிரிவின் (3) ஆம், (4) ஆம், (5) ஆம், (6) ஆம் பிரிவுகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (4) ஆம் உட்பிரிவில் –

(அ) "(6) ஆம் உட்பிரிவின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(5) ஆம் உட்பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அந்த உட்பிரிவிலிருந்து "பங்குதாரர், பணிப்பாளர் எவரும் எட்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொடர்ந்த காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தலாகாது" என்னும் சொற்களை விட்டுவிடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (5) ஆம் உட்பிரிவில் "பாராளுமன்ற உறுப்பினர், அல்லது உள்ளூரதிகார சபையின் உறுப்பினர் ஒருவர்" என்ற சொற்களுக்குப் பதிலாக "பாராளுமன்ற உறுப்பினர் ஒரு மாகாணசபையின் அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் உறுப்பினர் ஒருவர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(5) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (6) ஆம் உட்பிரிவில் "நிதி அத்துடன் திட்டமிடல் என்னும் விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி, அத்தகைய தேர்தல் பயனுறுதலாகாது" என்னும் சொற்களை விட்டுவிடுவதன் மூலமும்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

8. பிரிவு 14ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 14அ, 14ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனக் கடனீட்டுப் பத்திரங்களும், பங்குத் தொகுதியும்."

14அ. (1) பணிப்பாளர் சபை கடனீட்டுப் பத்திரங்களையும், பங்குத் தொகுதியையும் உருவாக்கி வழங்கலாம். அவ்வாறு உருவாக்கி வழங்கப்படும் கடனீட்டுப் பத்திரங்களும் பங்குத் தொகுதியும், இச்சட்டத்தில் முறையே "இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனக் கடனீட்டுப் பத்திரங்கள்" எனவும் "இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனப் பங்குத்தொகுதி" எனவும் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்,

(2) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனக் கடனீட்டுப் பத்திரங்களும் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனப் பங்குத் தொகுதியும், பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கமைய வழங்கப்படுதலும், கைமாற்றப்படுதலும், கையாளப்படுதலும், மீட்கப்படுதலும், இல்லாதாக்கப்படுதலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் சபையினால் உருவாக்கப்பட்டு வழங்கப்பட்ட எவையேனும் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன கடனீட்டுப் பத்திரங்கள் மீதானதும், ஏதேனும் இவ்வகை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனப் பங்குத் தொகுதி மீதானதுமான முதலைத் திருப்பிச் செலுத்துவதற்கும் வட்டியைச் செலுத்துவதற்கும் ; அத்துடன்

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் உத்தரவாதத்தை நிறைவு செய்வதற்குத் தேவையான பணத்தொகை எதுவும், இலங்கைத் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்படல் வேண்டும்.

கணக்குகள் முதலியன பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

14ஆ. நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ஒவ்வொரு நிதியாண்டு முடிந்த பின்னரும் இயலுமானளவு விரைவாக, கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பற்றிய கூற்று, அத்துடன்

(அ) மீளவமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சருவதேச வங்கியிடமிருந்து அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறெவையேனும் சருவதேச அல்லது வெளிநாட்டு ஒழுங்கமைப்புக்களிடமிருந்து கூட்டுத்தாபனத்தால் திரட்டப்பட்ட ஒவ்வொரு கடனும்; அத்துடன்

(ஆ) பிரிவு 14 அல்லது 14அ என்பதன்கீழ் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட ஒவ்வோர் உத்தரவாதமும்,

என்பன பற்றிய கூற்று ஆகியன மீதிலான அறிக்கையை அந்த நிதியாண்டின்போது பாராளுமன்றத்தின் முன்பு சமர்ப்பிக்கச் செய்வித்தல் வேண்டும்."

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ள "இரண்டு தகைமைபெற்ற கணக்காய்வாளரால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளர்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கணக்காய்வாளர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு கணக்காய்வாளரும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கூட்டத்தாபனத்தின் கணக்காய்வாளர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு கணக்காய்வாளரும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(5) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் –

(அ) "கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு கணக்காய்வாளரும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) "உண்மையானதும் செம்மையானதுமான கருத்தை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "உண்மையானதும் நியாயமானதுமான கருத்தை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(6) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் "ஒவ்வொரு கணக்காய்வாளரினதும் அறிக்கை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(7) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில் "கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளர் ஒவ்வொருவரும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(8) அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவைச் சேர்த்துக்கொள்வதன் மூலமும்

"(8) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காளர்கள்" என்பது –

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவனத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருளாகும் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட, சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருளாகும்."

10. பிரிவு 16 ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், அவை முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் 16அ, 16ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"கூட்டுத்தாபனம் சான்றுக் கட்டளைச் சட்டத்தின் கருத்திற்குள் வங்கியொன்றாகக் கருதப்படல்."

16அ. கூட்டுத்தாபனம், கோரிக்கை வைப்புக்களை ஏற்றுக்கொள்வதில்லை என்னும் நிகழ்வு எப்படியிருப்பினும் சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 1 ஆம் அத்தியாயத்தின் கருத்திற்குள் வங்கியொன்றாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க வங்கிக்கும் வங்கி தொடர்பிலும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

தவறுகள்.

16ஆ. (1) எந்த ஆள் –

(அ) 7 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் மீறுகையாக, ஆளெவருக்கும் அல்லது அவரின் பெயரில் கூட்டுத்தாபனத்திலான பங்குத் தொகுதிகளை அறிந்து கொண்டே குறித்தொதுக்குகின்றாரோ அல்லது பதிவு செய்கின்றாரோ ;

(ஆ) 7 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் மீறுகையாக, ஆளெவருக்கும் அல்லது அவரின் பெயரில் கூட்டுத்தாபனத்திலான பங்குத் தொகுதிகளை அறிந்துகொண்டே குறித்தொதுக்கலை அல்லது பதிவைப் பெறுகின்றாரோ ; அத்துடன்

(இ) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராக, ஊழியராக அல்லது கணக்காய்வாளராக இருந்து கொண்டு, கூட்டுத்தாபனத்தின் கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான ஏதேனும் விடயத்தை எந்த நோக்கத்திற்காக, இச்சட்டத்தினால் வெளிவிடும்படி அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அந்த நோக்கம் தவிர்ந்த ஏதேனும் நோக்கத்திற்காக ஆளெவருக்கும் வெளிவிடுகின்றாரோ ;

அந்த ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்திற்கான இருவகையிலொரு வகையினதான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவினால் புரியப்பட்டுள்ளவிடத்து, அப்போது

(அ) அவ்வாட்கள் குழு ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாயிருப்பின் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், அலுவலரும் ; அல்லது

(ஆ) அவ்வாட்கள் குழு ஒரு குழுமமாயிருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளியும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படல் வேண்டும் :

ஆயின், எப்படியிருப்பினும், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒரு பணிப்பாளர் அல்லது அலுவலர், அல்லது அத்தகைய குழுமத்தின் ஒரு பங்காளி, அத்தகைய தவறு தமக்குத் தெரியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு உரிய எல்லாக் கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென எண்பித்தால், அத்தகைய தவறுக்கு அவர் குற்றவாளியாகக் கருதப்படல் ஆகாது.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) "கைத்தொழில் தொழில் முயற்சி" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

""கடன்" என்பது எவ்வாறு விவரிக்கப்பட்டதுமான எவ்வித வடிவினதுமான நிதிகளை உள்ளடக்கும்" ; அத்துடன்

(ஆ) "உள்ளூரதிகாரசபை" என்பதன் வரைவில்க்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

""மாகாண சபை" என்பது அரசியலமைப்பின் xviiஅ என்னும் அத்தியாயத்தினால் தாபிக்கப்பட்ட மாகாண சபை என்று பொருளாகும்."

12. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1993 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம்

*[1993, ஜூலை மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின், (ஈ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் உள்ள "பத்து சதவீதத்தால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இருபத்து ஐந்து சதவீதத்தால்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (9) ஆம், (10) ஆம், (11) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(9) ஆளொருவரும், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாக, எந்த விபரத்திரட்டை அப்பிரிவின்கீழ் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தப்படுகின்றாரோ அந்த விபரத்திரட்டைக் கொடுத்துதவத் தவறுமிடத்து, அல்லது வரிமதிப்பீட்டாளர் தேவைப்படுத்தக் கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்ட விபரத்திரட்டொன்றை அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாகக் கொடுத்துதவும்படி பணிக்கின்றதும் (2) ஆம் உட்பிரிவின் கீழ் வரிமதிப்பீட்டாளர் ஒருவரால், அவருக்குக் கொடுக்கப்பட்டதுமான அறிவித்தலின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, ஆணையாளர் தலைமை யதிபதியானவர் -

(அ) அத்தகைய ஆள்மீது ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு தொகையான ஒரு தண்டத்தை விதிக்கலாமென்பதுடன், அத்தகைய தண்டத் தொகை விதித்தமைபற்றி அத்தகைய ஆளுக்கு எழுத்திலான அறிவித்தலும் கொடுத்தல் வேண்டும் ;

(ஆ) எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய ஆளை அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக -

(i) அத்தகைய தண்டத்தைச் செலுத்தும்படியும் ; அத்துடன்

(ii) விடயத்துக்கேற்றாற்போன்று (1) ஆம் உட்பிரிவின்கீழ், கொடுத்துதவும்படி தேவைப்பட்ட விபரத்திரட்டு கொடுத்துதவப்பட்டில்லாதிருப்பின் அவ்விபரத் திரட்டைக் கொடுத்துதவும்படி அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் அவருக்குக் கொடுக்கப்பட்ட அறிவித்தலின் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்பட்டில்லாதிருப்பின் அதன் தேவைப்பாடு களுடன் இணங்கியொழுகும்படி,

தேவைப்படுத்தலாம்.

(10) ஆணையாளர் தலைமையதிபதியானவர், (9) ஆம் உட்பிரிவின்கீழ் எவரேனும் ஆள்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டத்தை, அத்தகைய ஆள், விடயத்துக்கேற்றாற்போன்று, (1) ஆம் உட்பிரிவின்கீழ் எந்த விபரத்திரட்டைக் கொடுத்துதவும்படி அவர் தேவைப்படுத்தப்பட்டாரோ அந்த விபரத் திரட்டைக் கொடுத்துதவுவதற்கு தவறியமை அல்லது (2) ஆம் உட்பிரிவில் அவருக்குக் கொடுக்கப்பட்ட அறிவித்தலின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறியமை அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகள் காரணமானதெனவும் விடயத்திற்கேற்றாற்போன்று தாம் பின்னராக அத்தகைய விபரத் திரட்டை கொடுத்துதவியுள்ளார், அல்லது அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகியுள்ளார் எனவும் ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிப்பாராயின், குறைக்கலாம் அல்லது தேவைப்படுத்தாது விட்டு விடலாம்.

(11) அத்தகைய தண்டமொன்று, (9) ஆம் உட்பிரிவின்கீழ் எவரேனும் ஆள்மீது, விடயத்துக்கேற்றாற்போன்று (1) ஆம் உட்பிரிவின் கீழ் விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவுவதற்கு தவறியமைக்காக அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ், அவருக்குக் கொடுக்கப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறியமைக்காக, விதிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆள், அந்த விபரத்திரட்டு அல்லது அந்த அறிவித்தல் தொடர்பாக, 53 ஆம் பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழான ஏதேனும் தவறுக்கான குற்றவழக்கிற்கு ஆளாதலாகாது."

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்து, பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(3அ) 1993 ஏப்பிறலில் அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலாண்டுக்காக விடயத்திற்கேற்றாற்போன்று ஏதேனும் வரிமதிப்பீட்டுக்கு அல்லது மேலதிக வரிமதிப்பீட்டுக்கு எதிராக (1) ஆம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீடொன்றை முன்வைக்கின்ற ஆளொவ்வொருவரும், (அத்தகைய ஆள் ஏற்கனவே அவ்வாறு செய்திருந்தாலொழிய) அந்தக்காலாண்டுக்காக அவரால் செய்யப்பட்ட விபரத்திரட்டின்

அடிப்படையில் அத்தகைய ஆளினால் கொடுபடற்பாலதான மொத்தவிற்பனை வரித்தொகையை, விடயத்துக்கேற்றாற்போன்று, அத்தகைய வரிமதிப்பீட்டின் அல்லது மேலதிக வரிமதிப்பீட்டின் அறிவித்தல் தேதிவரை அதன்மீது திரண்ட ஏதேனும் தண்டத்துடன் சேர்த்து, ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கொடுப்பனவுக்கு எண்பிப்பாகப் பற்றுச்சீட்டொன்றையும் மேன்முறையீட்டு மனுவுடன் சேர்த்தனுப்புதல் வேண்டும் :-

ஆயின், ஆணையாளர் தலைமையதிபதி விடயத்திற்கேற்றாற்போன்று அத்தகைய வரிமதிப்பீட்டு அல்லது மேலதிக வரிமதிப்பீட்டு அறிவித்தல் தேதியில் அல்லது தேதியளவில் மேன்முறையீட்டாளரால் கூறப்பட்ட பாரதூரமான நிதி நெருக்கடி காரணத்தினால், அத்தகைய வரியையும் அத்தகைய தண்டத்தையும் செலுத்துவதிலிருந்து, மேன்முறையீட்டாளர் தடுக்கப்பட்டாரெனத் திருப்தியடைந்ததன்மேல், அத்தகைய வரியையும் கொடுப்பனவுத் தேதி வரை அதன்மீது திரண்ட தண்டத்தையும் கொடுப்பதற்காகக் காலநீடிப்பொன்றை வழுங்கலாம், அத்துடன் அதற்கிணங்க, அவ்வாறு நீடிக்கப்பட்ட காலத்திற்குள்ளாகக் கொடுத்துதவப்பட்டதான அத்தகைய வரியையும் கொடுப்பனவுத் தேதியில் அதன்மீது திரண்ட தண்டத்தையும் கொடுப்பனவு செய்தமைக்கு எண்பிப்பாக இருக்கும் ஒரு பற்றுச்சீட்டு இப்பிரிவின் தேவைப்பாடுகளினது போதிய இணங்கியொழுகலாகக் கருதப்பட வேண்டும்".

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் உள்ள "இரண்டாம், மூன்றாம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "இரண்டாம், (3) ஆம், (3அ) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலுள்ள, "1991 ஒற்றோபர் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலாண்டின்போது" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1991 ஆம் ஆண்டு ஒற்றோபர் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர், ஆனால் 1993 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் காலாண்டின்போது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது 48 ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"1993 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னரான ஏதேனும் காலாண்டிற்காக எந்திரத் தொகுதி அல்லது சாதனம் மீது செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு வரி உற்பத்தியாளரால் கழிக்கப்படுதல்."

48. ஆ. (1) பதிவுபெற்ற எவேரனும் உற்பத்தியாளர், (இவர் இப்பிரிவில் இதனகத்துப்பின்னர் "முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) 1993 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் காலாண்டின்போது ஏதேனும் பொருளை உற்பத்தி செய்யும் அவரது தொழிலில் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளரால் பயன்படுத்தப்பட்ட எந்திரத் தொகுதி அல்லது சாதனம் தொடர்பில் –

(i) மொத்த விற்பனை வரவு வரியை உள்ளடக்கும் ஏதேனும் பணத்தொகையை அக்காலாண்டின் போது செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் வேறொரு பதிவுபெற்ற உற்பத்தியாளருக்கு (இவர் இதனகத்துப் பின்னர் இப்பிரிவில் "இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) செலுத்தியுள்ளவிடத்து, அல்லது

(ii) அக்காலாண்டின்போது ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரியை 12 ஆம் பிரிவின்கீழ் சுங்கப்பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தியுள்ளவிடத்து,

விடயத்துக்கேற்ப அவ்வாறு உள்ளடக்கப்பட்ட அல்லது அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு வரி, 47 ஆம் பிரிவின் அல்லது 48 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அத்தகைய பொருளின் விற்பனையிலிருந்து எழுவதான அவரது விற்பனை வரவு தொடர்பில் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளரினால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் மொத்த விற்பனை வரியிலிருந்து, அது அவ்வாறு கழிக்கப்படக்கூடிய அளவுக்கு கழிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின் –

(அ) கழிக்கப்படும் தொகை அவ்வாறு உள்ளடக்கப்பட்ட அல்லது அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு வரியின் பன்னிரண்டரைச் சதவீதத்தை விஞ்சுதல் ஆகாது ;

(ஆ) கழிவானது (ஈ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அத்தகைய உற்பத்திக்கு அத்தகைய எந்திரத்தொகுதி அல்லது சாதனம் பயன்படுத்த தொடங்கப்பட்ட காலாண்டை உடனடுத்துவரும் காலாண்டுக்கு அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து முதன்முதலிலும் பின்னர் அடுத்துப் பின்வரும் காலாண்டுக்கு அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்தும், அவ்வாறாகத் தொடர்ந்தும் செய்யப்படுதல் வேண்டும் ;

(இ) அவ்வாறு உள்ளடக்கப்பட்ட அல்லது அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு வரிக் கழிவானது –

(i) அத்தகைய மொத்த விற்பனை வர்வு வரி, விலக்கப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் ஏதேனும் தொழிலில் அல்லது 4 ஆம் பிரிவின்கீழ் மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் தொழிலில் பயன்படுத்தப்படும் எந்திரத்தொகுதி அல்லது சாதனம் தொடர்பில் ;

(ii) விடயத்திற்கேற்ப அவ்வாறு செலுத்தப்பட்ட அத்தகைய பணத்தொகை தொடர்பில் அல்லது அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு வரி தொடர்பில் 46 (2) ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு இரண்டாவதாக குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளரிடமிருந்து உறுதிச்சீட்டொன்றை அல்லது சுங்கப்பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து உறுதிச்சீட்டொன்றைப் பெற்றிருந்தாலேயொழிய,

(iii) அத்தகைய எந்திரத்தொகுதியினை அல்லது சாதனத்தினை அத்தகைய தொழிலில் பயன்படுத்தல் ஏதேனும் காலாண்டில் இல்லாதொழியின் அத்தகைய காலாண்டுக்கு, அத்தகைய மொத்த விற்பனை வரவு வரி தொடர்பில் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து,

செய்யப்படுதலாகாது.

(ஈ) விடயத்திற்கேற்ப பதிவுபெற்ற உற்பத்தியாளர் ஒருவராக அவரது பதிவு செய்யப்படுவதற்கு முன்னர் எவரேனும் ஆளினால் அவ்வாறு உள்ளடக்கப்பட்ட அல்லது அவ்வாறு செலுத்தப்பட்ட ஏதேனும் மொத்த விற்பனை வரி, பந்தி (ஆ) என்பதில் எது எவ்வாறிருப்பினும், அவர் மொத்த விற்பனை வரவு வரிக்கு பொறுப்புடையவராக வந்த காலாண்டுக்குச் செலுத்தப்படற்பாலதான அத்தகைய மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து முதன்முதலிலும், பின்னர் அடுத்துவரும் காலாண்டுக்குச் செலுத்தப்படற்பாலதான அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பிலான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்தும், அவ்வாறாகத் தொடர்ந்தும் கழிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு தொடர்பிலான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து அது கழிக்கப்பட்ட பின்னர், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க கழிக்கப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியின் மீதியானது, கழிவு முதன்முதலானதாக எக்காலாண்டில் செய்யப்பட்டதோ அக்காலாண்டிலிருந்து கணிக்கப்படும் ஒவ்வோர் எட்டுக் காலாண்டுகளுக்கும், 49 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய மீளளிக்கப்படுதல் வேண்டும் ;

ஆயின், (1) உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எந்திரத்தொகுதி அல்லது சாதனம் அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வோர் எட்டுக் காலாண்டுகளிலும் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உற்பத்தித் தொழிலில் பயன்படுத்தப்பட்டிருந்தாலேயொழிய, மீளளிப்பு எதுவும் செய்யப்படுதல் ஆகாது".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவுக்கு, இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்காகவும், 1993 பெப்பிரவரி 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறே -

(அ) 1993 பெப்பிருவரி 1 ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது, ஓர் இறக்குமதியாளரிடமிருந்து இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவுக்கிணங்கக் கணிப்பிடப்பட்ட மொத்த விற்பனையின் மீது சேகரிக்கப்பட்ட ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரியானது வலிதுடையதாக அறவிடப்பட்டிருக்கின்றதெனவும் சேகரிக்கப் பட்டிருக்கின்றதெனவும் அறவிடப்பட வேண்டியதெனவும் சேகரிக்கப்பட வேண்டியதெனவும் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவுக்கிணங்க இறக்குமதியாளரொருவரால் செலுத்தப்படற்பாலதான அவரது மொத்த விற்பனை மீதான மொத்த விற்பனை வரியானது, விடயத்துக்கேற்றாற்போன்று அத்தகைய மொத்த விற்பனை வரவு வரி அல்லது அத்தகைய மொத்த விற்பனை வரவு வரிக்கும், இயைபான காலாண்டிற்கு அத்தகைய இறக்குமதியாளரால் செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு வரிக்குமிடையிலான வித்தியாசம் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளாகச் செலுத்தப்பட்டிருப்பின், தவணை தவறியதாகக் கருதப்படுதலாகாது.

8. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1993 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரி (திருத்தச்) சட்டம்

*[1993, ஜூலை மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1989 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரிச் சட்டத்திற்கான விரிவுப்பெயர் "முறையே 1989 ஏப்பிறில் 1ஆம் தேதியன்றும், 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்றும் 1992 ஏப்பிறில் 1ஆம் தேதியன்றும் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டுகளுக்காக" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "முறையே, 1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்றும், 1990 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்றும் 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்றும், 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்றும் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்றும் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டுகளுக்காக" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவு "ஆனால் 1993 மார்ச் 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் முடிவடைகின்ற" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1994 மார்ச் 31 ஆம் தேதிக்குப் பிந்தாமல் முடிவடைகின்ற" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (iii) ஆம் பந்தியில் "1991 நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்; அத்துடன்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1992 நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்;

(2) அப்பிரிவின் (iv) ஆம் பந்தியில் "1992 ஆம் ஆண்டு நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1993 ஆம் ஆண்டு நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும் அத்துடன்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (iv) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(v) 1993 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு அவராற் செலுத்தப்படற்பாலதான மிகைவரித் தொகையின் :-

(அ) ஐம்பது சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1993 ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்; அத்துடன்

(ஆ) மிகுதியை 1993 நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும் ;"

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "ஊதியத்திலிருந்து ஏழரைச் சதவீதத்தையும்; அத்துடன்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "ஊதியத்திலிருந்து ஏழரை சதவீதத்தையும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "ஊதியத்திலிருந்து ஏழரைச் சதவீதத்தையும்" என்னும் சொற்களுக்கும், இலக்கங்களுக்கும் பதிலாக "ஊதியத்திலிருந்து ஏழரைச் சதவீதத்தையும்; அத்துடன்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(உ) 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு அந்த ஊழியரின் ஊதியத்திலிருந்து கழிக்கப்படற்பாலதான மொத்த வருமானவரியின் –

(i) அத்தகைய ஊழியருக்கு 1993 ஜுலை மாதத்திற்கு கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து ஏழரை சதவீதத்தையும் ; அத்துடன்

(ii) அத்தகைய ஊழியருக்கு 1993 ஒற்றோபர் மாதத்திற்குக் கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து ஏழரைச் சதவீதத்தையும்".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவிற்கான காப்புவாசகத்தின் (ii) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(ii) இச்சட்டத்தின்கீழ் இயைபான ஆண்டொன்றுக்கு மிகைவரி செலுத்துவதற்கு ஆளாகின்றவரான எவரேனும் ஆள் –

(அ) 1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு 1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டு ஆண்டுக்கு உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின்,

(i) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1989 ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்; அத்துடன்

(ii) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1989 நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ;

(ஆ) 1990 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு, 1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின்,

(i) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1990 ஆகஸ்ட் 15 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்; அத்துடன்

(ii) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1990 நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்;

(இ) 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு, 1990 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின் –

(i) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1991 ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ; அத்துடன்

(ii) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1991 நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ; அத்துடன்

(ஈ) 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு, 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின் –

(i) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1992 ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ; அத்துடன்

(ii) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1992 நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ;

(உ) 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு, 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின் –

(i) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1993 ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ; அத்துடன்

(ii) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1993 நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் மிகை வரியாகச் செலுத்துகின்ற விடத்து, அத்தகைய ஆள் ;

1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1990 நவெம்பர் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்,

1990 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1991 நவெம்பர் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்,

1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1992 நவெம்பர் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்,

1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1993 நவெம்பர் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்,

1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1994 நவெம்பர் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்,

அத்தகைய ஆள் அந்த இயைபான ஆண்டுக்கு அவரால் செலுத்தற்பாலதான மிகைவரியின் மிகையை அவரால் செலுத்தப்பட்ட தொகைக்கு மேலாகச் செலுத்தினால் 3 ஆம் பிரிவின்கீழ் செலுத்துவதற்கு அவர் தேவைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் இப்பிரிவின்கீழ் ஏதேனும் தண்டப்பணம் செலுத்துவதற்காளாதல் ஆகாது."

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

(1) "வதிவற்ற கம்பனி" "ஆள்" "இலாபங்களும் வருமானமும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வதிவற்ற கம்பனி" "இலாபங்களும் வருமானமும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

(2) “வருமான வரி” என்பதன் வரைவிலக்கணத்தின் (v) ஆம் பந்தியில் “என்று பொருளாகும் ; அத்துடன்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “என்று பொருளாகும்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) “உண்ணாட்டரசிறைச் சட்டம்” என்பதன் வரைவிலக்கணத்தில் “எனப் பொருளாகும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “எனப் பொருளாகும் ; அத்துடன்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) “உண்ணாட்டரசிறைச் சட்டம்” என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்னர் பின்வரும் வரைவிலக்கணத்தைச் சேர்ப்பதன் மூலமும் ;

“ஆள்” என்பது ஒரு கம்பனியை அல்லது ஆட்கள் குழுவை அல்லது ஏதேனும் அரசாங்கத்தை உள்ளடக்கும் ஆனால் இலங்கை மத்திய வங்கியை உள்ளடக்கமாட்டாது”.

8. இச்சட்டத்தின் 7 (4) ஆம் பிரிவினால் செய்யப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவிற்கான திருத்தம்; 1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று எல்லா நோக்கங்களுக்காகவும் நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

9. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை எதுவும் ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1993 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம்

*[1993, ஜூலை மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

**1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (20அ), (20ஆ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(20அ) ஏதேனும் விலைகோரிப் பெறப்பட்ட பங்குடைய பகிரங்கக் கம்பெனியில் அல்லது 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைக் கடன் தகவல் பணியகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கடன் தகவல் பணியகத்தில் உள்ள ஏதேனும் பங்கு தொடர்பில் வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழ் ;

(20ஆ) ஏதேனும் விலைகோரிப் பெறப்பட்ட பங்குடைய பகிரங்கக் கம்பெனியில் அல்லது 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைக் கடன் தகவல் பணியகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கடன் தகவல் பணியகத்தில் உள்ள ஏதேனும் பங்கினைக் கைமாற்றுவதற்காக நிறைவேற்றப்பட்ட சாதனம் ;

(20இ) ஏதேனும் விலைகோரிப் பெறப்பட்ட பங்குடைய பகிரங்கக் கம்பனியிலான, விடயத்திற்கேற்றாற் போன்று ஏதேனும் மாற்றத்தகு தொகுதிக்கடன் அல்லது வேறு மாற்றத்தகு பிணையம் தொடர்பாக வழங்கப்பட்ட மாற்றத்தகு தொகுதிக்கடன் சான்றிதழ் அல்லது அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அதையொத்த தன்மைத்தான அத்தகைய வேறு சாதனம் ; அத்துடன் அத்தகைய வழங்குகை அல்லது கைமாற்றம் 1993, ஏப்பிரில் 21 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆக்கப்படுமிடத்து அல்லது செய்யப்படுமிடத்து, அத்தகைய தொகுதிக் கடனை அல்லது அத்தகைய வேறு மாற்றத்தகு பிணையத்தைக் கைமாற்றுவதற்காக நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனம் ; அத்துடன்" ;

(2) அப்பிரிவின் 22 ஆம் பந்தியை உடனடுத்து, பின்வரும் புதிய பந்தியைச் சேர்த்துக்கொள்வதன் மூலமும் :-

"(23) (வைப்பீட்டாளரின் அல்லது அவரது நியமத்தரின் பெயரைக் கொண்டிருக்கின்றதான ஏதேனும் அத்தகைய சான்றிதழ் தவிர) 1993, ஏப்பிரில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் வழங்கப்பட்டதும் நான்காண்டுகளுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கானதும் அத்துடன், அந்தக் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்பு எந்த நேரத்திலும் காசாக்கப்படாததுமான வைப்புச் சான்றிதழ்,".

(3) முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் உள்ள "காசோலை அல்லது வாக்குறுதிப் பத்திரம்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "காசோலை அல்லது வாக்குறுதிப்பத்திரம்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்த்துக் கொள்வதன் மூலமும்

"(ஈ) இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (23) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டதும், அதனகத்துக் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதி முடிவடைவதற்கு முன்பு காசாக்கப்பட்டதும், அத்துடன் அத்தகைய காசாக்கல் தேதியன்று முத்திரையிடப்பட்டதுமான ஒரு வைப்புச் சான்றிதழ்".

(4) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் -

"(ஆஆ) அத்தகைய கம்பெனியின் பங்குதாரர்களுக்குப் பதிலிப் பத்திரங்களை வழங்குகின்ற ஏதேனும் கம்பெனிக்கு" ;

(ஆ) "அத்தகைய கம்பெனியால் வழங்கப்பட்ட பங்குகள் மீது அல்லது தொகுதிக்கடன் தொக்குகளின் மீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய கம்பெனியால் வழங்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட பங்குகள் அல்லது

தொகுதிக்கடன் தொக்குகளின் மீது அல்லது அத்தகைய கம்பெனியால் வழங்கப்பட்ட பதிலிப் பத்திரங்கள் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) அவ்வுட்பிரிவின் (2) ஆம் பந்தியில் "அத்தகைய கம்பெனியால் வழங்கப்பட்ட பங்குகளின் அல்லது தொகுதிக் கடன் தொக்குகளின், அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய கம்பெனியால் வழங்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட பங்குகளின் அல்லது தொகுதிக் கடன் தொக்குகளின் அல்லது அத்தகைய கம்பெனியினால் வழங்கப்பட்ட பதிலிப்பத்திரங்களின், அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஈ) அவ்வுட்பிரிவின் (iii) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(ஆஆ) அத்தகைய கம்பெனியால் பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட பதிலிப்பத்திரங்கள்மீது," அத்துடன்

(உ) "இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக" என்னும் சொற்கள் தொடக்கம் அப்பந்தியின் இறுதிவரை உள்ள எல்லாச் சொற்களையும் விட்டுவிடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ii) பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(ii) வங்கி, அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மை அல்லது நிறுவனம் ஒவ்வொன்றும், அதனால் எடுக்கப்பட்ட (காசோலை ஒன்று தவிர்ந்த) மாற்றுண்டியல், வாக்குறுதிப் பத்திரம், நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டு, நம்பிக்கைப் பொறுப்புக் கடிதம் அல்லது நம்பிக்கைப் பொறுப்பு வெளிப்படுத்துகை ஒவ்வொன்றின் தொடர்பிலும், அத்துடன் அசையும் பருப்பொருள்கள் தொடர்பாக அதற்குச் செய்யப்பட்ட அடகு ஒவ்வொன்றினதும், நாணயக் கடிதம் ஒன்றிற்காக அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்ப மொன்றினதும், அதனால் வழங்கப்பட்ட வைப்புச் சான்றிதழ் ஒவ்வொன்றினதும் அத்துடன் (அதனுடன் அப்பருப்பொருள் தொடர்பில் நாணயக் கடிதமொன்று திறக்கப்பட்டிராத ஏதேனும் அசையும் பருப்பொருளாயிருக்கின்ற) ஏதேனும் அசையும் பருப்பொருள் தொடர்பில் அதற்கு முன்வைக்கப்பட்ட கொடுப்பனவுக்கான ஆவணங்களில் ஏதேனும் ஒன்று தொடர்பில் செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையைச் சேகரித்தல் வேண்டும்."

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(4) (காசோலை ஒன்று தவிர்ந்த) ஒரு மாற்றுண்டியல், வாக்குறுதிப் பத்திரம், நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டு, நம்பிக்கைப் பொறுப்புக் கடிதம், நம்பிக்கைப் பொறுப்பு வெளிப்படுத்துகை, அசையும் பருப்பொருள்கள் தொடர்பிலான அடகு, நாணயக் கடிதத்திற்கான விண்ணப்பம், வைப்புச் சான்றிதழ் அல்லது (அதனுடன் அப்பருப்பொருள் தொடர்பில் நாணயக்கடிதமொன்று திறக்கப்பட்டிராத ஏதேனும் அசையும் பருப்பொருளாயிருக்கின்ற) ஏதேனும் அசையும் பருப்பொருள் தொடர்பில் அதற்கு முன்வைக்கப்பட்ட கொடுப்பனவுக்கான ஆவணங்களில் ஏதேனும் ஒன்று என்பவற்றுக்கான முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவு, இப்பிரிவுக்கிணங்க விடயத்திற்கேற்றாற் போன்று ஒத்திணக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது சேகரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளவிடத்து, விடயத்திற்கேற்றாற்போன்று, கம்பெனி, வங்கி, அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மை, அல்லது நிறுவனம், அத்தகைய (காசோலை ஒன்று தவிர்ந்த) மாற்றுண்டியல், வாக்குறுதிப் பத்திரம், நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டு, நம்பிக்கைப் பொறுப்புக் கடிதம், நம்பிக்கைப் பொறுப்பு வெளிப்படுத்துகை, அசையும் பருப்பொருள்கள் தொடர்பிலான அடகு, நாணயக் கடிதம் ஒன்றுக்கான விண்ணப்பம், வைப்புச் சான்றிதழ் அல்லது கொடுப்பனவுக்கான ஆவணம் என்பன மீதிலான முத்திரைத் தீர்வை, விடயத்துக்கேற்றாற்போன்று, ஒத்திணக்கப்பட்டுள்ளது அல்லது சேகரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என அவ்வவற்றின் மீது அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும். அத்தகைய சான்றிதழ் பொருளளவில் பின்வரும் படிவத்தில் இருத்தல் வேண்டும் :-

இச்சாதனம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையானது, அதாவது ரூ ..........முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒத்திணக்கப்பட்டுள்ளது அல்லது சேகரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என இத்தால் அத்தாட்சிப்படுத்தப்படுகின்றது." ;

(4) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் "மேலே சொல்லப்பட்டவாறு ஒத்திணக்கப்பட்டிருப்பினும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மேலே சொல்லப்பட்டவாறு ஒத்திணக்கப்பட்டிருப்பினும் அல்லது சேகரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டிருப்பினும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(5) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய உட்பிரிவை சேர்ப்பதன் மூலமும் :-

"(7) இப்பிரிவின் நோக்கங்களுக்காக –

"நிறுவனம்" என்பது பயணிகளின் காசோலைகளைக் காசாக மாற்றுவதற்கு அல்லது வைப்புச் சான்றிதழை வழங்குவதற்கென பணச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரம் வழங்கப்பட்ட எவரேனும் ஆள் அல்லது ஆட்களின் குழுமமொன்று எனப் பொருள்படும்".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆவது உட்பிரிவை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–

"(2) பதின்மூன்றாம் பிரிவின் கீழ் ஒத்திணக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட தீர்வையானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியால் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அல்லது அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் செலுத்தப்பட்டிராவிடின், அத்தகைய தீர்வையானது, செலுத்தப்படாதுள்ள ஒவ்வொரு மாதத்திற்கும் செலுத்தப்படற்பாலதான தீர்வையின் பத்து வீதத்திற்குச் சமமான ஒரு தண்டத்துடன் சேர்த்துத் தவணை தவறியதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தீர்வையை ஒத்திணக்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டவரான அல்லது அவ்வாறு சேகரித்து அனுப்பிவைக்குமாறு தேவைப்படுத்தப்பட்டவரான ஆள், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக தவணை தவறியவரொருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

ஆயின், இவ்வுட்பிரிவின் கீழ் தண்டமாகச் செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகையானது தவணை தவறிய தீர்வையின் ஐம்பது சதவீதத்தை விஞ்சுதலாகாது.

6. 1991 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகிறது :–

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பந்தியில் –

(அ) "பின்வரும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படாத அல்லது பழுதாக்கப்பட்ட முத்திரைகளுக்கு விடுபாடொன்றை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பின்வரும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படாத அல்லது பழுதாக்கப்பட்ட முத்திரைகளுக்கு அல்லது முத்திரையை ஒட்டுவது மூலம் அல்லாத வேறு வகையில் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட்டிருக்குமிடத்து, விடுபாடொன்றை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்",

(ஆ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "நாணயக் கடிதம் ஒன்று வழங்கப்பட்டவிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நாணயக் கடிதம் ஒன்று வழங்கப்பட்டவிடத்து ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

(ஊ) நாணயக் கடிதம் ஒன்று, அத்தகைய நாணயக் கடிதத்திற்கெனச் செய்யப்பட்ட முறையாக முத்திரையிடப்பட்ட விண்ணப்பமொன்றைப் பின்பற்றி வழங்கப்பட்டும் அத்துடன், பகுதியாக மாத்திரம் பயன்படுத்தப் பட்டிருக்குமிடத்து, எவ்வாறாயினும் செய்யப்பட்ட அந்த விடுபாடானது, நாணயக்கடிதத்தின் பெறுமதியின் பயன்படுத்தப்பட்டிராத பாகத்திற்குச் சார்த்தப்படக் கூடியவாறான, செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வையின் அத்தகைய பாகத்தின்மீது செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்." ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "பயன்படுத்தப்படாத அல்லது பழுதாக்கப்பட்ட முத்திரைகள் கொள்வனவு செய்யப்பட்ட தேதியிலிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விடயத்திற்கேற்ப பயன்படுத்தப்படாத அல்லது பழுதாக்கப்பட்ட முத்திரைகள் கொள்வனவு செய்யப்பட்ட தேதியிலிருந்து அல்லது முத்திரைத் தீர்வை செலுத்தப்பட்ட தேதியிலிருந்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும், அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(3) ஆணையாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின் கீழ் விடுபாடொன்றுக்கான விண்ணப்பமொன்றின் மீது,

(அ) முத்திரைகள் பயன்படுத்தப்படாதவிடத்து அல்லது, பழுதாக்கப்பட்டவிடத்து விண்ணப்பகாரர்களுக்கு, ஒன்றில்

(i) அதே விவரணத்தையும் பெறுமதியையும் கொண்ட வேறு முத்திரைகளை; அல்லது

(ii) முத்திரையின் பெறுமதியை, அத்தகைய பெறுமதியின் ஐந்து சதவீதத்தைக் கழித்த பின்னர் பணமாகவோ அல்லது பணத்தைச் செலுத்துவதற்கான ஒரு கட்டளை மூலமாகவோ,

கொடுக்கலாம்.

(ஆ) முத்திரைகளை ஒட்டுவதன் மூலமன்றி வேறுவகையாக முத்திரைத் தீர்வை செலுத்தப்பட்டிருக்குமிடத்து செலுத்தப்பட்ட முத்திரைத்தீர்வையை, அவ்வாறு செலுத்தப் பட்ட முத்திரைத் தீர்வையின் ஐந்து சதவீதத்தைக் கழித்ததன் பின்னர் மீளளிக்கலாம்.

7. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவு "ஆவணம்" என்பதன் வரைவிலக்கணத்தில் அதன் (அ) என்னும் பந்தியில் "நீதிமன்ற அழைப்பாணை, பிரேரணை தவிர்ந்த விண்ணப்பம், வினாக் கொத்துக்கான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நீதிமன்ற அழைப்பாணை, பிரேரணை தவிர்ந்த விண்ணப்பம், வினாக் கொத்துக்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

8. இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும், 1986, நவம்பர் 12 ஆம் தேதி நடைமுறைக்கு வந்ததாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான 54 ஆம் பிரிவின் கீழ் ஒரு விடுதொகைக்கான விண்ணப்பமொன்றைச் செய்ய உரித்துடையவரான ஒவ்வொரு ஆளும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதிக்குள் அத்தகைய விண்ணப்பத்தை செய்திருந்தால், அப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவுக்கு இணங்கியொழுகியவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

9. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1993 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, அந்நிய செலாவணி (மன்னிப்பு) சட்டம்

*[1993, ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

எவரேனும் ஆட்களினால் இலங்கைக்கு வெளியே கொண்டிருக்கப்படுவதும் வெளிப்படுத்தப்படாத இலாபங்களையும் வருமானத்தையும் அல்லது மொத்த விற்பனை வரவைக் குறிப்பதுமான அல்லது செலாவணிக்கட்டுப்பாட்டதிகாரிக்கு வெளிப்படுத்தப்படாததுமான ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தை இலங்கைக்கு அனுப்பும் அல்லது கொண்டு வரும் ஆட்களுக்கு வருங்காலத்தில் அத்தகைய ஆட்கள் வரிச்சட்டங்களுக்கும் செலாவணிக் கட்டுப்பாடு தொடர்பிலான சட்டங்களுக்கும் முற்றாக இணங்கியொழுகச் செய்யும் நோக்கத்துடன் அத்தகைய ஆட்களுக்கு வரிச்சலுகைகளுக்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்தகைய சட்டங்கள் தொடர்பிலான தவறுகளுக்கான குற்ற வழக்குகளுக்கு எதிராக அத்தகைய ஆட்களுக்கு நட்டோத்திரவாதம் அளிப்பதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, அந்நிய செலாவணி (மன்னிப்பு) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இச்சட்டமானது, (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கைக்கு வெளியே ஏதேனும் இயைபான வெளிநாட்டு நாணயத்தை வைத்திருப்பவரும் அத்துடன் -

(அ) (i) அத்தகைய நாணயத்தை வர்த்தக வங்கியொன்றின் ஊடாக 1991, நவம்பர் 12 ஆம் தேியன்று அல்லது அதற்குப்பின்னர், ஆனால் 1993, திசெம்பர் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கைக்கு அனுப்புபவருமான; அல்லது

(ii) அத்தகைய நாணயத்தை, அங்கீகரிக்கப்பட்ட உள்ளீட்டுத் துறைமுகமொன்றில் அவர் இலங்கைக்கு உள்ளிடுவதன் மீது 1991, நவம்பர் 12 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1993, மார்ச் 5 ஆம் தேதிக்கு முன்னர் கொண்டுவந்து, அத்தகைய நாணயம் தொடர்பில் சுங்கக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளிப்படுத்துகையொன்றைச் செய்பவருமான; அத்துடன்

(ஆ) அவ்வாறு அனுப்பப்பட்ட அல்லது கொண்டுவரப்பட்ட நாணயத்தைக் குறித்தொதுக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றில் இலங்கையிலுள்ள ஏதேனும் வர்த்தக வங்கியில் அவரது பெயரில் ஆரம்பிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் வைப்பீடு செய்பவருமான,

எவரேனும் ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) எந்த ஆள் தொடர்பில் 1991, நவம்பர் 12 ஆம் தேதியன்று -

(i) அந்த ஆளுக்கு, 1991, நவம்பர் 12 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன் ஏற்பட்ட அல்லது திரண்ட அல்லது எந்த ஆளினால் பெறப்பட்ட, விடயத்திற்கேற்ப எவையேனும் இலாபங்களும் வருமானமும் அல்லது மொத்த விற்பனை வரவு தொடர்பில் அப்போதைக்கு வருமான வரி விதிப்பனவிற்கு ஏற்புடைத்தான சட்டத்தின்கீழ் அல்லது 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழ் அல்லது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச்சட்டத்தின்கீழ் செலுத்தற்பாலதான வரியின் சார்த்துரைக்கப்பட்ட அல்லது சந்தேகிக்கப்பட்ட ஏதேனும் தட்டிக் கழித்தலுக்காக ;

(ii) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்புச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் சார்த்துரைக்கப்பட்ட அல்லது சந்தேகிக்கப்பட்ட மீறுகைக்காக.

ஏதேனும் புலனாய்வு முடிவுறாதிருக்கின்றதோ, அந்த எவரேனும் ஆள் தொடர்பில் இச்சட்டம் ஏற்புடையதாதல் ஆகாது.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர் அல்லாத, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வோர் ஆளும், இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் "இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆளொருவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்.

3. இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆளொருவர் –

(அ) (i) அவரது இலாபங்களையும், வருமானத்தையும் குறிக்கின்றவாறு 1992, மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு –

(அ) 1993, திசெம்பர் 31 ஆம் தேதியன்று 2 (1) (ஆ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கணக்கில் அவரது வரவிலிருக்கும்; இயைபான வெளிநாட்டு நாணயத்தின் தொகையினதும் ; அத்துடன்

(ஆ) 2 (1) (ஆ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கணக்கில் அவரால் வைப்பீடு செய்யப்பட்ட இயைபான வெளிநாட்டு நாணயத்தின், 1993, திசெம்பர் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை நாணயத்துக்கு அவரால் மாற்றப்பட்டுள்ளவாறான அத்தகைய பாகத்தினதும் ; அத்துடன்

(இ) 2 (1) (ஆ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கணக்கில் அவரால் வைப்பீடு செய்யப்பட்ட இயைபான வெளிநாட்டு நாணயத்தின், செலாவணிக்கட்டுப்பாட்டதிகாரியின் எழுத்திலான அங்கீகாரத்துடன், 1993, திசெம்பர் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கைக்கு வெளியே அனுப்பப்பட்டுள்ளவாறான அத்தகைய பாகத்தினதும்,

கூட்டுமொத்தத்தின் அத்தகைய பாகம் தொடர்பில் அப்போதைக்கு முறையே வருமான வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டத்தின் கீழ் அல்லது இப்போதைக்கு வருமானவரி மீதான மிகைவரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாக்கும் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரியை அல்லது வருமானவரி மீதான மிகைவரியை, செலுத்துவதற்கு ;

(ii) 1992, மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யபட்டவாறான அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம் அவரது எந்த நிகர செல்வத்தைக் கொள்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதோ அந்த நிகர செல்வத்தின் அத்தகைய பாகம் தொடர்பில், முறையே அப்போதைக்கு வலுவிலுள்ள செல்வவரி அல்லது செல்வவரி மீதான மிகைவரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டத்தின் கீழ் செலுத்தற்பாலதான ஏதேனும் செல்வவரி அல்லது செல்வவரி மீதான மிகைவரிக்கு ;

அல்லது

(iii) 1991 திசெம்பர் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் காலாண்டிற்கு (1) ஆம் உட்பந்தியின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம் எந்த மொத்த விற்பனை வரவிலிருந்து ஏற்பட்டதோ அல்லது பெறப்பட்டதோ அந்த மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம் தொடர்பில், 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் கீழ் அல்லது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தற்பாலதான ஏதேனும் வியாபார மொத்த விற்பனை வரவு வரிக்கு,

ஆளாதல் ஆகாது; அல்லது

(ஆ) (i) 1992, மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் -

(அ) (i) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம் அல்லது (அ) (ii) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அவரது

தேறிய செல்வத்தின் அத்தகைய பாகம் தொடர்பில் அல்லது அது சம்பந்தமாக வருமானவரி அல்லது வருமானவரி மீதான மிகைவரி அல்லது செல்வவரி அல்லது செல்வவரி மீதான மிகைவரி விதிப்பனவுக்கு அப்போதைக்கு ஏற்புடைத்தாகும் சட்டத்தின்கீழ் ; அல்லது

(ii) 1991, திசெம்பர் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் காலாண்டு தொடர்பில், (அ) (iii) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அவரது மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம் தொடர்பில், 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டம் அல்லது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் கீழ்; அல்லது

(iii) எச்செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் தொடர்பில், 2 (1) (ஆ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றில் அவரால் வைப்பீடு செய்யப்பட்ட எந்த இயைபான வெளிநாட்டு நாணயம் முழுவதினதும் அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பில் அவரால் விவரத்திரட்டு எதுவும் கொடுத்துதவப்படவில்லையோ அல்லது எந்த இயைபான வெளிநாட்டு நாணயம், செலாவணிக் கட்டப்பாட்டுச் சட்டத்தின்கீழ் அவரால் கொடுத்துதவப்பட்டிருக்கவில்லையோ இந்த இயைபான வெளிநாட்டு நாணயம் முழுவதினதும் அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பில் அச்செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ்,

ஏதேனும் தவறுக்கான குற்றவழக்கொன்றுக்கு அல்லது தண்டப் பணமொன்றுக்கு ஆளாதல் ஆகாது.

4\. இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எதுவும் –

(அ) (i) அப்போதைக்கு வருமான வரி அல்லது வருமான வரி மீதான மிகை வரி அல்லது செல்வவரி அல்லது செல்வவரி மீதான மிகைவரி விதிப்பனவு தொடர்பிலான சட்டத்தின்; அல்லது

(ii) 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் அல்லது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின்;

ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்டு, அத்தகைய ஏதேனும் சட்டத்தின் ஏற்பாட்டின்கீழ் இறுதியானதாயும், முடிவானதாயும் உள்ள ஏதேனும் மதிப்பீட்டை ;

(ஆ) 1991, நவம்பர் 12 ஆம் தேதிக்குமுன், இச்சட்டம் ஏற்புடைத்தாகும் எவரேனும் ஆள்மீதும் அத்துடன் அவரால் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் ஏதேனும் மீறுகை தொடர்பிலும் விதிக்கப்பட்டு, அத்தகைய ஏதேனும் சட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் இறுதியானதாயும் முடிவானதாயும் உள்ள ஏதேனும் தேவைப்பாட்டை ; அல்லது

(இ) அத்தகைய ஏதேனும் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் இறுதியானதும் முடிவானதாயுமுள்ள வேறு ஏதேனும் கருமத்தை,

மீளாய்வு செய்வதற்கு அதிகாரமளிப்பதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

5. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அல்லது ஏதேனும் வர்த்தக வங்கியின் அல்லது இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் அல்லது ஊழியர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தை நிர்வகிக்கையில் அவரது அறிவுக்கு எட்டக்கூடிய எல்லா கருமங்கள் தொடர்பிலும் இரகசியத்தைப் பேணுதலும் பேண உதவுதலும் வேண்டும் என்பதுடன், 2(1) (ஆ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கொன்று தொடர்பில், எத்தகையதுமான ஏதேனும் தகவலை எவரேனும் தனியாளுக்கு, ஏதேனும் கூட்டுத்தாபனத்துக்கு, வங்கிக்கு, நீதிமன்றத்துக்கு, நிறுவனத்திற்கு, அமைப்பிற்கு, திணைக்களத்திற்கு, இலங்கை அரசாங்கத்தின் ஏதேனும் அலுவலருக்கு, முகவருக்கு, பிரதிநிதிக்கு அல்லது எவரேனும் சட்ட ஆளுக்கு அல்லது இயற்கையான ஆளுக்குக் கொடுத்தலோ, வெளிப்படுத்தலோ அல்லது வெளிவிடுதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், விடயத்திற்கேற்ப ஆணையாளர் தலைமையதிபதி, செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரி அல்லது வர்த்தக வங்கியொன்றின் ஓர் அலுவலர் அல்லது ஊழியர் –

(i) அத்தகைய கருமம் அல்லது தகவல் எந்த ஆள் தொடர்பிலானதோ, அந்த ஆளினால் ;

(ii) போதைப் பொருள் அல்லது விமானக்கடத்தல் மீதான சர்வதேச சமவாயமொன்றுக்குப் பயனளிக்கும் ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட எவையேனும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில், அச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் ;

(iii) பிரிவு 2(1) (ஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கணக்கிலுள்ள பணங்கள் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான தவறொன்றாக அமையும் செயலொன்றை முன்னெடுத்துச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள அல்லது பயன்படுத்தப் படுகின்றன என்ற ஏதுவின் மீது அதற்கான விண்ணப்பமொன்றின் மீது செய்யப்பட்ட உயர்நீதிமன்றக் கட்டளையொன்றினால் ; அல்லது

(iv) பிரிவு 2 (1) (ஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட கணக்கொன்றை வைத்திருப்பவரால் அல்லது அவருக்கெதிராக அத்தகைய கணக்கினின்றெழும் வங்கித் தொழில் கொடுக்கல் வாங்கல் ஒன்றின் தொடர்பில் வர்த்தக வங்கியொன்றினால் அல்லது வங்கிக்கெதிராகத் தொடரப்பட்ட எவையேனும் சட்ட நடவடிக்கைகளில் நீதிமன்றக் கட்டளையொன்றினால்,

அவ்வாறு செய்யுமாறு அவர் தேவைப்படுத்தப்படின், இச்சட்டத்தை நிர்வகிக்கையில் அவரது அறிவுக்கு எட்டியுள்ள ஏதேனும் கருமத்தை அல்லது தகவலை அத்தகைய ஆளுக்கு அல்லது நீதிமன்றத்திற்குத் தெரிவித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயல்படுகின்ற உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அல்லது இலங்கை மத்திய வங்கியின் அல்லது ஏதேனும் வர்த்தக வங்கியின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கு மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

6. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

7. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

“வர்த்தக வங்கி” என்பது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று என்று பொருள்படும் ;

“ஆணையாளர் தலைமையதிபதி”, “வெளிநாட்டு நாணயம்”, “தேறிய செல்வம்”, “இலாபங்களும் வருமானமும்”, “வரிமதிப்பீட்டாண்டு” என்பன 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் முறையே அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்டவாறான பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

“செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரி” என்பது பணச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரி என்று பொருள்படும் ;

“குறித்தொதுக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்” என்பது பின்வரும் வெளிநாட்டு நாணயங்களுள் ஏதேனும் ஒன்று என்று பொருள்படும். அதாவது, அமெரிக்கன் டொலர், ஸ்டேர்லிங் பவுண், ஜேர்மன் மார்க், சுவிஸ் பிராங்க், ஜப்பானிய யென், அவுஸ்திரேலியன் டொலர், சிங்கப்பூர் டொலர், பிரான்ஸ் பிராங்க், கனடியன் டொலர், டென்மார்க் குரோனர், நெதர்லாந்து கில்டர், சுவீடன் குரோனர், ஹொங்கொங் டொலர் அத்துடன் செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியால் எழுத்தில் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தையும் உள்ளடக்கும் ;

“செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்” என்பது (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்று பொருள்படும் ;

"வெளிநாட்டு நாணயக் கணக்கு"என்பது இலங்கை மத்திய வங்கியால் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க ஆரம்பிக்கப்பட்டதான இலங்கையிலுள்ள ஏதேனும் வர்த்தக வங்கியின் உள்ளூர் வங்கித் தொழிற்கூறு என்று பொருள்படும் ; ஆனால் வர்த்தக வங்கியொன்றின் வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்கூறில் ஆரம்பிக்கப்பட்ட கணக்கொன்றை உள்ளடக்க மாட்டாது ;

"ஆள்" என்பது ஒரு கம்பெனியை, ஆட்கள் குழுவொன்றை அல்லது பங்காண்மையொன்றை உள்ளடக்கும் ;

"இயைபான வெளிநாட்டு நாணயம்" என்பது ஆளொருவர் தொடர்பில் 1992, நவம்பர் 12 ஆம் தேதியன்று அத்தகைய ஆளினால் இலங்கைக்கு வெளியே வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் என்று அல்லது எந்த வெளிநாட்டு நாணயமாக 1991, நவம்பர் 12 ஆம் தேதியன்று இலங்கைக்கு வெளியே அத்தகைய ஆளினால் வைத்திருக்கப்பட்ட அசைவுள்ள ஆதனம் மாற்றப்பட்டு -

(அ) (i) 1991, நவம்பர் 12 ஆம் தேதிக்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் காலப்பகுதியின்போது அத்தகைய ஆளினால் பெறப்பட்டதும் அல்லது அவருக்கு ஏற்பட்டதும் அல்லது திரண்டதுமான; அத்துடன்

(ii) எந்த இலாபங்களும் வருமானமும் தொடர்பில் அவரால் விவரத்திரட்டு எதுவும் கொடுத்துதவப்பட்டிருக்கவில்லையோ அல்லது அவரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லையோ அல்லது அப்போதைக்கு வருமான வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டத்தின் கீழ் வருமான வரிக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லையோ; அத்துடன்

(iii) அப்போதைக்கு வரிவிதிப்பனவுக்கு ஏற்புடைத்தான சட்டத்தின்கீழ் வருமான வரி அறவிடப்படற்பாலனவுமான,

அந்த இலாபங்களும் வருமானமுமாயிருக்கின்றவையும் அல்லது அவற்றிற்கு ஏற்றிக் கூறப்படற்பாலனவையுமான வெளிநாட்டு நாணயம் என்று பொருள்படும், ஆனால் -

(அ) செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியால் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரத்தின்கீழ் இலங்யிலிருந்து அவரால் செய்யப்பட்ட எவையேனும் ஏற்றுமதிகளுக்கு வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படற்பாலதான ஏதேனும் தொகையை ;

(ஆ) அவரால் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே ஆற்றப்பட்ட சேவைகளுக்கு வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படற்பாலதும் 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை சட்டத்தின் அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டுச்

சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கொடுத்துதவப்பட்ட விவரத்திரட்டொன்றில் வெளிப்படுத்தப்பட்டதுமான ஏதேனும் தொகையை ;

(இ) ஏதேனும் கடனை அறவிடுவதற்கு அல்லது ஏதேனும் குடியியல் பொறுப்பை வலுவுக்கிடுவதற்கு இலங்கைக்கு வெளியே உள்ள ஏதேனும் நீதிமன்றத்தின் ஏதேனும் தீர்வையின் அல்லது எழுத்தாணையின் மீது வெளிநாட்டு நாணயத்தில் வருமதியான ஏதேனும் தொகையை ;

உள்ளடக்கமாட்டாது; அல்லது

(ஆ) கொடை, நன்கொடை, மரபுரிமை என்ற வகையில் அல்லது வேறுவகையில் அவரால் இலங்கைக்கு வெளியே கொள்ளப்பட்டதும் அத்துடன் எந்த ஆதனம் தொடர்பில் அவரால் விவரத்திரட்டு எதுவும் கொடுத்துதவப்படவில்லையோ அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் அவரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விவரத்திரட்டில் வெளிப்படுத்தப்படவில்லையோ அந்த ஆதனத்துக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான இலாபங்களும் வருமானம் ஆக அல்லாத அல்லது அத்தகைய இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் ஏற்றிக் கூறப்படற்பாலதுமானதாக அல்லாத ;

வெளிநாட்டு நாணயம் என்று பொருள்படும் ;

"அப்போதைக்கு வருமானவரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டம்" என்பது 1979 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் என்று பொருள்படும்;

"அப்போதைக்கு வருமானவரிமீதான மிகைவரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டம்" என்பது 1982 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, வருமான வரி மீதான மிகைவரிச் சட்டம், 1984 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரிச் சட்டம், 1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரிச் சட்டம் என்று பொருள்படும்;

"அப்போதைக்கு செல்வவரி அல்லது செல்வவரி மீதான மிகைவரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டம்" என்பது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம், 1982 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, செல்வவரி மீதான மிகைவரிச் சட்டம், 1989 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, செல்வவரி மீதான மிகைவரிச் சட்டம் என்று பொருள்படும்;

"மொத்த விற்பனை வரவு" அத்துடன் "காலாண்டு" என்பன 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தால் முறையே அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

# 1993 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

(1993, ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

**1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவானது அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பந்தியின் உட்பந்தி (LXI) என்பதில் "இறப்பர் ஆராய்ச்சிச் சபையின் அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இறப்பர் ஆராய்ச்சிச் சபையின் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பந்தியின் (LXII) என்னும் உட்பந்தியில், "புத்தசாசன நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட புத்தசாசன நிதியத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "புத்தசாசன நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட புத்தசாசன நிதியத்தின்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பந்தியின் (LXII) என்னும் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(LXIII) 1988 ஆம் ஆண்டின் 77 ஆம் இலக்க, ஜே. ஆர். ஜயவர்தன நிலையச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஜே. ஆர் ஜயவர்தன நிலையத்தின் ; அத்துடன்

(LXIV) 1981 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இலங்கை வழங்கல், பொருட்கள் முகாமைத்துவ நிறுவகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை வழங்கல், பொருட்கள் முகாமைத்துவ நிறுவகத்தின்,"

3. முதன்மைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அலுவலக முறையான வேதனாதிகளும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "1993 மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான அலுவலக முறையான வேதனாதிகளும்" எனும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் ;-

"(ஆஆ) 1993, ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு -

(i) திரட்டு நிதியத்திலிருந்து எவரேனும் தனியாளுக்கு ;

(ii) திரட்டு நிதியத்திலிருந்து ஏதேனும் கூட்டுத்தாபனத்திற்கு பாராளுமன்றத்தினால் ஆண்டுதோறும் முழுவதாகவோ பகுதியளவிலோ வாக்களிக்கப்பட்ட பணத் தொகையிலிருந்து வேதனாதிகளையும், ஓய்வூதியத்தையும் அல்லது ஊதியத்திலிருந்தான இலாபங்களையும், செலுத்துவதான பகிரங்க கூட்டுத்தாபனம் ஒன்றாகவுள்ள அத்தகைய ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் ஊழியருக்கு ;

(iii) அரசியலமைப்பின் 154 ஆ என்னும் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட ஏதேனும் மாகாணத்திற்கான ஆளுநருக்கு ;

(iv) ஏதேனும் மாகாண சபையின் எவரேனும் உறுப்பினருக்கு ;

(v) ஏதேனும் மாகாண சபையின் எவரேனும் ஊழியருக்கு அல்லது ஏதேனும் மாகாணப் பகிரங்க சேவையின் எவரேனும் அலுவலருக்கு ;

(vi) ஏதேனும் உள்ளூரதிகார சபையின் எவரேனும் உறுப்பினருக்கு ;

(vii) ஏதேனும் உள்ளூரதிகார சபையின் எவரேனும் ஊழியருக்கு ;

(viii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகத்தின் ஊழியர் ஒருவருக்கு ;

(ix) 1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைக் கொள்கைக்கற்கைகள் நிறுவனத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் ஊழியர் ஒருவருக்குச்

செலுத்தப்பட்டதான அலுவலக முறையிலான வேதனாதிகள், அல்லது 4 (1) ஆம் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஊழியத்திலிருந்துவரும் அத்தகைய ஏதேனும் ஓய்வூதியமும் அல்லது அத்தகைய எவையேனும் இலாபங்களும் ;

"(ஆஆஆ) 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னராயினுஞ்சரி பின்னராயினுஞ்சரி, (ஆஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லாத வேறு ஏதேனும் பகிரங்கக் கூடடுத்தாபனத்தின் ஊழியர் ஒருவராக, எவரேனும் தனியாளினால் அல்லது வேறு எவரேனும் தனியாளினால் புரியப்பட்ட கடந்தகால சேவைகள் தொடர்பில் அத்தகைய, தனியாளினால் பெறப்பட்டவாறான 4 (1) ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஊழியத்திலிருந்துவரும் அத்தகைய ஓய்வூதியமும் அல்லது அத்தகைய எவையேனும் இலாபங்களும்."

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "16ஆ ஆம், 16இ ஆம், 17ஆம், 17அ ஆம்" என்னும் இலங்கங்களுக்குப் பதிலாக "16ஆ ஆம், 16இ ஆம், 16ஈ ஆம், 17 ஆம், 17அ ஆம்" என்னும் இலக்கங்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், அப்பந்தியின் இறுதியில் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

"(XXII) எவரேனும் ஆளினால் அத்தகைய ஆள் வைத்திருக்கும் ஏதேனும் திறைசேரி உண்டியலின் இரண்டாந்தரச் சந்தை விற்பனையின் மீதும்".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஈஈஈ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1993 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உஉஉ) பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்

பின்னர் ஆனால் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;
(2) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும். உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(iiஅ) 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம், லொறி, வசுவண்டி, டிராக்டர், ட்ரெய்லர் அல்லது அலுவலகத் தளபாடம், அவரால் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது புரியப்பட்ட ஏதேனும் வியாபாரத்தில், தொழிலில் உயர் தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக அதனைக் கொள்ளலுக்கான விலையின் மீது ஆண்டொன்றுக்கு பதினாறும் மூன்றில் இரண்டு சதவீதம் ;"

(3) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியின் "அதன் நிருமாணம் 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் முடிவடைந்ததான" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "அதன் நிர்மாணம் 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் முடிவடைந்ததான" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(4) அப்பந்தியில் (iii) ஆம் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(iiiஅ) அத்தகைய ஆளினால் நிர்மாணிக்கப்பட்டதும் அதன் நிர்மாணம், 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் முடிவுற்றதுமான ஏதேனும் தகைமையளிக்கும் கட்டடம், அவரால் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது புரியப்பட்ட ஏதேனும் வியாபாரத்தில், தொழிலில் உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் அது பயன்படுத்தப்பட்டதன் காரணமாக அதனை நிர்மாணிப்பதற்கான செலவின் மீது ஆண்டொன்றுக்கு ஆறும் மூன்றில் இரண்டு சதவீதத்திலான விடுதொகையொன்று ;"

(5) அப்பந்தியின் (iv) ஆம் உட்பந்தியில் "1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டதும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டதும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(6) அப்பந்தியில் (iv) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

("iv அ) 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டதும் 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, வதிவிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சி ஆதனமொன்றில் அடங்கியுள்ள வதிவற்ற இருப்பிட வசதியின் ஏதேனும் கூறு, அவரால் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது புரியப்பட்ட வியாபாரத்தில், தொழிலில், உயர் தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில், அது பயன்படுத்தப்பட்டதன் காரணமாக அதனைக் கொள்வதற்கான விலையின்மீது ஆண்டொன்றுக்கு ஆறும் மூன்றில் இரண்டு சதவீதத்திலான விடுதொகையொன்று."

(7) அப்பந்திக்கான காப்பு வாசகத்தில் "இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் அல்லது (ii) ஆம் உட்பந்தியில், அல்லது (iii) ஆம் உட்பந்தியில் அல்லது (iv) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் அல்லது (ii) ஆம் உட்பந்தியில் அல்லது (iiஅ) என்னும் உட்பந்தியில் அல்லது (iii) ஆம் உட்பந்தியில் அல்லது (iiiஅ) என்னும் உட்பந்தியில் அல்லது (iv) ஆம் உட்பந்தியில் அல்லது (iv அ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு. அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(இஇ) உல்லாசத்துறைத் தொழிலை மேம்படுத்துவதற்காக, 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை உல்லாசப் பிரயாணச் சபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்டதான இலங்கை உல்லாசப் பிரயாண சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்றை மேற்கொள்கையில் மாத்திரம் இலங்கைக்கு வெளியே பிரயாணம் செய்வதில் உறப்பட்ட, செலவினத்தைத் தவிர்த்து, உல்லாசப் பயணிகளுக்கான ஏதேனும் ஹோட்டலை தொழிற்படுத்தும் ஏதேனும் பொறுப்பு முயற்சி தொடர்பில் இலங்கைக்கு வெளியே பிரயாணம் செய்வதில் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் உறப்பட்ட ஏதேனும் செலவினம் ;"

(2) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் "விளம்பரம் செய்வதற்காக உறப்பட்ட செலவுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விளம்பரம் செய்வதற்காக 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியின் முன்னர் உறப்பட்ட செலவுகள்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

(3) அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியில் "ஏதேனும் ஆண்டில் 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அவரால் செய்து கொள்ளப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் ஏதேனும் ஆண்டில் அவரால் செய்து கொள்ளப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(4) அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(டட) 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் ஆண்டில் அவரால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் கீழ் :-

(i) உட்பந்தி (ii)என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட உபகரணம் தவிர்ந்த ஏதேனும் பொறி, பொறித் தொகுதி பிணைச்சல்கள் அல்லது உபகரணம் தொடர்பில் அத்தகைய உடன்படிக்கையின் கீழ் செலுத்தப்படற்பாலதான மொத்த வாடகையின் மூன்றிலொன்றுக்குச் சமமான தொகை யொன்றை மிஞ்சிய வகையில் ; அத்துடன்

(ii) ஏதேனும் மோட்டார் வாகனம், லொறி, வஸ்வண்டி, ட்ராக்டர், ட்ரெய்லர் அல்லது அலுவலக உபகரணம் தொடர்பில் அத்தகைய உடன்படிக்கையின் கீழ் செலுத்தற்பாலதான மொத்த வாடகையின் ஆறிலொன்றுக்குச் சமமான தொகையொன்றை மிஞ்சிய வகையில்

அவரால் செலுத்தப்பட்ட வாடகையின் அத்தகைய பாகம்."

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "(ட) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியல்லாத வேறு அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(ட) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியல்லாத வேறு அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியில்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "(iii) ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(iii) ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 இ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 32இஇ என்னும் பிரிவொன்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

இலங்கைக்கு வெளியே ஏதேனும் கம்பனிக்கு பங்காண்மைக்கு அல்லது ஆட்கள் குழுவிற்கு செலுத்தற்பாலதாகும் புனைபுரிமைத் தொகை மீதான வருமானவரி வீதம்

32 இஇ. இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் கம்பனிக்கு, பங்குடைமைக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு இலங்கையிலுள்ள எவரேனும் ஆளினால் அத்தகைய கம்பனிக்கு, பங்குடைமைக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு வந்துசேர்வதாகக் கருதப்பட்டதான புனைவுரிமைத் தொகையாக 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு செலுத்தற்பாலதான மொத்த புனைவுரிமைத் தொகையானது, இச்சட்டத்தின் வேறேதும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பதினைந்து சதவீதம் என்ற வீதப்படி வருமானவரி அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்."

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது

(1) அப்பந்தியின் (vi) ஆம் உட்பந்தியில் "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு"என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

(2) அப்பந்தியின் (vi) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(vii) 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எந்தக் கம்பனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், இரண்டு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து எழுநூற்று எழுபத்தெட்டு ரூபாவை விஞ்சாதிருக்கின்றதோ அந்தக் கம்பனி."

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33இ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியின் அதன் (ii) ஆம் அம்சத்தை உடனடுத்துப் பின்வரும் அம்சத்தை உட்புகுத்துதல் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(iiஅ) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் 40 சத வீதப்படி முற்பணக் கம்பனி வரி செலுத்தப்பட்டுள்ளதோ அப்பங்கிலாபங்கள்;"

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், அதன் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலம் :-

"(iiஅ) பெறப்பட்டதான எப்பங்கிலாபங்கள் தொடர்பில் முற்பணக் கம்பனிவரி 40 சத வீதப்படி பெறப்பட்டுள்ளதோ அப்பங்கிலாபங்கள்;" அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் "(ஈ) என்னும் பந்தியின் (ii) ஆம் அல்லது (iii) ஆம் அல்லது (iv) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "(ஈ) என்னும் பந்தியின் (ii) ஆம் அல்லது (iiஅ) என்னும் அல்லது (iii) ஆம் அல்லது (iv) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

15. முதன்மைச் சட்வாக்கத்தின் 84அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அதற்குச் சமமான தொகையைக் கொண்ட நிவாரணத்திற்கு உரித்துடையவராதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதற்குச் சமமான தொகையை கொண்ட நிவாரணத்திற்கு உரித்துடையவராதல் வேண்டும். ஆயினும் எவ்வாறாயினும் அத்தகைய ஆள் அல்லது அத்தகைய பங்குடைமை, அத்தகைய வேறு நாட்டில் அத்தகைய நேரொத்த காலப்பகுதிக்கு அத்தகைய இலாபங்களினதும் வருமானங்களினதும் தொடர்பில் வருமானவரி செலுத்துவதற்கு ஆளாகாதவிடத்து, அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்கான அத்தகைய இலாபங்களினதும் வருமானத்தினதும் தொடர்பில் இலங்கையில் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின் தொகைக்குச் சமமான நிவாரணத்துக்கு அத்தகைய ஆள் அல்லது பங்குடைமை உரித்துடையவராதல் வேண்டும்."

(2) (i) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் :-

(அ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின் (ஆ) என்னும் பந்தியில் "வெளியே பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பங்குடைமைக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வெளியே பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பங்குடைமைக்கும் ; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பந்தியில் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(iii) இலங்கையின் கட்டடக்கலை சார்ந்த, பொறியியல், கணிய மதிப்பீடு அல்லது நிர்மாண முகாமைத்துவ சேவைகளையும் அத்துடன் அவற்றிலிருந்து துணை நிலையாகக்

கூடியவாறான அத்தகைய வேறு சேவைகளையும் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வதிவற்ற எவரேனும் ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு வழங்குகின்றவரான அல்லது வழங்குவதான எவரேனும் வதிவற்ற ஆளுக்கும் அல்லது இலங்கைக்கு வெளியே பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பங்குடைமைக்கும்"

(ii) அந்த (2) ஆம் உட்பிரிவில் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "(அ) என்னும் பந்தியின்(ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "(அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் அல்லது (iii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவுக்கான அட்டவணைக்குப் பதிலாக, பின்வரும் அட்டவணையை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"அட்டவணை"

| நிரை I<br>திறைசேரி உண்டியல் | நிரை II<br>வரி வீதம் |
|---|---|
| எந்தத் திறைசேரி உண்டியல் அது வழங்கப்பட்ட தேதியின் பின்னர் பன்னிரண்டு மாதங்களில் முதிர்ச்சியடைகின்றதோ அந்த ஏதேனும் திறைசேரி உண்டியல். | அத்திறைசேரி உண்டியலின் முகப் பெறுமதியின் 2 சத வீதம். |
| எந்தத் திறைசேரி உண்டியல் அது வழங்கப்பட்ட தேதியின் பின்னர் ஆறு மாதங்களில் முதிர்ச்சியடைகின்றதோ அந்த ஏதேனும் திறைசேரி உண்டியல். | அத்திறைசேரி உண்டியலின் முகப் பெறுமதியின் 1 சத வீதம். |
| எந்தத் திறைசேரி உண்டியல் அது வழங்கப்பட்ட தேதியின் பின்னர் மூன்று மாதங்களில் முதிரிச்சியடைகின்றதோ அந்த ஏதேனும் திறைசேரி உண்டியல். | அத்திறைசேரி உண்டியலின் முகப் பெறுமதியின் 0.5 சத வீதம். |

17. அத்தியாயம் XVஆ என்பதனை உடனடுத்து பின்வரும் அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் "XVஇ" என்றாற்போன்று பயனுறுதல் வேண்டும் :-

"அத்தியாயம் XVஇ"

ஊழியர்கள் தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட தொழில்தருநரால் செலுத்தப்பட வேண்டிய வரி தொடர்பிலான விசேட ஏற்பாடுகள்.

ஊழியரின் வருமானவரி குறித்துரைக்கப்பட்ட தொழில் தருநர்களால் செலுத்தப்பட வேண்டும் என்பது

113க. (i) இரண்டாம் பிரிவிலும், அத்தியாயங்கள் XIV அத்துடன் XV என்பனவற்றிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில்தருநரின் ஊழியரின் அலுவலக முறையான வேதனாதிகளுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான வருமான வரியானது அத்தகைய தொழில் தருநரால் வேறு வகையாக செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரிக்கு மேலதிகமாக அத்தகைய தொழில் தருநரால் செலுத்தப்பட வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனும் குறித்துரைக்கப் பட்ட தொழில்தருநரால் செலுத்தப்படற் பாலதான ஏதேனும் வருமானவரி, மாதாந்த தவணைகளில் செலுத்தப்படற் பாலதாதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க, பிரிவு 98, பிரிவு 99, பிரிவு 102, பிரிவு 105, பிரிவு 106, பிரிவு 107, பிரிவு 110, பிரிவு 112 என்பனவற்றின் ஏற்பாடுகள் அத்தகைய தொழில்தருநரால் செலுத்தப்படற்பாலதான அத்தகைய வருமான வரிக்கு ஏற்புடையதாதலும் வேண்டும். ஆயினும், மேற்கூறப்பட்ட பிரிவுகளில் காணப்படும் "கழித்தல்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "செலுத்துதல்" என்னும் சொல்லும், "ஊதியம்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "அலுவலக முறையான வேதனாதிகள்" என்னும் சொற்களும் என்றாற்போன்று திரிபுகளுக்கு அமைவாக பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.

எந்த ஊழிய வருமானம் தொடர்பில் வரி செலுத்தப் படுகின்றதோ அந்த ஊழிய வருமானத்தை மொத்த நியதிச்சட்ட வருமானம் உள்ளடக்க மாட்டாது.

113ங. இருபத்தேழாம் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, எவரேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில் தருநரின் எவரேனும் ஊழியரின் மொத்த நியதிச்சட்ட வருமானமானது, எந்த ஊழியம் தொடர்பில் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு, 113க என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தொழில்தருநரால் வரி செலுத்தப் படற்பாலதாகின்றதோ, அந்த ஊழியம் தவிர்ந்த அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் ஒவ்வொரு மூலங்களிலிருந்து அவரது நியதிச் சட்ட வருமானத்தின் கூட்டுமொத்தமாதல் வேண்டும்.

31 (2) (ஐ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் தகைமையளிக்கும் கொடுப்பனவிற்கு எவரேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில் தருநரின் எவரேனும் ஊழியரின் வரிமதிப்பிடற் பாலதான வருமானத்திலிருந்து கழிப்பனவு எதுவும் செய்யப் படுதலாகாது.

113ஞ. இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் அடங்கியிருக்கும் எது எவ்வாறிருப்பினும் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில் தருநரின் எவரேனும் ஊழியரின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து, 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் (ஐ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படுவதும் அத்தகைய ஊழியரால் அந்த வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்டதுமான ஏதேனும் தகைமையளிக்கும் கொடுப்பனவு தொடர்பில் 30 (2) ஆம் பிரிவின் நோக்கங்களுக்கு கழிப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது.

113ட. இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 113க என்னும் பிரிவிற்கிணங்க எவரேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில் தருநரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியானது, அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தொழில் தருநரால் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் வியாபாரத்தின் அல்லது தொழிலின் இலாபங்களையும் வருமானத்தையும் ஆய்ந்தறிகையில் கழிப்பனவொன்றாக அனுமதிக்கப்படல் வேண்டும்.

113ண. இந்த அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக, எவரேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில்தருநரின் எவரேனும் ஊழியர் தொடர்பில் அலுவலகமுறையான வேதனாதிகளுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான வருமானவரியானது –

(i) அத்தகைய ஊழியரின் அத்தகைய வேதனாதிகளிலிருந்து நாற்பத்திரண்டாயிரம் ரூபா பணத்தொகையொன்றை கழிப்பனவுசெய்த பின்னர் அத்தகைய வேதனாதிகள்மீது இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் IIஉ என்னும் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களின்படி கணிப்பிடப்பட்ட வருமான வரியின் மேலான ;

(ii) ஆயிரத்து எண்ணூறு ரூபாவை

விஞ்சுதொகையாதல் வேண்டும்.

113த, நான்காம் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், குறித்துரைக்கப்பட்ட எவரேனும் தொழில்தருநரின் எவரேனும் ஊழியரின் அலுவலக முறையான வேதனாதிகள் தொடர்பிலானதும் அத்தகைய தொரில்தருநரால் செலுத்தப்படுகின்றதுமான வருமானவரி, அத்தகைய ஊழியரின் ஊதியத்திலிருந்தான இலாபங்களின் பாகமாக அமைவதாகக் கருதப்படுதலாகாது.

இந்த அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக -

"ஊழியர்" என்பது எவரேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில்தருநர் தொடர்பில் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட தொழில் தருநரின் பணிப்பாளர் சபையின் பணிப்பாளர் ஒருவரை உள்ளடக்கும்.

"குறித்துரைக்கப்பட்ட தொழில்தருநர்" என்பது பிரிவு 9 (1) (ஆஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்படும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றைத் தவிர்ந்த பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்று எனப் பொருள்படும்."

18. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாவது அட்டவணை அவ்வட்டவணையின் III ஆம் பாகத்துக்குப் பதிலாகப் பின்வரும் பாகத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"பாகம் III

இலங்கைப் பிரசை அல்லாதவரும் 67 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் கீழ் வதிவற்ற ஒருவராகக் கருதப்படுபவருமான எவரேனும் தனியாளுக்கு ஏற்புடைத்தான வருமான வரி வீதங்கள் -

1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு 25 சத வீதம்".

1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு 15 சதவீதம்.

19. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அட்டவணையின் 1 ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் பாகத்தை இடுவதன் மூலமும்

"பாகம் I

பாகம் II இல் அல்லது பாகம் III இல் அல்லது பாகம் IV இல் அல்லது பாகம் IVஅ என்பதில் அல்லது பாகம் IVஆ என்பதில் அல்லது பாகம் V என்பதில் அல்லது பாகம் Vஅ என்பதில் அல்லது பாகம் Vஆ என்பதில் அல்லது பாகம் VI இல் அல்லது பாகம் VIII இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு கம்பனி தவிர்ந்த இலங்கையில் வதிவுள்ள கம்பனி அல்லது பாகம் IX இல் குறிப்பீடு செய்யப்பட்ட (இலங்கை மத்திய வங்கி தவிர்ந்த) பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள் அல்லது பாகம் X இல் குறிப்பீடு செய்யப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பு அல்லது பரஸ்பர நிதியம்,

1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டுக்கு வருமான வரிவீதம் - கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின்மீது 50 சத வீதம்." 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியில் தொடங்கும் வரிமதிப்பீட்டு ஆண்டுக்கு வருமான வரி வீதம் கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மீது 45 சத வீதம்."

(2) அட்டவணையின் பாகம் IVஆ என்பதில் "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டிற்கும் வருமானவரி வீதம்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு வருமான வரி வீதம் –" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(3) அட்டவணையின் IVஆ என்னும் பாகத்தை உடனடுத்து பின்வரும் பாகத்தை உட்புகுத்துவதன் மூலமும் -

"பாகம் IVஇ

**சிறிய கம்பனி**

1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும் வருமானவரி வீதம் -

(1) கம்பெனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானம் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாததாயின் -

கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின்மீது 33 $^1/_3$ சத வீதம்.

(2) கம்பெனியின் வரிவிதிக்கற்பாலதான, வருமானம் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சுவதும் இரண்டு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து எழுநூற்று எழுபத்தெட்டு ரூபாவை விஞ்சாததுமாயின், வரியானது -

(i) இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவின் 33 $^1/_3$ சதவீதத்துக்குச் சமமான தொகையொன்றினதும், அத்துடன்

(ii) கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானம் எந்தத் தொகையால் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சுகின்றதோ அந்தத் தொகையினதும்;

கூட்டுமொத்தமாதல் வேண்டும்."

(4) அட்டவணையின் Vஆ என்னும் பாகத்தில் "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் விலைகோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பெனியும், எக்கம்பெனி தொடர்பில் அந்த வரிமதிப்பீட்டாண்டில் இறுதித்தினத்தன்று," என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் விலைகோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பெனியும் எக்கம்பனி தொடர்பில் 1993 மார்ச் 31 ஆம் தேதியன்று உள்ளவாறு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(5) அட்டவணையின் VI ஆம் பாகத்தில் "1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(6) அட்டவணையின் பாகம் VII இல் "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(7) அட்டவணையின் பாகம் IX இல் "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(8) அட்டவணையின் பாகம் X இல் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1992 ஏப்பில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(9) பாகம் X என்பதனை உடனடுத்து பின்வரும் பாகத்தை உட்புகுத்துவதன் மூலமும் –

"பாகம் XI

(இலங்கை மத்திய வங்கி தவிர்ந்த) கூறு நம்பிக்கைப் பொறுப்பும், பரஸ்பர நிதியமும் அத்துடன் பகிரங்கக் கம்பனியும் உட்பட, ஆனால் பாகம் IVஇ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட சிறிய கம்பனி உட்படாத கம்பனி,

1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும் –

கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான
வருமானத்தின் மீது 40 சத வீதம்".

20. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அட்வணையின் 1 ஆம் பந்தியில், "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்பதிலிருந்து அப்பந்தியின் முடிவுவரையிலுள்ள சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் :-

"1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு–
வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் முதலாவது 25,000 ரூபா மீது
30 சத வீதம்.

வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் முதலாவது 25,000 ரூபா மீது
30 சதவீதம்

வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 25,000 ரூபா மீது –
40 சத வீதம்.

வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மிகுதியின் மீது –
45 சதவீதம்.

1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு –

வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் முதலாவது 25,000 ரூபா மீது –
30 சதவீதம்

வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மிகுதியின் மீது –
40 சத வீதம்."

(2) அட்டவணையின் II ஆம் பந்தியில் –

(i) அப்பந்தியின் (இ) என்னும் உட்பந்திக்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :-

"(இ) 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு –

(i) வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மீது –
45 சத வீதம்.

(ii) இலாபங்களின் மிகுதியின் மீது – அவற்றிலிருந்து (i) ஆம் பந்தியின் கீழ் செலுத்தற்பாலதான வரியைக் கழித்த பின்னர்
25 சத வீதம்"

(ii) அப்பந்தியின் (இ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ஈ) 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு –

(i) வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மீது –
30 சதவீதம்

(ii) இலாபங்களின் மிகுதியின் மீது, அவற்றிலிருந்து (i) ஆம் பந்தியின்கீழ் செலுத்தற்பாலதான வரியைக் கழித்த பின்னர் 25 சதவீதம்."

21. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஏழாம் அட்டவணை இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :-

"ஏழாம் அட்டவணை

பிரிவு 33 அ (1)

1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும் முற்பணக் கம்பனி வரி வீதங்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(i) சிறிய கம்பனியொன்றினால் செய்யப்படும் தகைமைபெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின்மீது –
25 சத வீதம்.

(ii) விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றால் அல்லது மக்கள் கம்பனியொன்றால் செய்யப்படும் தகைமை பெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது –
33 1/3 சத வீதம்

(iii) கூறுநம்பிக்கைப் பொறுப்பு ஒன்றினால் அல்லது பரஸ்பர நிதியத்தால் அல்லது ஒரு சிறிய கம்பனியைத் தவிர்ந்த வேறு கம்பனி ஒன்றினால் அல்லது விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றினால் அல்லது மக்கள் கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமைபெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது –
50 சத வீதம்.

1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு முற்பணக் கம்பனி வரிவீதங்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(i) சிறிய கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமை பெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குக் சமமான தொகைமீது - 25 சத வீதம்.

(ii) விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றினால் அல்லது மக்கள் கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமை பெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குக் சமமான தொகையின்மீது - 33 1/3 சத வீதம்.

(iii) கூறுநம்பிக்கைப் பொறுப்பு ஒன்றினால் அல்லது பரஸ்பர நிதியத்தால் அல்லது சிறிய கம்பனியொன்றைத் தவிர்ந்த வேறு கம்பனியொன்றினால் அல்லது விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றினால் அல்லது மக்கள் கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமை பெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது - 40 சத வீதம்.

1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டிற்கும் முற்பணக் கம்பனி வரிவீதங்கள் வருமாறு :-

(i) சிறிய கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமைபெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது - 25 சத வீதம்.

(ii) கூறுநம்பிக்கைப் பொறுப்பு ஒன்றினால் பரஸ்பர நிதியத்தால் அல்லது ஏதேனும் சிறிய கம்பனி தவிர்ந்த கம்பெனியால் செய்யப்பட்ட தகைமை பெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகை மீது - 33 1/3 சத வீதம்."

22. (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஈஈஈ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனி 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் அமைச்சரால் அங்கீகரிக்கப்படுமிடத்தும், அத்துடன் அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவித்தல், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஒரு மாததத்திற்குள் கசெற்றில் வெளியிடப்படுமிடத்தும் அத்தகைய கம்பனியானது, எல்லா நோக்கங்களுக்காகவும் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அங்கீகரிக்கபட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்தின் 113அ என்னும் பிரிவிற்கு இச்சட்டத்தின் 16 ஆம் பிரிவால் திருத்தப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

23. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1993 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் (திருத்தச்) சட்டம்

*[1993 செத்தெம்பர் மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

## 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் சட்டத்தின் 27 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டின் 9 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

"(1) இப்பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ் விதித்துரைக்கப்பட்ட வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ஏதேனும் கடனின் செலுத்தப்படாத முழுப் பகுதி மற்றும் அத்தகைய கடன்மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி தொடர்பில், கமத்தொழிற் காணியின் சொந்தக் காணிப் பயிர்ச்செய்கையாளரினால் அல்லது இருப்பாட்சியாளரினால் தவணைதவறுகை செய்யப்படுமிடத்து அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படுகின்றவிடத்து அத்தகைய கமத்தொழிற் காணியின் சொந்தக் காணிப் பயிர்ச்செய்கையாளர் அல்லது இருப்பாட்சியாளர் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பணத்தொகை தொடர்பில் தவணை தவறுகை புரிந்துள்ளார் என நீதிவான் நீதிமன்றத்துக்கு அத்தகைய வங்கியானது அறிவிக்கலாம்."

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1993 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

*[1993 செத்தெம்பர் மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைத் திருத்துவதற்கும் அத்துடன் குறித்த சில வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீளப் பெறுவதற்காகச் செய்யப்பட்ட செயல்களைச் செல்லுபடியுடையனவையாக்குவதற்கும் அத்துடன் அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்குமான ஒரு சட்டம்**

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கமநலச் சேவைகள், (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதற்குப் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க கமநலச் சேவைகள் சட்டத்தின் 66 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் அத்துடன் 1979 திசெம்பர் 14 ஆம் தேதிய 66/14 ஆம் இலக்க, அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதுமான 1979 ஆம் ஆண்டின் 1 இலக்க, கமநலச் சேவைகள் ஒழுங்குவிதிகள் அதன் 46 ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதி இடப்பட்டாற்போன்றவாறு பயனுறுதல் வேண்டும் :-

> "46. சட்டத்தின் இரண்டாம் பாகத்தின் நோக்கங்களுக்காக, "விதித்துரைக்கப்பட்ட வங்கி" எனப்படுவது பணச் சட்டத்தின் (அத்தியாயம் 422) 127 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குள்ளான எவையேனும் வங்கி நிறுவனம் என்று பொருள்படும்."

3. (1) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன், எவையேனும் காணியில் ஓர் ஈட்டை அல்லது பொறுப்பை அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒரு வங்கியால் எவரேனும் சொந்தக் காணிப் பயிர்ச்செய்கையாளருக்கு அல்லது பயிர்ச்செய்கைக் காணியொன்றின் இருப்பாட்சியாளருக்கு அதனகத்து வழங்கப்பட்ட ஒரு கடன் தொடர்பிலான அக்கறையை ஆக்கும், நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு சாதனமும், விடயத்துக்கேற்றபடி அச்சாதனம் நிறைவேற்றப்படும் அல்லது பொறிக்கப்படும் நேரத்தில் அத்தகைய வங்கியானது முதன்மைச் சட்டவாக்கத்தின் கருத்தெல்லைக்குள் குறித்துரைக்கப்பட்ட ஒரு வங்கியாக இல்லாதிருந்தது என்ற காரணத்திற்காக மட்டும், செல்லுபடியற்றதெனக் கருதப்படவோ அல்லது கருதப்பட்டதாகவோ அல்லது தகாதமுறையில் பொறிக்கப்பட்டதாகவோ கொள்ளலாகாது என்பதுடன், அத்தகைய ஒவ்வொரு சாதனமும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முன்னுரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன் குறித்துரைக்கப்பட்ட ஒரு வங்கியால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளருக்குச் செய்யப்படும் ஒவ்வோர் அறிவிப்புகளும், அத்தகைய அறிவிப்புத் தேதியன்று அத்தகைய வங்கி முதன்மைச் சட்டவாக்கத்தின் கருத்தெல்லைக்குள் விதித்துரைக்கப்பட்ட ஒரு வங்கியாக இல்லாதிருந்தது என்ற காரணத்திற்காக மட்டும் செல்லுபடியற்றதெனக் கருதப்படவோ அல்லது கருதப்பட்டதாகவோ கொள்ளப்படுதலாகாது.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதிக்குமுன் குறித்துரைக்கப்பட்ட ஒரு வங்கிக்கு எந்தவொரு தொகைப் பணத்தையும் கொடுப்பனவு செய்வதற்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்படும் ஒவ்வொரு கட்டளையும், அத்தகைய கட்டளைத் தேதியன்று அத்தகைய வங்கி முதன்மைச் சட்டவாக்கத்தின் கருத்தெல்லைக்குள் விதித்துரைக்கப்பட்ட ஒரு வங்கியாக இல்லாதிருந்தது என்ற காரணத்திற்காக மட்டும் செல்லுபடியற்றதாக இருந்துள்ளதென அல்லது இருப்பதெனக் கருதப்படுதலாகாது.

(4) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் ஒரு நீதவான் நீதிமன்றத்திற்கு குறித்துரைக்கப்பட்ட ஒரு வங்கியால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும், அத்தகைய விண்ணப்பத் தேதியன்று அத்தகைய வங்கி முதன்மைச் சட்டவாக்கத்தின் கருத்தெல்லைக்குள் விதித்துரைக்கப்பட்ட ஒரு வங்கியாக இல்லாதிருந்தது என்ற காரணத்திற்காக மட்டும் செல்லுபடியற்றதாக இருந்துள்ளதென அல்லது இருப்பதெனக் கருதப்படுதலாகாது.

(5) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர், முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிவான் நீதிமன்றம் ஒன்றுக்குக் குறித்துரைக்கப்பட்ட ஒரு வங்கியால் செய்யப்பட்ட ஒரு விண்ணப்பத்தைப் பின்பற்றி அந்நீதிமன்றத்தால் அவ்வுட்பிரிவின்கீழ் செய்யப்படும் ஒவ்வொரு கட்டளையும், அத்தகைய கட்டளைத் தேதியன்று அத்தகைய வங்கி முதன்மைச் சட்டவாக்கத்தின் கருத்தெல்லைக்குள் விதித்துரைக்கப்பட்ட ஒரு வங்கியாக இல்லாதிருந்தது என்ற காரணத்திற்காகமட்டும் செல்லுபடியற்றதாக இருந்துள்ளதென அல்லது இருப்பதெனக் கருதப்படுதலாகாது.

(6) இச்சட்டம் தொடங்கும் தேதிக்குமுன்னர், முதன்மைச் சட்டவாக்கத்தின் (29) ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட ஒரு வங்கியால் அல்லது அவ்வங்கியின் சார்பாக வழங்கப்பட்ட ஒவ்வொரு சான்றிதழும், அத்தகைய சான்றிதழ் தேதியன்று அத்தகைய வங்கி முதன்மைச் சட்டவாக்கத்தின் கருத்தெல்லைக்குள் விதித்துரைக்கப்பட்ட ஒரு வங்கியாக இல்லாதிருந்தது என்ற காரணத்திற்காக மட்டும் செல்லுபடியற்றதாக இருந்துள்ளதென அல்லது இருப்பதெனக் கருதப்படுதலாகாது.

(7) இப்பிரிவில் –

"குறித்துரைக்கப்பட்ட வங்கி" என்பது பணச் சட்டத்தின் 127 ஆம் பிரிவின் கருத்துக்குட்பட்டதான ஏதேனும் வங்கித் தொழில் நிறுவனம் என்று பொருள்படும்.

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபைச் சட்டம்

*[1993, ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**இரத்தினக்கல் கைத்தொழிலையும் ஆபரணக் கைத்தொழிலையும் அபிவிருத்தி செய்வதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும் அத்துடன் மேம்படுத்துவதற்கும், அத்தகைய அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்காக நிறுவனங்களைத் தாபிக்க ஏற்பாடு செய்வதற்கும், 1971 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனச் சட்டத்தை நீக்கஞ்செய்வதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.**

அந்நோக்கத்திற்காக அதிகாரசபையொன்றைத் தாபிப்பதன் மூலம் இரத்தினக்கற்களுக்காக அகழ்வதனையும், இரத்தினக்கற் கைத்தொழிலை ஒழுங்குபடுத்துவதும், இரத்தினக்கல் கைத்தொழிலையும், அத்துடன் ஆபரணக் கைத்தொழிலையும் அபிவிருத்தி செய்வதும், பொதுமக்கள் நலனில் உசிதமாக வந்துள்ளதாதலாலும்.

1\. (1) இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரைசபைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

(2) (அ) இப்பிரிவின் ஏற்பாடுகளும் 55 ஆம் 56 ஆம் பிரிவுகளும் இச்சட்டத்தின் III ஆம் பாகமும் இச்சட்டத்தின் சட்டவாக்கத் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(ஆ) (55 ஆம் 56 ஆம் பிரிவுகள் தவிர்ந்த) பாகம் I, II அத்துடன் IV என்பனவற்றின் ஏற்பாடுகள், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக் கூடியவாறான (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

## பாகம் I

தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையைத் தாபித்தல்.

2\. (1) (இச்சட்டத்தில் "அதிகாரசபை" எனக்குறிப்பீடு செய்யப்படும்) தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை என அழைக்கப்பட வேண்டிய அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் இடையறாவழியுரிமையையும் ஒரு பொது இலச்சினையைக்

கொண்டதாகவுமிருத்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கப்படலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

3. அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகமும் முகாமையும் (இப்பாகத்தில் இதனகத்துப் பின்னர் 'சபை' எனக்குறிப்பீடு செய்யப்படும்) தவிசாளரையும், பின்வரும் உறுப்பினர்களையும் கொண்ட பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் –

(அ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர், அல்லது அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரான அந்த அமைச்சைச் சேர்ந்த எவரேனும் சிரேட்ட அலுவலர் ;

(ஆ) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தவிசாளர் ;

(இ) பணச் சபையால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மத்திய வங்கியின் சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(ஈ) இரத்தினக்கல் வியாபார வங்கியின் தவிசாளர் ;

(உ) இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிறுவனங்களின் தவிசாளர்கள் ;

(ஊ) சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர்-தலைமையதிபதி அல்லது அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் சிரேட்ட அலுவலர் ;

(எ) கைத்தொழில்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சைச் சேர்ந்தவரும் அமைச்சரால் நியமிக்கப்பட்டவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(ஏ) கனிப்பொருளியல், புவிச்சரிதவியல், அகழ்வுத் தொழில், இரத்தினக்கல் பட்டைதீட்டுதல் அல்லது இரத்தினக்கல் கற்கள், ஆபரணம் என்பனவற்றின் உற்பத்தி, விற்பனை அத்துடன் ஏற்றுமதி என்பனவற்றுடன் தொடர்புபட்ட கருமங்களில் பரந்த அனுபவம், திறமை அத்துடன் அறிவாற்றல் என்பனவற்றைக் கொண்டவர்களாக அமைச்சருக்குத் தோன்றுகின்றவர்களான அமைச்சரால் நியமிக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும் வேறு ஐந்து உறுப்பினர்கள்.

4. ஆளொருவர் -

(அ) பாராளுமன்றத்தின், அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினர் ஒருவராக இருந்தால் அல்லது அவ்வாறு வந்தால் ;

(ஆ) இலங்கைப் பிரசை ஒருவராக அவர் இல்லாதிருந்தால் அல்லது இல்லாதொழிந்தால்; அல்லது

(இ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ், அவர் சித்தசுவாதீனம் அற்றவராகக் காணப்பட்டால் அல்லது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்டால் ; அல்லது

(ஈ) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனை தீர்ப்பை அனுபவித்துக்கொண்டிருந்தால், அல்லது அனுபவித்திருந்தால் ; அல்லது

(உ) அதிகார சபையினால் அல்லது அதன் சார்ப்பில் செய்யப்பட்ட ஏதேனும் உரிமையை அல்லது நன்மையைக் கொண்டிருந்தால் அல்லது துய்த்தால் ; அல்லது

(ஊ) சபையின் உறுப்பினர் ஒருவராக, அவரது பணிகள் அவரால் நிறைவேற்றப்படுவதனை பங்கமாகப் பாதிக்கும் சாத்தியம்கொண்ட ஏதேனும் நிதிசார்ந்த அலல்லது அதுபோன்ற வேறு அக்கறையைக் கொண்டிருந்தால் ;

சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்து இருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்.

5. நியமன உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பு, பதவிதுறத்தல் அல்லது பதவியகற்றுகை என்பதன் மூலம் முன்னதாகவே பதவியை வறிதாக்கினாலன்றி, நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

6. (1) அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரையும் அதற்கான காரணம் எதனையும் காட்டாது பதவியிலிருந்து அகற்றலாம். எந்த உறுப்பினர் தொடர்பாக, இப்பிரிவின் கீழ் கட்டளையொன்று ஆக்கப்பட்டதோ அந்த உறுப்பினர், கசெற்றில் கட்டளை வெளியிடப்பட்ட தேதியன்று பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரின் பதவி, இறப்பதன் மூலம், பதவி துறத்தல் மூலம், அல்லது பதவியகற்றுகை மூலம் வறிதாகும் பட்சத்தில், அமைச்சரானவர்.3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு, அத்தகைய உறுப்பினரை அடுத்தமைவதற்கு வேறு ஆளெவரையும் நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும், அவர் எந்த உறுப்பினருக்கு அடுத்தமைந்தாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக் காலத்திற்குப் பதவியை வகித்தல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும், அமைச்சருக்கு முகவரியிட்டு அப்பயன்பட அனுப்பப்படும் பதிவு செய்யப்பட்ட கடிதம் மூலம் எந்த நேரத்திலும் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(4) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், சுகவீனம், இயலாமை, அல்லது மூன்று மாதங்களுக்கு குறையாத காலப்பகுதியொன்றுக்கு இலங்கையில் இல்லாமை என்பன காரணமாகத் தமது கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராக இருக்குமிடத்து, அத்தகைய இயலாமைபற்றி அமைச்சருக்கு எழுத்தில் அறிவித்தல் அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். அதன்மீது, அமைச்சரானவர், 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்தில்கொண்டு அவரது இடத்தில் செயலாற்றவென வேறு ஆளொருவரை நியமிக்கலாம்.

7. சபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஆலோசனையுடன்; அமைச்சர் தீர்மானிக்கின்றவாறான அத்தகைய ஊழியம், அதிகாரசபையின் நிதியத்திலிருந்து கொடுக்கப்படலாம்.

8. (1) சபையின் தவிசாளர், அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும்

(2) தவிசாளரானவர், சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தற்காலிகமாக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராக இருப்பின், அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென அமைச்சர் வேறு ஆளொருவரை நியமிக்கலாம் ;

(3) அமைச்சரானவர் குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காகத் தவிசாளரின் நியமனத்தை முடிவுறுத்தலாம்.

(4) தவிசாளரானவர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் அஞ்சல் ஒன்றின் மூலம் எந்த நேரத்திலும் பதவியிலிருந்து விலகலாம். அத்தகைய பதவி விலகுகையானது அமைச்சரால் எழுத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் மேல் பயன் கொண்டதாதல் வேண்டும் ;

(5) மூன்றாம் (4) ஆம் உட்பிரிவுகளுக்கு அமைவாக, தவிசாளரின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாதல் வேண்டும் ;

(6) தவிசாளரே அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டுமென்பதுடன், சபையின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகத்துக்கும் முகாமைக்கும் பொறுப்பாக்கப்படுதல் வேண்டும்.

9. (1) சபையின் தவிசாளர், சமூகமாகவிருந்தால் சபையின் கூட்டம் ஒவ்வொன்றிற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமூகமாயிராதபோது சமூகமளித்துள்ள உறுப்பினர்கள் கூட்டத்தில் சமூகமளித்துள்ள உறுப்பினர்களுள் ஒருவரை அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குவதற்கெனத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஏழு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) தவிசாளர், அல்லது ஏதேனும் கூட்டத்திற்கு தலைமைதாங்கும் உறுப்பினர் தமது வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, சபையானது அதன் கூட்டங்கள் தொடர்பிலும், அத்துடன் அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கொண்டுநடாத்துவதும் தொடர்பிலும் நடவடிக்கை முறையினை ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.

10. சபையின் செயல் தீர்மானம் அல்லது நடவடிக்கை எதுவும் சபையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும், அல்லது அதன் ஏதேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் வலிவற்றதாகக் கருதப்படுதலாகாது.

11. (1) அதிகார சபையின் இலச்சினையானது சபையினால் தீர்மானிக்கப்படுதலும் வடிவமைக்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் மாற்றவும் படலாம்.

(2) அதிகார சபையின் இலச்சினை காலத்துக்குக்காலம் சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்.

(3) அதிகார சபையின் இலச்சினையானது, சபையின் அனுமதியுடன் தவிரவும், தவிசாளரினதும் வேறோர் உறுப்பினரதும் முன்னிலையிலுமன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமூகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) சபையானது, அதிகாரசபையின் இலச்சினை பொறிக்கப்பட்ட சாதனங்களினதும், ஆவணங்களினதும் இடாப்பொன்றைப் பேணிவருதல் வேண்டும்.

12. அதிகார சபை தனது தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும், பணிகளை நிறைவேற்றுகையிலும், அது இரத்தினக்கற் கைத்தொழில், ஆபரணக் கைத்தொழில் என்பனவற்றுடன் தொடர்பான பொதுக்கொள்கையுடனும், அத்தகைய கொள்கை தொடர்பில் அமைச்சரால் வழங்கப்பட்ட எவையேனும் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுடனும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

13 (1) சபையானது, அதிகாரசபையின் தத்துவங்கள், பணிகள் என்பனவற்றுள் எதனையும் தவிசாளரிடம் கையளிக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் அதிகாரசபையின் தத்துவங்கள், அத்துடன் பணிகள் என்பனவற்றுள் எதுவும் கையளிக்கப்பட்டவரான தவிசாளர், அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய தத்துவங்களையும், பணிகளையும் சபையின் சிறப்பான அல்லது பொதுவான பணிப்புகளுக்கு அமைவாக, பிரயோகித்தல் அல்லது நிறைவேற்றுதல் வேண்டும்.

14. (1) அதிகாரசபையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் –

(அ) இரத்தினக்கற் கைத்தொழில், மற்றும் ஆபரணக் கைத்தொழில் என்பவற்றை மேம்படுத்தலும், அபிவிருத்தி செய்தலும்.

(ஆ) இரத்தினக்கற் கைத்தொழில் மற்றும் ஆபரணக் கைத்தொழில் என்பனவற்றின் மேம்பாட்டுக்கும் அபிவிருத்திக்காகவும், செயற்திட்டங்களைத் தொடங்குதலும் நடைமுறைப்படுத்தலும்

(இ) இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களுக்கான சந்தை வாய்ப்பைக் கண்டறிதலும், அத்துடன் அத்தகைய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களுக்கான கேள்வியை உலக சந்தையில் மேம்படுத்தலும் ;

(ஈ) இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழில் தொடர்பிலான ஒவ்வோர் அம்சத்திலும் ஆளணியினருக்கான தொழினுட்பப் பயிற்சியை மேம்படுத்தலும் அதற்கு ஆதரவு அளித்தலும் ; அத்தகைய கைத்தொழில்களை அபிவிருத்திசெய்யும் கருத்துடன் குறிப்பாக வெப்பப்பரிகரிப்பு, வெட்டுதல் என்பனவற்றிற்கு ஆதரவளித்தலும் ;

(உ) இரத்தினக்கற் கைத்தொழிலிலும் மற்றும் ஆபரணக் கைத்தொழிலிலும் வாய்ப்புள்ள வாங்குநர்களிடையே நம்பிக்கையை உண்டாக்குவதற்கு அவசியமான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல் ;

(ஊ) சட்டமுறையின்றி இரத்தினக்கல் தோண்டுதலையும், இலங்கையிலிருந்து சட்டமுறையின்றி இரத்தினக்கற்களை அகற்றுதலையும் தடைசெய்தல் ;

(எ) அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைவாக அரச காணியில் அல்லது அரச காணிமீது அல்லது ஏதேனும் ஒதுக்கீட்டின் காரணமாகவாயினும் சரி இரத்தினக்கல் அகழ்ந்தெடுக்கும் அல்லது தோண்டும் உரிமைகள் அரசுக்குரியதாகவிருக்குமிடத்து, அரசினால் அல்லது அரச

இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தினால் கையுதிர்க்கப்பட்ட காணியில் அல்லது காணியின்மீது இரத்தினக்கற்களை அகழ்வதற்கான உரிமையைப் பராதீனப்படுத்துவதற்குப் பொறுப்புடைய பூரண அதிகார சபையாதல் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும் அத்தகைய பராதீனப்படுத்துகை ஒவ்வொன்றும் காணிகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினதும், சூழல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினதும் ஒருப்பாட்டுடன் இடம்பெறுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய உரிமைகள் தொடர்புபட்ட காணி, மகாவலி அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் உடைமையில் இருக்குமிடத்து அவ்அமைச்சரின் ஒருப்பாட்டுடன் செய்யப்படுதலும் வேண்டும் ;

ஆயின் மேலும், ஒரு பராதீனம் தொடர்பாக அத்தகைய அமைச்சர்களுக்கிடையே உடன்பாடின்மை காணப்படுகின்றவிடத்து, அவ்விடயமானது அமைச்சரவைக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பின்னர், அத்தகைய பராதீனப்படுத்துகை அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன் செய்யப்படுதலும் வேண்டும் ;

(ஏ) இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களைச் சந்தைப்படுத்துவதற்கு அவசியமான தொழினுட்பம் அத்துடன் மற்றும் ஆலோசனையையும் உள்ளகக் கட்டமைப்பு ஆதரவையும் வழங்குதல் ;

(ஐ) (i) இரத்தினக்கற்களின் அல்லது இரத்தினக்கற் கைத்தொழிலின் விடயத்தில் ஏற்புடைத்தவாறாகும் ; அல்லது

(ii) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் அதிகாரசபை பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் இயலச் செய்யும் நோக்கத்திற்காகச் செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறாகும் ;

அளவுக்கு மட்டும் அட்டவணைப்படுத்தப்பட்ட ஏதேனும் எழுத்திலான சட்டத்தை நிருவகித்தல் ;

(ஒ) இரத்தினக்கற்களை அத்தாட்சிப்படுத்துவதற்காகவும், அரிய உலோகங்களைத் தர நிர்ணயம் செய்வதற்காகவும் அலுவலகங்களைத் தாபித்தல் ;

(ஓ) இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் ஆபரணம் உற்பத்தியாளர் ஒருவரின் வேண்டுகோளின்பேரில் விதித்துரைக்கப்பட்ட விதத்தில் அதிகாரக் குறியொன்றினால் முத்திரையிடப்படுவதற்கு ஏற்பாடுசெய்தல் ;

(ஔ) இரத்தினக்கற் கைத்தொழிலிலும் அத்துடன் ஆபரணக் கைத்தொழிலிலும் ஈடுபட்டுள்ளவர்களான ஆட்களிடமிருந்து, இரத்தினக்கற் கைத்தொழிலுடன் அல்லது ஆபரணக் கைத்தொழிலுடன் தொடர்புபட்ட ஏதேனும் கருமம் மீது புள்ளிவிபரங்களை சேகரித்தலும் அத்தகைய புள்ளி விபரங்களை அதன் தற்றுணிபில் வெளியிடுதலும் ;

(க) இலங்கையில் இரத்தினக்கற் கைத்தொழிலினதும், ஆபரணக் கைத்தொழிலினதும் அபிவிருத்தியை மேம்படுத்தி ஒருங்கிணைக்கும்பொருட்டு, இரத்தினக்கற் கைத்தொழில், ஆபரணக் கைத்தொழில் அத்துடன் அரசாங்கத் திணைக்களங்கள் என்பனவற்றுக்கிடையே அவசியமான இணைப்புக்கு ஏற்பாடுசெய்தல் ; அத்துடன்

(ங) இரத்தினக்கற் கைத்தொழிலிலும், ஆபரணக் கைத்தொழிலிலும் வேலைசெய்கின்றவர்களான ஆட்களின் வேலை வாய்ப்பு நியதிகளையும், நிபந்தனைகளையும் குறிப்பாக அத்தகைய ஆட்களை, உயிருக்கும் உடலுக்குமான ஆபத்திலிருந்து பாதுகாப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்துதலும் கட்டுப்படுத்துதலும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, அதிகாரசபையானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் –

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை கொள்வதற்கு, வைத்திருப்பதற்கு குத்தகைக்கு எடுப்பதற்கு அல்லது கொடுப்பதற்கு, வாடகைக்கு எடுப்பதற்கு, ஈடுவைப்பதற்கு, அடகு வைப்பதற்கு, விற்பதற்கு, அல்லது வேறுவகையாகக் கையுதிர்ப்பதற்கு ;

(ஆ) பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அமைச்சரால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் அத்துடன் நிபந்தனைகள் என்பன மீது கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு ;

(இ) ஒன்றில் காசாகவோ அல்லது வேறுவகையாகவோ கொடைகளை, நன்கொடைகளை, அல்லது மானியக்கொடைகளை ஏற்றுக்கொள்வதற்கும், அதன் பணிகளை நிறைவேற்றுவதற்காக அவற்றைப் பிரயோகிப்பதற்கும்.

(ஈ) அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியை நியமிப்பதற்கு ;

(உ) அதிகார சபையின் வேலையைக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமாகக்கூடிய அத்தகைய வேறு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கு ;

(ஊ) அவ்வாறு நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் கொடுபடற்பாலதான ஊதியத்தை தீர்மானிப்பதற்கு ;

(எ) அதிகார சபையின் நிதியத்திலிருந்து அத்தகைய ஊதியத்தைக் கொடுப்பதற்கு ;

(ஏ) இச்சட்டதின்கீழ் ஏதேனும் தவறு புரிந்தமையைக் கண்டுபிடிப்பதற்கு இட்டுச்செல்லும் தகவலை அளித்தமைக்காக, அல்லது ஏதேனும் திடீர்ச் சோதனையில் உதவுவதற்காக.

(i) எவரேனும் ஆளுக்கு ;

(ii) பகிரங்க அலுவலர் ஒருவருக்கு அல்லது அதிகார சபையின் ஊழியர் ஒருவருக்கு

விதித்துரைக்கப்பட்ட விதத்தில், அதிகாரசபையின் நிதியத்திலிருந்து வெகுமதிகளை கொடுப்பதற்கும் ;

(ஐ) சகாய நிதியமொன்றையும், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தையும் தாபித்து, அதிகார சபையால் தொழிலில் அமர்த்தப்பட்டிருந்திருக்கும் ஆட்களுக்கு நலன்புரி பொழுதுபோக்கு வசதிகள், வீடுகள், விடுதிகள் அத்துடன் அவை போன்ற வேறு வாழ் வசதிகளுக்கும் ஏற்பாடு செய்வதற்கும் ;

(ஒ) அதிகார சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும், அத்துடன் பணிகளை நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களினையும் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே செய்துகொள்வதற்கும், அவற்றை நிறைவேற்றுவதற்கும் ;

(ஓ) அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகம் தொடர்பாக விதிகளை ஆக்குவதற்கும் ; அத்துடன்

(ஔ) பொதுவாக . அதிகார சபையின் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு வசதியளிப்பதற்கு அவசியமாகின்றவாறான அத்தகைய எல்லா வேறு காரியங்களையும் செய்வதற்கும்.

15. (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அதிகாரசபையே, இரத்தினக்கற் கைத்தொழில் அரச காணிமீது, அரச காணியில் அல்லது அதன்மேல் அல்லது தனியார் காணிமீது, தனியார் காணியில் அல்லது அதன்மேல் கொண்டுநடாத்தப்பட வேண்டுமாயினும்சரி அல்லது கொண்டுநடாத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதாயினும்சரி அத்தகைய இரத்தினக்கற் கைத்தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கான உரிமங்களை வழங்குவதற்குப் பொறுப்பான பூரண அதிகார சபையாதல் வேண்டும்.

(2) ஆளெவரும், அதிகார சபையால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் கீழ் தவிர இரத்தினக்கற் கைத்தொழிலைக் கொண்டுநடத்தலாகாது.

(3) இரத்தினக்கற் கைத்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கான உரிம மொன்றிற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அதிகாரசபைக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(4) (அ) இச்சட்டத்தின்கீழ், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணம், அல்லது கட்டணங்கள் அத்தகைய ஆளினால் அதிகார சபைக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டதன்மேல் தவிர, அதிகாரசபையினால் இரத்தினக்கற் கைத்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கான உரிமம் எதுவும் எவருக்கும் வழங்கப்படுதலாகாது.

(ஆ) அத்தகைய உரிமம் ஒவ்வொன்றும் –

(i) விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும் ;

(ii) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைந்ததாதல் வேண்டும் ;

(iii) முன்னதாகவே இல்லாதாக்கப்பட்டாலன்றி, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து பன்னிரண்டு மாதக் காலப்பகுதியொன்றிற்கு வலுவிலிருத்தல் வேண்டும்.

(5) ஏதேனும் நெற் காணியில் இரத்தினக்கற்களை அகழ்வதற்காக, அல்லது இரத்தினக்கற்றொழிலைச் செய்வதற்காக உரிமமொன்று வழங்கப்படுமிடத்து, அத்தகைய காணியின் பயிர்ச் செய்கையாளர், அவர் அத்தகைய காணியின் சொந்தக்காரராக அல்லது அத்தகைய உரிமத்தைக் கொண்டுள்ளவராக இல்லாவிட்டால், உரிமத்தின் காலப்பகுதியின்போது அத்தகைய நெற்காணியிலிருந்தான வரும் நட்டத்திற்கு, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மதிப்பீடுசெய்யப்பட்ட நட்டஈடு அத்தகைய காணிச் சொந்தக்காரரால் அவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின்கீழ் ஆளெவருக்கும் வழங்கப்பட்ட உரிமம் எதுவும் வேறு ஆளெவருக்கும் கைமாற்றப்படற்பாலதாதலாகாது என்பதுடன் அதற்கிணங்க அத்தகைய கைமாற்றம் எதுவும் வெற்றானதும் வறிதானதுமாதலும் வேண்டும்.

(7) அதிகாரசபையானது, (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமம் எதனையும், அதன்கீழ் கொடுபடற்பாலதான ஏதேனும் பணக் கொடுப்பனவில் தவணைதவறுகை ஏற்படும் பட்சத்தில், அல்லது உரிமத்தின் எவையேனும் நியதி நிபந்தனைகளுடன் உரிமம்பெற்றவர் இணங்கியொழுகத் தவறுவதன்மேல், எந்தநேரத்திலும் இல்லாதொழிக்கலாம்.

(8) அதிகாரசபையானது -

(அ) (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட உரிமமொன்றுக்கான விண்ணப்பத்தை மறுக்கின்றவிடத்து

(ஆ) (7) ஆம் உட்பிரிவின் கீழ் உரிமமொன்றை நீக்குகின்றவிடத்து

விண்ணப்பகாரர் அல்லது உரிமம் பெறுநர், விடயத்துக்கேற்றாற்போல அவ்வாறு மறுக்கப்பட்ட அல்லது நீக்கஞ்செய்யப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்கள் கொண்ட காலப்பகுதியொன்று முடிவடையுமுன்னதாக (இதனகத்து இதன்பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(9) எட்டாம் உட்பிரிவின்கீழ் அவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மீது செயலாளரானவர் -

(அ) மேன்முறையீட்டை அனுமதித்து உரிமத்தை வழங்குமாறு அல்லது புதுப்பிக்குமாறு அதிகார சபையைப் பணிக்கலாம்; அல்லது

(ஆ) மேன்முறையீட்டை அனுமதிக்க மறுக்கலாம்.

(10) அதிகாரசபையானது (9) ஆம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட அதன் ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(11) எட்டாம் உட்பிரிவின் கீழ் செயலாளருக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின்மீது (9) ஆம் உட்பிரிவின் கீழ் அனுமதியை மறுக்கின்ற செயலாளரின் முடிவுடன் திருப்தியுறாத விண்ணப்பகாரர் ஒருவர் அல்லது உரிமம் பெறுநர், செயலாளரின் அத்தகைய முடிவிலிருந்து, அத்தகைய முடிவு அவருக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(12) பதினோராம் உட்பிரிவின் கீழ் முன்வைக்கப்பட்ட மேன்முறையீடொன்றுக்கு உயர்நீதிமன்ற விதிகளின் இயைபான ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(13) பதினோராம் உட்பிரிவின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின்மீது உயர்நீதிமன்றமானது -

(அ) அத்தகைய மேன்முறையீட்டை அனுமதித்து, அத்தகைய மேன்முறையீட்டின் விடயப் பொருளான உரிமத்தை வழங்குமாறு அல்லது புதுப்பிக்குமாறு அதிகாரசபைக்குப் பணிக்கலாம் ; அல்லது

(ஆ) அத்தகைய மேன்முறையீட்டை அனுமதிக்க மறுக்கலாம்.

(14) ஏதேனும் அரச காணியில் அல்லது அரசுக்குச் சாதகமாக அகழ்ந்தெடுத்தற்கான உரிமையுடன்கூடிய ஒதுக்கத்துடன், கூட்டுத்தாபனத்தால்

கையுதிர்க்கப்பட்டதான ஏதேனும் அரசகாணியில், அல்லது ஏதேனும் காணியில் அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டதான அல்லது வழங்கப்பட்டதாகக் கருதப்பட்டதான குத்தகை ஒவ்வொன்றும், அத்தகைய குத்தகையானது, நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருப்பின், எல்லா நோக்கங்களுக்காகவும் அதிகார சபையால் வழங்கப்பட்டதொரு குத்தகையாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும் அதிகாரசபையானது, எந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக, அத்தகைய குத்தகை வழங்கப்பட்டதோ அந்த நியதிகளையும் நிபந்தனைகளையும் வேறுபடுத்தலாம், அல்லது அத்தகைய குத்தகையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் மேலதிகமாக அதற்கு வேறு நியதிகளையும் நிபந்தனைகளையும் மேலும் சேர்க்கலாம்.

16. ஆளொருவரும், அதிகார சபையின் அங்கீகாரத்துடனன்றி, எவையேனும் இரத்தினக்கற்களை, இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யலாகாது.

17. (1) ஆளெவரும், ஆபரணக் கைத்தொழிலை, அத்தகைய கைத்தொழிலானது, அதிகாரசபையுடன், பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றிக் கொண்டுநடத்துதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று ஏதேனும் வளவுகளுக்குள் ஆபரணக் கைத்தொழிலைக் கொண்டுநடாத்துகின்றவரான ஆளெவரும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து தொடங்கி, மூன்றுமாத காலப்பகுதியொன்றுக்குள்ளாக, அதிகாரசபையுடன் அத்தகைய வளவுகளைப் பதிவு செய்துகொள்ளுதல் வேண்டும்.

(3) ஆபரணக் கைத்தொழிலைக் கொண்டு நடாத்துகின்றவரும், அதிகார சபையிடமிருந்து ஏதேனும் உதவியைப் பெறவிரும்புகின்றவரான ஒவ்வொரு ஆளும் அதிகார சபையுடன் அத்தகைய கைத்தொழிலைப் பதிவு செய்துகொள்ளுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "வளவுகள்" என்பது ஆபரணத் தொழில் அல்லது வியாபாரம் கொண்டுநடாத்தப்படுகின்றதும் அத்தகைய வியாபரத்தை அல்லது தொழிலைக் கொண்டுநடாத்துவதற்காக மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது நகரசபைக் கட்டளைச்சட்டத்தின் கீழ் வரிவிதிக்கப்படுகின்றதுமான வளவுகள் என்று பொருளாகும்.

18 (1) இரண்டாம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அரசகாணியில், அல்லது எந்தக் காணிமீது, அல்லது எந்தக் காணியில் அகழ்ந்தெடுக்கும் அல்லது இரத்தினக்கல் அகழ்ந்தெடுக்கும் உரிமைகள் அரசுக்குரியனவாக இருக்கின்றனவோ, அந்தக் காணிமீது இரத்தினக் கற்களுக்காக அகழுகின்றவரான எவரேனும் ஆள் அத்தகைய காணியையும், அத்தகைய காணியில் அகழ்ந்தெடுக்கும் அல்லது இரத்தினக்கல் அகழ்ந்தெடுக்கும் உரிமைகளையும் அத்தகைய ஆள் ஏலத்தின் மூலம் பெற்றுக்கொண்டுள்ளவிடத்து, அத்தகைய ஆளினால் அத்தகைய ஏலத்தில் கொடுக்கப்பட்ட விலையானது அத்தகைய

காணியில் காணப்படக்கூடிய இரத்தினக்கற்களுக்குப் பதிலாக வேத்துரிமையொன்றை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அரசகாணியில் அல்லது எந்தக் காணிமீது அல்லது எந்தக் காணியில் அகழ்ந்தெடுக்கும் அல்லது இரத்தினக்கல் அகழ்ந்தெடுக்கும் உரிமைகள் அரசுக்குரியனவாக இருக்கின்றனவோ, அந்தக் காணி மீது இரத்தினக் கற்களுக்காக அகழ்கின்றவரான எவரேனும் ஆள் அத்தகைய காணியையும் அத்தகைய காணியில் அகழ்ந்தெடுக்கும் அல்லது இரத்தினக்கல் அகழ்ந்தெடுக்கும் உரிமைகளையும், ஓர் ஏலத்தின் மூலம் தவிர வேறுவகையாகப் பெற்றுக்கொண்டுள்ளவிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய காணியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எவையேனும் இரத்தினக்கற்களை அதிகார சபையிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(3) அதிகார சபைக்கு (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் இரத்தினக்கல் ஒப்படைக்கப்படுமிடத்து அதிகாரசபையானது –

(அ) உரிமம் பெறுநரின் சம்மதத்துடன், அத்தகைய இரத்தினக்கல்லை வேறெவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு விற்பதற்கு ஒழுங்குகள் செய்யலாம் ; அல்லது

(ஆ) அத்தகைய இரத்தினக்கல்லை விற்பதற்கு ஒழுங்குகள் செய்வதற்கு மறுக்கலாம்.

(4) அதிகாரசபைக்கு (2) ஆம் உட்பிரிவின்கீழ், ஒப்படைக்கப்பட்டுள்ள ஏதேனும் இரத்தினக்கல் அதிகாரசபையால் செய்யப்பட்ட ஒழுங்குகளின் விளைவாக வேறெவரேனும் ஆளுக்கு விற்கப்படுமிடத்து, அதிகாரசபையானது, அத்தகைய இரத்தினக்கல் விற்பனையின் வரும்படிகளின் விதித்துரைக்கப்பட்டவொரு பகுதியை அதன் வேத்துரிமையாக கொடாது வைத்திருத்தல் வேண்டும்.

(5) அதிகார சபையானது (2) ஆம் உட்பிரிவின் கீழ் அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்ட இரத்தினக்கல் எதனையும் விற்பதற்கு ஒழுங்குகள் செய்வதற்கு மறுக்கின்றவிடத்து, அதிகாரசபை எந்த ஆள் அத்தகைய இரத்தினக்கல்லை அதிகாரசபையிடம் ஒப்படைத்தாரோ அந்த ஆளிடம், அதனை, அதிகாரசபையானது அத்தகைய இரத்தினக்கல்லை விற்பதற்கு ஒழுங்குகளைச் செய்ய மறுத்துவிட்டது என்று கூறுகின்றதான ஆவணமொன்றுடன் சேர்த்துத் திருப்பிக்கொடுத்தல் வேண்டும்; ஆனால் அதிகார சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய இரத்தினக்கல்லின் சந்தைப் பெறுமதியின் விதித்துரைக்கப்பட்டவொரு பகுதியை வேத்துரிமையாக அறவிடுதல் வேண்டும்.

(6) ஆளெவரும் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக, ஏதேனும் அத்தகைய காணியில் அகழ்ந்தெடுத்தல் மூலம் அத்தகைய வேறு ஆளினால் பெறப்பட்ட ஏதேனும் இரத்தினக்கல்லை, அதிகார சபை அதன் விற்பனைக்கான ஒழுங்குகளைச் செய்ய மறுத்தாலன்றி வேறு ஆளெவரிடமிருந்தும் கொள்வனவு செய்தலாகாது.

## பாகம் II

### அதிகார சபையின் நிதியும் பணியாட்டொகுதியும்.

19 (1) அதிகார சபையின் தொடக்க மூலதனம் பின்வருவனவற்றைக் கொண்ட நூற்றைம்பது மில்லியன் ரூபாவாதல் வேண்டும்.

(i) அரச இரத்தினக்கற் கூட்டத்தாபனத்தின் வரவில் இருந்து, நியமிக்கப்பட்ட தேதியில் இருந்து அதிகாரசபைக்குக் கைமாற்றம் செய்யப்பட்டனவான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ii) திரட்டு நிதியத்திலிருந்து அதிகாரசபைக்குக் கிடைக்கத்தக்கனவாகச் செய்யப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகை.

(2) அதிகாரசபையின் மூலதனம், அமைச்சரின் அங்கீகாரத்துடன், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையினால் காலத்திற்குக்காலம் அதிகரிக்கப்படலாம்.

20. (1) அதிகாரசபையானது அதன் (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :

(அ) திரட்டு நிதியத்திலிருந்து அதிகாரசபைக்குக் கிடைக்கத்தக்கனவாகச் செய்யப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தின் வரவில் இருந்து, நியமித்த தேதியிலிருந்து அதிகாரசபைக்குக் கைமாற்றப்பட்டனவான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) அதிகாரசபையினால், அதன் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பனவற்றைப் பிரயோகிக்கையிலும், புரிகையிலும் அத்துடன் நிறைவேற்றுகையிலும் பெற்றுக்கொள்ளப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஈ) நன்கொடைகள் மூலமாக அதிகாரசபையால் பெற்றுக் கொள்ளப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) இச்சட்டத்தின்கீழான அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின்கீழான அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் அத்துடன்பணிகள் என்பனவற்றைப் பிரயோகிக்கையிலும்,புரிகையிலும், நிறைவேற்றுகையிலும் அதனால் உறப்படும் ஏதேனும் செலவினத்தைக் கொடுத்து தீர்ப்பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும், அத்துடன் இச்சட்டத்தினால் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

21. (1) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களினது கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், அதிகாரசபையின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

22. அதிகாரசபைக்குச் சொந்தமான எல்லாப் பணங்களும் சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய விதத்தில் முதலீடு செய்யப்படலாம்.

23 (1) அதிகாரசபையானது, அமைச்சரின் எழுத்திலான அங்கீகாரத்துடன், அதிகாரசபைக்கு, பணிப்பாளர் – தலைமையதிபதி ஒருவரை நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் – தலைமையதிபதி எல்லா நேரங்களிலும் அதிகாரசபையின் பணிப்புக்களின் கீழ் செயலாற்றுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் – தலைமையதிபதிக்கு, அமைச்சரின் அங்கீகாரத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் கொடுக்கப்படலாம்.

24 (1) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்கசேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அந்த அலுவலரின் சம்மதத்துடனும், அத்துடன் பொது நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் சம்மதத்துடனும், அதிகாரசபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்து, அவ்வொப்பந்தத்தின் மூலம் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு, அரசாங்கத்திற்குச் சேவை புரிய உடன்பட்டுள்ள எவரேனும் ஆள், அதிகார சபையால் தொழிலுக்கமர்த்தப்படுமிடத்து, அவ்வாளினால் அதிகாரசபைக்கு ஆற்றிய ஏதேனும் சேவைக்காலப்பகுதியானது, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, அரசாங்கத்திற்கு ஆற்றிய சேவையாக கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் III

## நிறுவனங்களைத் தாபித்தல்

25. (1) இரத்தினக்கற் கைத்தொழிலினதும், ஆபரணக் கைத்தொழிலினதும், அபிவிருத்தியில் உதவி செய்யும் நோக்கத்திற்காக, நிறுவனமொன்று தாபிக்கப்படுதல் அவசியம் என அமைச்சர் கருதுமிடத்து, அமைச்சரானவர் அமைச்சரவையின் அங்கீகாரத்துடனான (இதனகத்துப்பின்னர் "கூட்டிணைத்தல் கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் :-

(அ) அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிகளைப் புரிவதற்கென நிறுவனம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும் என வெளிப்படுத்தலாம்.

(ஆ) நிறுவனத்திற்குக் கூட்டிணைக்கப்பட்ட பெயரொன்றைக் குறித்தொதுக்கலாம் ;

(இ) நிறுவனத்தின் தொடக்க மூலதனத்தைக் குறித்துரைக்கலாமென்பதுடன், திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படக் கூடியவாறான பணத்தொகையையும், அதிகார சபையால் இப்பாகத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தினால் அதன் நிதியத்திலிருந்து ஏதேனும் பணத்தொகை செலுத்தப்பட வேண்டுமெனில் அத்தொகையையும் குறித்துரைக்கலாம் ;

(ஈ) நிறுவனத்தின் குறிக்கோளைக் குறித்துரைக்கலாம் ;

(உ) நிறுவனத்தின் தத்துவங்களைக் குறித்துரைக்கலாம் ;

(ஊ) நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கலாம், அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையானது ஐந்துக்கு மேற்படாமலும், மூன்றுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.

(எ) இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, பணிப்பாளர் சபையின் முதலாவது உறுப்பினர்களை நியமிக்கலாம்.

(ஏ) இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, பணிப்பாளர் சபையின் முதலாவது தவிசாளரை நியமிக்கலாம்.

(ஐ) பணிப்பாளர் சபையின் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண்ணைக் குறித்துரைக்கலாம்.

(2) கூட்டிணைத்தல் கட்டளையொன்று (1) ஆம் உட்பிரிவின்கீழ் கசெற்றில் வெளியிடப்பட்டதன் மேல் (இதனகத்துப் பின்னர் இப்பாகத்தில் "நிறுவனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறுவனம் ஒன்று அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட

கூட்டிணைக்கப்பட்ட பெயரைக் கொண்டதாகவும் இடையறாவழியுரிமை கொண்டதாகவும் தாபிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது, தத்துவங்களைப் பிரயோகித்தல், கடமைகளைப் புரிதல் என்பன பற்றிய பொதுவான அல்லது சிறப்பான எழுத்திலான பணிப்புக்களைக் காலத்திற்குக் காலம் நிறுவனத்திற்குக் கொடுக்கலாம் என்பதுடன், அத்தகைய பணிப்புக்கள் நிறுவனத்தினால் நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

(26). (1) அமைச்சரானவர், (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு உறுப்பினர்களை நியமித்தல் வேண்டும். இவர்களுள் ஒருவர் பணிப்பாளர் தலைமையதிபதியாதல் வேண்டுமென்பதுடன், உறுப்பினர்கள் ஒருவரைச் சபையின் தவிசாளராகப் பெயர் குறித்து நியமித்தலும் வேண்டும்.

(2) சபையின் உறுப்பினர் ஒருவர், அவர் பதவியை முன்னதாகவே வறிதாக்கினாலன்றி, மூன்றாண்டுக் காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(3) அமைச்சரானவர், அவ்வாறு செய்வது உசிதெமனக் கருதினால், குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காக சபையின் உறுப்பினர் எவரையும் அகற்றலாம்.

(4) உறுப்பினர் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான கடிதமூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(5) உறுப்பினர் ஒருவரால் இறப்பின் மூலம் அல்லது பதவி விலகல் மூலம் அல்லது பதவியகற்றுகை மூலம் பதவி வறிதாக்கப்படும் பட்சத்தில், அமைச்சரானவர் அவரது இடத்தை எடுப்பதற்கென வேறு ஆளொருவரை நியமிக்கலாம். இவ்வாறு நியமிக்கப்பட்ட ஆளெவரும் எந்த உறுப்பினரை அடுத்து அவர் வருகின்றாரோ, அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(6) ஓர் உறுப்பினர் சுகவீனம், இலங்கையில் இல்லாமை அல்லது வேறு ஏது என்பன காரணமாக, தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிய இயலாதவராக இருக்குமிடத்து அத்தகைய உறுப்பினரின் இடத்தில் பதில் கடமையாற்றவென அமைச்சர் வேறு ஆளொருவரை நியமிக்கலாம்.

(7) சபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கபடக் கூடியவாறான அத்தகைய நியதிகள் அத்துடன் நிபந்தனைகள் என்பனமீது ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

(8) தவிசாளரானவர் சுகவீனம், இலங்கையில் இல்லாமை அல்லது வேறேதேனும் ஏது என்பன காரணமாகத் தமது பதவிக்கான கடமைகளைத் தற்காலிகமாகப் புரியமுடியாதிருந்தால், அமைச்சரானவர் தவிசாளராகச் செயலாற்றுவதற்கென சபையின் வேறு உறுப்பினரொருவரை நியமிக்கலாம்.

(9) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டிணைத்தற் கட்டளைக்கும் அமைவாக, சபையானது அதன் கூட்டங்களை நடாத்துவதனை ஒழுங்குபடுத்துவதற்கும், அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்கும் விதிகளை ஆக்கலாம்.

(10) எந்த உறுப்பினர் நிறுவனத்தினால் செய்யப்பட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒப்பந்தத்தில் அக்கறைப்படுகின்றாரோ அந்த உறுப்பினர் ஒருவர் அவரது அக்கறையின் தன்மைபற்றிச் சபையின் கூட்டம் ஒன்றில் வெளியிடுதல் வேண்டும். வெளியிடுகையானது, அத்தகைய கூட்டத்தின் குறிப்புக்களில் பதிவுசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒப்பந்தம் தொடர்பிலான எந்தத் தீர்க்காலோசனையிலும் அல்லது முடிவிலும் பங்கெடுத்தலாகாது.

(11) சபையின் செயல் அல்லது முடிவு எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் குறைபாடு எதுவும் இருப்பதன் காரணமாக மட்டும் வலிதற்றதாக்கப்படுதலாகாது.

27. (1) நிறுவனம் பொது இலச்சினையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அது சபையின் கட்டுக்காவலில் இருத்தலும் வேண்டும்.

(2) நிறுவனத்தின் இலச்சினையானது, சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய விதத்தில் பொறிக்கப்படுதல் வேண்டும்.

(3) நிறுவனத்தின் இலச்சினை, சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையில் தவிர ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது. இருவரும் தாங்கள் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) சபை நிறுவனத்தின் இலச்சினை எச்சாதனங்களில் அல்லது ஆவணங்களில் பொறிக்கப்பட்டனவோ அத்தகைய சாதனங்கள், ஆவணங்கள் என்பனவற்றின் பதிவேடொன்றைப் பேணிவருதல் வேண்டும்.

28. அமைச்சரானவர், சபையுடனான கலந்தாலோசனையுடன் நிறுவனத்தின் தத்துவங்களைப் பிரயோகித்தல், அத்துடன் கடமைகளைப் புரிதல் என்பனபற்றிப் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புக்களைக் காலத்திற்குக்காலம் சபைக்கு விடுக்கலாம்.

29. (1) நிறுவனத்தின் அலுவல்களினதும் தொழிலினதும் பொதுவான மேற்பார்வை, பணிப்பு, கட்டுப்பாடு என்பன சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் இப்பாகத்தால் நிறுவனத்திற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, நிறுவனம் கூட்டிணைத்தல் கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட சிறப்பான தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) சபையானது கூட்டிணைத்தற் கட்டளையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உகந்ததான எக்காரியத்தையும் செய்வதற்குத் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், இந்நோக்கத்திற்காகப் பின்வருவனவற்றையும் செய்யலாம் ;

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளல், அத்துடன் வைத்திருத்தல் அல்லது வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுத்தல் அத்துடன் அத்தகைய ஆதனம் எதனையும் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு கொடுத்தல் அல்லது விற்றல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல் ;

ஆயின், எவ்வாறாயிருப்பினும் நிறுவனத்திற்கு உரித்தாக்கப்பட்ட அசைவற்ற ஆதனம் எதுவும், அமைச்சரின் முன்னங்கீகாரமின்றி விற்கப்படுதலாகாது.

(ஆ) காசாகவோ அல்லது பொருளாகவோ மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் என்பனவற்றை ஏற்றுக் கொள்ளல் ;

(இ) அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகப் பணத்தைக் கடனாகப் பெறலாம் என்பதுடன் அதன் ஆதனங்களுள் எதனையும் ஈடுவைப்பதன் மூலம் ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவுக்கும் பிணைப்பொறுப்பாக்குதல் ;

(ஈ) அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும் அதன் பணிகளைச் செய்து முடிப்பதற்கும் அவசியமான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல் ;

(உ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கும் கடமைகளைப் புரிவதற்கும் அவசியமாக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளுதல் அத்துடன் அவற்றை நிறைவேற்றல் ;

(ஊ) நிறுவனத்தின் அலுவல்களின் நிருவாகம் தொடர்பாக விதிகளை ஆக்குதல் ;

(எ) அதன் தத்துவங்கள், கடமைகள், அத்துடன் பணிகள் என்பனவற்றை பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதல் ஆகியவற்றுக்கு இடைநேர்விளைவான அல்லது அவற்றின் விளைவாந் தன்மையிலான அல்லது அவற்றுடன் தொடர்புபட்ட அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்தல் ;

30. நிறுவனத்தின் மூலதனம், கூட்டிணைத்தல் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தொகையாக இருத்தல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்றத்தின் தீர்மானமூலம் காலத்திற்குக் காலம் அதிகரிக்கவும் படலாம்.

31. நிறுவனத்தின் பொறுப்பானது, நிறுவனத்தின் மூலதனத்திற்கு வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

32. (1) நிறுவனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) நிறுவனமானது, அதன் வருமானம் அத்துடன் செலவினம் சொத்துக்கள் அத்துடன் பொறுப்புக்கள் அத்துடன் நிறுவனத்தின் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினது கணக்குகளின் கணக்காய்வு தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், நிறுவனத்தின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

33. (1) சபையானது நிறுவனத்தின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பனவற்றினைத் திறமையாகப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் அத்துடன் நிறைவேற்றுவதற்கும் அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்கள், சேவையாளர்கள், முகவர்கள் என்போரை நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்டவர்களான அலுவலர்கள், சேவையாளர்கள், அத்துடன் முகவர்கள் என்போருக்குச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்திலும், அத்தகைய வீதங்களிலும், ஊதியம் அளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேவை நிபந்தனைக்கு அமைந்தவர்களாதலும் வேண்டும்.

(3) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அந்த அலுவலரின் சம்மதத்துடனும் அத்துடன் பொது நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் சம்மதத்துடனும் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவனத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவனத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவனத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர்தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்து அவ்வொப்பந்தத்தின் மூலம் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவைபுரிய உடன்பட்டுக்கொண்டு ஆளெவரையும் நிறுவனம் தொழிலுக்கமர்த்துமிடத்து, அந்த ஆளினால் நிறுவனத்திற்கு ஆற்றப்பட்ட ஏதேனும் சேவைக்காலப் பகுதியானது, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கு ஆற்றிய சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

34. (1) அரசின் அசைவற்ற ஆதனம் எதுவும் நிறுவனத்தின் நோக்கத்திற்காகத் தேவைப்படுமிடத்து அத்தகைய நோக்கமானது எந்தவொரு நோக்கத்திற்காக, முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின், 6 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ஆதனம் சிறப்பான மானிய கொடையொன்றாக அல்லது குத்தகையாக ஆக்கப்படலாமோ அந்தவொரு நோக்கமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் நிறுவனத்திற்கான அத்தகைய ஆதனத்தின் சிறப்பு மானியக்கொடைக்கு அல்லது குத்தகைக்கு ஏற்புடையனதாதலும் வேண்டும்.

(2) அரசின் அசைவுள்ள ஆதனமெதுவும் நிறுவனத்தின் நோக்கத்திற்காகத் தேவைப்படுத்தப்படுமிடத்து, அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அத்தகைய ஆதனத்தின் உடமைகளையும் பயன்பாட்டையும் நிறுவனத்திற்குக் கைமாற்றம் செய்து அதனை உரித்தாக்கலாம் ;

ஆயின் எவ்வாறாயினும் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய ஆதனத்தின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கின்றவரான அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தையும் பாதிக்கும் கட்டளை எதுவும் அமைச்சரால் ஆக்கப்படலாகாது.

35. நிறுவனத்தின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும் அத்துடன் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துப்படவும் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

36. நிறுவனத்தின் உறுப்பினரின் உடலுக்கெதிராகவோ அல்லது அவரது ஆதனத்துக்கெதிராகவோ நிறுவனத்துக்கெதிராகக் கொணரப்படும் ஏதேனும் வழக்கில் எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

37. நிறுவனமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்டவொரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

38. (1) அமைச்சரானவர், இப்பாகத்தினால் எக்கருமம் தொடர்பாக ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டும் என அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமம் எது தொடர்பாகவும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் அது வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாகப் பாராளுமன்றத்தின் முன்னர் அங்கீகாரத்துக்கெனக் கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அதற்கான அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எந்தத் தேதியன்று ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டுமோ அந்தத் தேதி கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

## பொது

39. அதிகாரசபையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்டதொரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

40. அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும், நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

41. (1) அரசின் அசைவற்ற ஆதனம் எதுவும், அதிகார சபையின் நோக்கத்திற்காகத் தேவைப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய நோக்கமானது, எந்தவொரு நோக்கத்திற்காக முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆதனம் சிறப்பான மானியக் கொடையொன்றாக அல்லது குத்தகையாக ஆக்கப்படலாமோ அந்தவொரு நோக்கமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க அக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதிகாரசபை அத்தகைய அதிகாரசபையின் ஒரு சிறப்பு மானியக் கொடைக்கு அல்லது குத்தகைக்கு ஏற்புடையதாதலும் வேண்டும்.

(2) அரசின் அசைவுள்ள ஆதனமெதுவும், அதிகாரசபையின் நோக்கத்துக்காகத் தேவைப்படுமிடத்து, அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அத்தகைய ஆதனத்தின் உடைமையையும், பயன்பாட்டையும் அதிகாரசபைக்குக் கைமாற்றம் செய்து அதற்கு உரித்தாக்கலாம் :

ஆயின் எவ்வாறாயினும் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ், அத்தகைய ஆதனத்தின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கின்றவரான அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி ஏதேனும் அசைவுள்ள அரச ஆதனத்தைப் பாதிக்கும் கட்டளை எதுவும் அமைச்சரால் ஆக்கப்படுதலாகாது.

42. (1) அதிகாரசபையின் குறிப்பான நோக்கம் எதற்காகவும், ஏதேனும் அசைவற்ற ஆதனம் கொள்ளப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டும் அத்துடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், உத்தேசிக்கப்பட்ட கொள்ளலை அந்த நோக்கத்திற்கென அமைச்சர் அங்கீகரிக்குமிடத்தும், அந்த ஆதனமானது பொது நோக்கமொன்றிற்காகத் தேவைப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறே காணிகொள்ளல் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டு அதிகார சபைக்குக் கைமாற்றப்படுதலும் வேண்டும்.

(2) காணி கொள்ளல் சட்டத்தின்கீழ் எதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொண்டமைக்காக அதிகாரசபைக்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகையானது அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

43. (1) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின் பேரில், அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினரால், அலுவலரால், சேவையாளரால் அல்லது முகவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்ததாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராகத் துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் இருத்தலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அதிகாரசபையினால் அல்லது அதிகாரசபைக்கு எதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபையால் பெறப்பட்ட எவையேனும் செலவுகள் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகார சபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத்தொகைகள் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கு எதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் அத்தகைய ஆளினால் பெறப்பட்ட எவையேனும் செலவுகள் அத்தகைய செயல் நல்லெண்ணத்தடன் செய்யப்பட்டதாக நீதிமன்றம் கருதினால் அத்தகைய ஆளினால் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அறவிடப்பட்டாலன்றி, அவருக்கு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

44. அதிகாரசபைக்கு எதிராகக் கொண்டுவரப்படும் ஏதேனும் வழக்கில் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையில் எவரேனும் உறுப்பினரின் ஆளுக்கெதிராகவோ அல்லது ஆதனத்துக்கெதிராகவோ எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

45. (1) அதிகாரசபையின் பணிப்பாளர் சபையானது எந்த விடயங்கள் தொடர்பில் விதிகள் இச்சட்டத்தினால் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப் பட்டுளள்ளனவோ அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளனவோ அந்த எல்லா அல்லது எவையேனும் விடயங்கள் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராத விதிகளை ஆக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி எதுவும், பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு அத்தகைய அங்கீகாரம் கசெற்றில் வெளியிடப்படும்வரை பயன்கொண்டதாதலாகாது.

46. இரத்தினக்கற் கைத்தொழில் அல்லது ஆபரணக் கைத்தொழிலைக் கொண்டு நடாத்தும் ஆளெவரும் ஏதேனும் பிரதிநிதித்துவத்தின் அல்லது

விவரணத்தின்கீழ் அல்லது ஒரு கொள்வனைகாரரை அல்லது உத்தேசக் கொள்வனைகாரரை ஏமாற்றும் அல்லது தவறாக இட்டுச்செல்லும் திறனையும் உளப்பாங்கையும் கொண்ட, அல்லது அத்தகைய இரத்தினக்கல்லினது அல்லது ஆபரணத்தினது வகை, தரம், அளவு, பருமன், நிறை அல்லது பெறுமதி என்பன தொடர்பாகப் பிழையான அபிப்பிராயம் ஒன்றை உருவாக்குகின்ற சூழ்நிலைகளில் ஏதேனும் இரத்தினக் கல்லினை அல்லது ஆபரணத்தை விற்பனை செய்தலோ அல்லது விற்கக்கொடை முனைதலோ ஆகாது.

47. அதிகாரசபையானது, அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமானதெனக் கருதுமிடத்து, எந்த வளவுகளுக்குள் இரத்தினக்கற் கைத்தொழில் அல்லது ஆபரணக் கைத்தொழில் கொண்டு நடாத்தப்படுகின்றதோ அந்த வளவுக்குள் எவற்றினுள்ளும் நாளின் நியாயமான எல்லா நோக்கங்களிலும் நுழைவதற்கும் அவற்றைப் பரிசோதிப்பதற்கும் எவரேனும் அலுவலருக்கு எழுத்தில் அதிகாரமளிக்கலாம். அவ்வாறு அதிாகரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் இதனகத்துப்பின்னர் “அதிகாரம்பெற்ற அலுவலர்” எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.

48. (1.) அதிகாரம் பெற்ற அலுவலர் எவரும் -

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என்பதை நிச்சயப்படுத்தும் நோக்கத்திற்காக இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் இரத்தினக்கற் கைத்தொழில் கொண்டுநடாத்தப்படுகின்றதான எந்த இடத்திற்கும் சென்று சோதனையிடலாம் ;

(ஆ) இரத்தினக்கற் கைத்தொழில் ஒன்று இச்சட்டத்தின்கீழ், வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் அதிகாரமின்றி நடாத்தப்படுகின்றதென நம்புவதற்குக் காரணமிருக்கின்றதான ஏதேனும் இடத்திற்குச் சென்று சோதனையிடலாம் ;

(இ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட வேறேதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளின் மீறுகையாக, விடயத்துக் கேற்றாற்போன்று ஏதேனும் இரத்தினக்கல் இடம் பெயர்க்கப்படுகின்றதாக அல்லது ஏற்றுமதி செய்யப்படுவதாக நம்புவதற்குக் காரணமிருக்கின்றதான ஏதேனும் வாகனத்தை அல்லது கலனை நிறுத்தி, அதில் ஏறி அதனைச் சோதனையிடலாம் ;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் பேணப்படும் எவையேனும் புத்தகங்கள், இடாப்புகள் அல்லது பதிவேடுகள் என்பனவற்றைப் பரிசோதிக்கலாம், அவற்றிலிருந்து பொழிப்புக்களை அல்லது பிரதிகளை எடுக்கலாம் ;

(உ) எவரேனும் ஆள் தமது உடலில் இரத்தினக்கற்களை மறைத்து வைத்திருக்கிறார் என நம்புவதற்குக் காரணமிருக்குமிடத்து

எவையேனும் அத்தகைய வளவுகளில் வாகனத்தில் அல்லது கலனில் இருக்கின்ற அத்தகைய ஆளைத் தேடுகையிடலாம்.

ஆயின் ஒரு பெண்ணாக இருக்கின்றவரான ஆளெவரும், அதிகாரசபையினால் அந்நோக்கத்திற்கென அதிகாரமளிக்கப்பட்டவரான பெண் ஒருவராலன்றித் தேடுகை செய்யப்படுதலாகாது ;

(ஊ) அத்தகைய எவையேனும் வளவுகளில், அல்லது அத்தகைய ஏதேனும் வாகனத்தில் அல்லது கலனில் ஆளெவரையும் கேள்விக்குட்படுத்தலாம் ;

(2) ஓராம் உட்பிரிவினால் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவத்தை ஓர் அலுவலர் பிரேயாகிக்கையில் அத்தகைய அலுவலரை முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது தடைசெய்கின்ற அந்த ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஆறுமாத காலத்திற்குக் குறையாத இருவகையிலொருவகையான மறியற்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற் தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

49. (1) அதிகாரம்பெற்ற அலுவலரெவரும், இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு புரியப்பட்டுள்ளது அல்லது புரியப்படுகிறது என நம்புவதற்குக் காரணத்தைக் கொண்டிருந்தால் –

(அ) எந்தப் பொருள்வாயிலாக அல்லது தொடர்பாகத் தவறு புரியப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளதோ அந்தப் பொருள் எதனையும் அத்துடன் ;

(ஆ) அவரது அபிப்பிராயத்தில், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்காக, எவரேனும் ஆளின் குற்றவழக்கிற்கு அவசியமாகும் அல்லது பயன்படும் என்பதான ஏதேனும் புத்தகத்தை, இடாப்பினை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கைப்பற்றித்

தடுத்து வைக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவேரனும் அதிகாரம்பெற்ற அலுவலர் ஏதேனும் பொருளைக் கைப்பற்றுகின்றவிடத்து, அத்தகைய பொருள் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக அது கைமாற்றப்பட்டுக் கொடுத்துத் தீர்க்கப்படும்வரை அது அதிகாரசபையின் கட்டுக்காவலிலும் கட்டுப்பாட்டிலும் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

50. (1) அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவரினாலான உரியமுறையிலான விசாரணையின் பின்னர் அத்தகைய அலுவலர், இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதற்கு அல்லது புரிவது தொடர்பாக, கைப்பற்றப்பட்ட பொருளானது பயன்படுத்தப்பட்டது என திருப்திப்படுமிடத்து, அத்தகைய பொருள் அரசுக்கு இழப்பிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ், அதிகாரம் பெற்ற எவரேனும் அலுவலரால் ஏதேனும் பொருள் கைப்பற்றப்பட்டு அரசுக்கு இழப்பிக்கப்பட்டமையினால் இன்னலுறும் ஆளெவரும், அத்தகைய இழப்பிப்பு நடந்த தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் அத்தகைய கைப்பற்றுகைக்கும் இழப்பிப்புக்கும் எதிராக எந்த உள்ளூர் எல்லைக்குள்ளாக அத்தகைய கைப்பற்றுகையும் இழப்பிப்பும் பயனுறுத்தப்பட்டதோ அந்த உள்ளூர் நியாயாதிக்கத்துக்குட்பட்ட மாவட்ட நீதிமன்றம் எதிலும் எழுத்திலான விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் மாவட்ட நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும் எழுத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், குடியியல் துடர்ச்சியொன்றின் பிராது வடிவத்திலும் இருத்தல் வேண்டும். விண்ணப்பத்தில் அத்தகைய ஆள் வழக்காளி என்றும், அதிகாரம் பெற்ற அலுவலர் எதிராளி என்றும் விபரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பமானது பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) மாவட்ட நீதிமன்றத்தின் பெயரும், நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்த தேதியும்.

(ஆ) அதிகாரம் பெற்ற அலுவலரின் பெயரும் முகவரியும் ;

(இ) நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டிய கருமம்பற்றிய தெளிவானதும் திட்பமானதுமான கூற்று - அவையான விண்ணப்பத்தின் விடயப்பொருளான பொருள் கைப்பற்றப்பட்டு இழப்பிக்கப்பட்டமை சட்டமுறையற்றது என்பதாகும். அத்துடன் நீதிமன்றமானது

(i) அத்தகைய கைப்பற்றுகையும் இழப்பிப்பும் சட்டமுறையற்றது ;

(ii) அத்தகைய பொருள் உடனடியாக வழக்காளிக்குத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும் ;

எனத் தீர்மானித்தலும் வேண்டும்.

(4) ஏதேனும் பொருளின் கைப்பற்றுகை, இழப்பிப்பு என்பன தொடர்பான ஏதேனும் விண்ணப்பத்தின்மீது ஏதேனும் நீதிமன்றத்திலான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில், அந்த உட்பிரிவின்கீழான அத்தகைய கைப்பற்றுகையும், இழப்பிப்பும், சட்டமுறையற்றது என்பதை எண்பிக்கும் பொறுப்பு வழக்காளிமீது இருத்தல் வேண்டும்.

(5) ஒரு பொருள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அரசுக்கு இழப்பிக்கப்படும்போது அத்துடன்

(அ) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரம்பெற்ற அலுவலரால் செய்யப்பட்ட அத்தகைய பொருளின் கைப்பற்றுகைக்கு எதிராக, (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் மாவட்ட நீதிமன்றத்திற்கு அந்த உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக விண்ணப்பம் எதுவும் செய்யப்படாதபோதும் ; அல்லது

(ஆ) அந்த உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமெதுவும் மாவட்ட நீதிமன்றத்தினால் தள்ளுபடிசெய்யப்பட்டும் அத்துடன் அத்தகைய தள்ளுபடிக்கெதிராக அதற்கென அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள்ளாக மேன்முறையீடு எதுவும் செய்யப்படாத போதும் ;

(இ) அந்த உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றின் தள்ளுபடிக்கெதிராகச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டபோதும்

அதிகாரசபையானது, அத்தகைய பொருளை உடைமையில் எடுத்தல் வேண்டும் என்பதுடன், அது தகுதியானதெனக் கருதுகின்றவாறு அதனை விற்கலாம் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கலாம்.

(6) இப்பிரிவினதும், 49 ஆம் பிரிவினதும் நோக்கங்களுக்காக ஒரு பொருள் என்பது -

(அ) ஏதேனும் இரத்தினக்கல் அல்லது ஆபரணம் ;

(ஆ) ஏதேனும் காசு ;

(இ) இரத்தினக்கற் கைத்தொழிலையும், ஆபரணக் கைத்தொழிலையும் கொண்டுநடாத்துவதில் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படக்கூடியதான எதுவும் ;

என்று பொருள்படும்.

51. (1) எந்த ஆள் -

(அ) இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை, அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்றாரோ ;

(ஆ) அதிகாரசபையின் உறுப்பினராக, அலுவலராக அல்லது சேவையாளராக இருந்துகொண்டு அல்லது இச்சட்டத்தின்கீழ் அவரது தத்துவங்களைப் பிரயோகித்தலுடன் அல்லது கடமைகளைப் புரிதலுடன் தொடர்புபட்டு அவரால் பெறப்பட்ட ஏதேனும் தகவலை, எந்தவொரு நோக்கத்திற்காக இச்சட்டத்தின்கீழ் அத்தகைய தகவலை வெளிப்படுத்தும்படி அந்த ஆள் அதிகாரமளிக்கப்பட்டுள்ளாரோ அந்தவொரு நோக்கம் தவிர்ந்த ஏதேனும் நோக்கத்திற்காக அந்த ஆளெவருக்கும் வெளிப்படுத்துகின்றாரோ ;

(இ) ஏதேனும் ஆபரணத்தில் ஏதேனும் குறியை, அத்தகைய குறியானது அதிகாரசபையினால் அல்லது அதிகாரச் சபையின் அங்கீகாரத்துடன் செய்யப்பட்ட அதிகாரக் குறியீடு என நம்பச்செய்யும் முன்னத்துடன் செய்கின்றாரோ ;

அந்த ஆளொவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றவரான ஒவ்வோர் ஆளும் நீதிவான் ஒருவர் முன்னரான விளக்கத்தின்பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்துலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஐந்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவினால் புரியப்படுமிடத்து –

(அ) அத்தகைய ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது அலுவலரும்,

(ஆ) அத்தகைய ஆட்கள் குழு குழுமம் ஒன்றாயின் அந்தக் குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்

அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் ஒருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர், அத்தகைய தவறானது தமது அறிவில்லாமலேயே புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கான அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் பயன்படுத்தினார் என எண்பித்தால் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

(4) அதிகாரசபையினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவரான எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், இச்சட்டத்தின்கீழான தவறுகள் தொடர்பில் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கும் நோக்கத்திற்காக, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் 136 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குட்பட்ட பகிரங்க அலுவலராகக் கருதப்படுதல் வேண்டும்.

52. அதிகாரசபையானது, இச்சட்டத்தின் கீழான தவறெதுவும் புரியப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு திறத்தவர்களின் சம்மதத்துடன், அந்தந்தத் தவறுக்காக விதிக்கப்படற்பாலதான ஆகக்கூடிய குற்றப்பணத்தின் மூன்றில் ஒரு பங்கை விஞ்சாததொரு பணத்தொகைக்கு அத்தகைய தவறை இணக்கலாம். இப்பிரிவின்கீழ் தவறொன்றை இணக்குவதில் அதிகாரசபையால் பெறப்படும் எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

53. (1) அமைச்சரானவர், எக்கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்றனவோ அல்லது எது தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றனவோ அது தொடர்பாக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அது அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று

அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்படக் கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாகப் பாராளுமன்றத்தின் முன்பு அங்கீகாரத்துக்கெனக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அதற்கான அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எந்தத் தேியன்று அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எதுவும் நீக்கப்பட்டதோ அந்தத் தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

54. (1) ஆயிரத்துத்தொழாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இரத்தினக்கற் கூட்டுத்தாபனச் சட்டம் இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றது.

(2) மேற்கூறப்பட்ட சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப்பினும் –

(அ) நியமனத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் வரவிலுள்ள எல்லாப் பணங்களும், அந்தத் தேதியிலிருந்து, இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபையின் நிதியத்திற்குக் கைமாற்றப்படுதல் வேண்டும் ;

(ஆ) நியமனத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தினால் சொந்தம் கொள்ளப்பட்டிருந்த அல்லது பயன்படுத்தப்பட்ட எல்லா அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களும் நியமனத் தேதியிலிருந்து அதிகார சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் ;

(இ) நியமனத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளனவான அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் எல்லாக் கடன் பொறுப்புக்களும் நியமனத் தேதியிலிருந்து அதிகார சபையின் கடன்களும் பொறுப்புக்களுமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஈ) அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகச் செய்து கொள்ளப்பட்டு நியமனத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளனவான எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும், அத்தேதியிலிருந்து அதிகாரசபையினால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் எனக் கருதப்படுதல் வேண்டும் ;

(உ) அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதற்கு எதிராக தொடுக்கப்பட்டு நியமனத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறாதிருக்கும் எல்லா வழக்குகளும் வழக்கு

நடவடிக்கைகளும் அத்தேதியிலிருந்து அதிகாரசபையினால் அல்லது அதற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளுமென கருதப்படுதல் வேண்டும் ;

(ஊ) அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்திற்குச் சாதகமாக அல்லது அதற்கு எதிராகத் தகுதிவாய்ந்த ஏதேனும் நீதிமன்றத்தினால் செய்துகொள்ளப்பட்டு அல்லது ஆக்கப்பட்டு, நியமனத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று திருப்பதியற்றனவையாகவிருக்கும் எல்லாத் தீர்வைகளும், கட்டளைகளும், அத்தேதியிலிருந்து அதிகாரசபைக்குச் சாதகமாக அல்லது அதற்கு எதிராக செய்துகொள்ளப்பட்டனவாக அல்லது ஆக்கப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறே வலுவுக்கிடவும் படலாம் ;

(எ) நியமனத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று –

(i) அதிகாரசபையுடன் அல்லது பாகம் III இனால் இதன் கீழ் தாபிக்கப்படும் ஏதேனும் நிறுவனத்தில் தொழில் வழங்கப்பட்டு அத்தகைய முனைவை ஏற்றுக் கொண்டவரான இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் நியமனத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று அவர்களுக்கு ஏற்புடைத்தனவான தொழிலின் நியதிகள் நிபந்தனைகளை விடக் குறைந்த அனுகூலமற்றவையான அத்தகைய நியதிகள் மீதும் நிபந்தனைகள் மீதும் தொழிலுக்கமர்த்தப்படுதல் வேண்டும் ;

(ii) அதிகாரசபையுடன் அல்லது III ஆம் பாகத்தின் கீழ் தாபிக்கப்படும் ஏதேனும் நிறுவனத்தில் தொழில் வழங்கப்படாதவர்களான அல்லது அத்தகைய அதிகாரசபையுடன் அல்லது நிறுவனத்துடன் தொழில் வழங்கப்பட்டு அத்தகைய முனைவை ஏற்றுக் கொள்ளாதவர்களான அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய உரித்துடையவராதல் வேண்டும்.

(எ) 1971 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட, நியமத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவுள்ளனவும் அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இராதவையுமான ஒவ்வொரு விதியும், ஒவ்வொரு துணைவிதியும் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஐ) 1971 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டதாகக் கருதப்பட்ட அத்துடன் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலுள்ள உரிமங்கள் எல்லாம் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமங்களாக கருதப்படுதல் வேண்டும்.

55. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி –

"தவிசாளர்" என்பது 8 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அதிகார சபையின் தவிசாளர் என்பது பொருள்படும் ;

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது 23 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருள்படும் ;

"பணச்சபை" என்பது பணச்சபைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை என்று பொருள்படும்.

"எவையேனும் இரத்தினக்கற்களை ஏற்றுமதி செய்தல்" என்பது, நாணய மாற்றுக் கட்டுப்பாட்டாளரினால் விதிக்கப்பட்ட வரையறைகளுக்கமைய, எவரேனும் ஆள்மீது அணியப்பெற்றுள்ள அல்லது அத்தகைய ஆளினால் கொண்டு செல்லப்படும் இரத்தினக்கற்கள் தவிர்ந்த ஏதேனும் இரத்தினக்கல்லை இலங்கைக்கு வெளியே கடல் மார்க்கமாக அல்லது வான் மார்க்கமாகக் கொண்டு செல்லும் அல்லது எடுத்துச் செல்லவும் அல்லது கொண்டு செல்லப் பண்ணுதல் அல்லது இலங்கைக்கு வெளியே எடுத்துச் செல்லப்பண்ணுதல் என்று பொருள்படும் ;

"ஏதேனும் ஆபரண இறக்குமதி" என்பது நாணயக் கட்டுப்பாட்டாளரினால் விதிக்கப்பட்ட வரையறைகளுக்கமைய ஏதேனும் ஆள் மீது விதிக்கப்பட்ட வரையறைகளுக்கமைய ஏதேனும் ஆள்மீது அணியப்பெற்றுள்ள இரத்தினக்கற்கள் தவிர்ந்த அல்லது அத்தகைய ஆளினால் இலங்கைக்குள் கடல் மார்க்கமாக அல்லது வான்மார்க்கமாக ஆபரணங்களை இறக்குமதி செய்தல் அல்லது கொண்டுவருதல் அல்லது இறக்குமதி செய்வித்தல் அல்லது கொண்டு வருவித்தல் என்று பொருள்படும்.

"இரத்தினக்கல்" என்பது அருங்கல் ஒன்றை அல்லது ஓரளவு அருங்கல் ஒன்றை அல்லது ஏதேனும் இரத்தினக்கல்லின் அல்லது ஏதேனும் அத்தகைய கல்லின் உற்பத்திப் பொருளை உள்ளடக்குகிறது ;

"இரத்தினக்கற் கைத்தொழில்" என்பது பின்வரும் வகுப்புக்களில் அல்லது விவரணத்தின் எல்லா அல்லது அவற்றுள் ஏதேனும் வர்த்தகம் அல்லது வியாபாரம் எதுவும் என்று பொருள்படும் :-

(அ) இரத்தினக்கற்களுக்கான அகழ்தல் அல்லது இரத்தினக்கல் அகழ்ந்தெடுத்தல் ;

(ஆ) இரத்தினக்கற்களை இலங்கையினுள் இறக்குமதி செய்தல் அல்லது இலங்கையிலிருந்து இரத்தினக்கற்களை ஏற்றுமதி செய்தல்.

(இ) இரத்தினக்கற்களை விற்றல், கொள்வனவு செய்தல் அல்லது வழங்குதல் ;

(ஈ) இரத்தினக்கற்களை மதிப்பிடுதல் ;

(உ) இரத்தினக்கற்களை வெட்டுதல், மெருகிடுதல், செதுக்குதல் அல்லது அவற்றைப் பொறித்தல் ;

(ஊ) இரத்தினக்கற்களை வெப்பப்பரிகரிப்புச் செய்தல், அல்லது இரத்தினக்கற்களின் பெறுமதியை வேறேதேனும் முறையில் மேம்படுத்தல் ;

(எ) இரத்தினக் கற்களைப் பரிசோதித்தலும், சான்றளித்தலும் அத்துடன் அரும் உலோகங்களைத் தரநிர்ணயம் செய்தலும் ;

(ஏ) இரத்தினக்கல் பட்டை தீட்டும் தொழில்; பயிற்சி.

“ஆபரணம்” என்பது ஆளுக்குரிய அலங்காரத்திற்கென அரும் உலோகங்களிலிருந்து அல்லது அருங் கற்களிலிருந்து ஆக்கப்பட்ட ஏதேனும் அருங்கலைப் பொருள் என அல்லது அத்தகைய உலோகத்தினால் அல்லது அத்தகைய கல்லினால் செய்யப்பட்ட ஏதேனும் அருங்கலைப் பொருள் என்று பொருள்படும்.

“ஆபரணக் கைத்தொழில்” என்பது ஆளுக்குரிய அலங்காரத்திற்கென அரும் உலோகங்களை கலவை அளவு மதிப்பீடு செய்தல் தொடர்பாக அல்லது அரும் உலோகத்திலிருந்து அல்லது அரும் கற்களிலிருந்து அலங்காரப் பொருட்களின் உற்பத்தி தொடர்பான ஏதேனும் வியாபாரம் அல்லது தொழில் அல்லது அத்தகைய அருங்கலைப்பொருட்களின் ஏற்றுமதி என்று பொருள்படும் ;

“அட்டவணையிடப்பட்ட எழுத்திலான சட்டம்” என்பது இச்சட்டத்திற்கான அட்டவணையில் அப்போதைக்குக் குறித்துரைக்கப்பட்ட எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் என்று பொருள்படும்.

“அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனம்;” என்பது 1971 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் என்று பொருள்படும்.

56. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## அட்டவணை

### எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள்

முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 2 (6), 8, 17, 18, 20, 77(1), 78, 87, 88 அத்துடன் 89.

கனிப்பொருட்கள் சுரங்கங்கள், கற்குழிகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 2, 3, 7, 8, 9, 10, 11, 12, 15, 16, 17(2), 18, 19, 39, 41, 42 அத்துடன் 49.

# 1993 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இரத்தினக்கல் வியாபார வங்கிச் சட்டம்

*[1993, ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**இரத்தினக்கல் வியாபார வங்கி ஒன்றைத் தாபிப்பதற்கும் இரத்தினக்கற் கைத்தொழிலுக்கும் ஆபரணக் கைத்தொழிலுக்கும் கடன் வசதி கிடைப்பதை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காகவும் அத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காகவும், அத்துடன் இவற்றோடு தொடர்புபட்ட அல்லது இவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

1. இச்சட்டமானது, 1993 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இரத்தினக்கல் வியாபார வங்கிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக் கூடியவாறான (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### இரத்தினக்கல் வியாபார வங்கியைத் தாபித்தல்

2. வங்கியின் பங்குதாரர்களாகவுள்ள ஆட்களைக் கொண்ட (இதனகத்துப்பின்னர் "வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இரத்தினக்கல் வியாபார வங்கி" என அழைக்கப்படவேண்டிய வங்கியொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

3. வங்கியானது 2 ஆம் பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரில் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினை ஒன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும். அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

4. வங்கியின் தலைமை அலுவலகமானது கொழும்பில் அமைந்திருத்தல் வேண்டும். வங்கியின் பணிப்பாளர்கள் சபையானது அவசியமானதெனக் கருதக்கூடியதாக, வங்கியின் அத்தகைய கிளை அலுவலகங்கள் இலங்கையில் உள்ள இடங்களிலும் வெளிநாட்டிலும் தாபிக்கப்படலாம்.

5. (1) வங்கியின் அலுவல்களின் நிருவாகமும் முகாமையும் பின்வருவோரைக் கொண்டுள்ள (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர்கள் சபைக்கு உரித்தாக்கப்படல் வேண்டும்.

(அ) பணச்சபையால் பெயர்குறித்து நியமிக்கப்படும் இரு ஆட்கள் அவர்களுள் ஒருவர் சபையின் தவிசாளராகவிருத்தல் வேண்டும் ;

(ஆ) 1993 ஆம் ஆண்டின் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையின் தவிசாளர் ;

(இ) பங்குதாரர்களைக் கொண்ட நிதிசார் நிறுவனத்திற்கு தெரிவு செய்யப்பட்ட ஆள் ஒருவர் ; அத்துடன்

(ஈ) இரத்தினக்கற் கைத்தொழிலில் அல்லது ஆபரணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்களிடையேயிருந்து பணச்சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஆள் ஒருவர்.

(2) இச்சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகள் சபையின் பணிப்பாளர்களது பதவிக்காலம், அத்தகைய பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்படற்பாலதான ஊதியம், சபையின் கூட்டங்கள் அத்துடன் வங்கியின் இலச்சினை என்பன தொடர்பில் பயனுடையதாதல் வேண்டும்.

(3) சபையானது, இச்சட்டத்தினால் வங்கிக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்கு குறித்தொதுக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

6. இலங்கையில் இரத்தினக்கற் கைத்தொழிலுக்கும் ஆபரணக் கைத்தொழிலுக்கும் கடன்வசதி கிடைப்பதனை ஊக்குவிப்பதும் இக்கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தலும், இரத்தினக்கல் கைத்தொழிலுக்கும் ஆபரணக் கைத்தொழிலுக்கும் கடன்கொடுக்கும் வர்த்தக வங்கிகளுக்கு மீள் நிதியளிப்பு வசதிகளை ஏற்பாடு செய்தலும் இரத்தினக்கற் கைத்தொழிலிலும் ஆபரணக் கைத்தொழிலிலும் ஈடுபட்டுள்ள ஆட்களுக்குக் கடன்வசதிகளை ஏற்பாடு செய்தலும் வங்கியின் பணிகளாதல் வேண்டும்.

7. வங்கியானது அதன் பணிகளை நிறைவேற்றுகையில் பின்வரும் தத்துவங்கள், கடமைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம் அத்துடன் புரியலாம் :-

(அ) (இரத்தினக்கற்கள் ஆபரணம் அல்லது அரிய உலோகம் உட்பட) பிணைப்பொறுப்புக்கள்மீதும் ஆதனம் மீதும் கடன்களும் ஏனைய கடன்வசதிகளும் வழங்குதல் ; அத்துடன் இரத்தினக்கற் கைத்தொழிலின் அல்லது ஆபரணக் கைத்தொழிலின் அபிவிருத்திக்கு ஒன்றில் பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல்,

உசிதமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகளில் ஆட்களுக்கு அல்லது கம்பெனிகளுக்கு கடன்கொடுத்தல் ;

(ஆ) நடைமுறை, வைப்பு, சேமிப்பு மற்றும் பிற கணக்குகளைத் திறத்தல், பேணுதல் அத்துடன் முகாமை செய்தல் ;

(இ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான, இரத்தினக்கற்கள், அரும் உலோகங்கள் அத்துடன் ஆபரணங்கள் என்பனவற்றை வாங்குதல், சேர்த்து வைத்தல் அத்துடன் விற்றல் அல்லது அத்தகைய வேறு வணிகத்தில் ஈடுபடுதல் ;

(ஈ) இரத்தினக்கற் கைத்தொழிலில் அல்லது ஆபரணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பெனியின் கையிருப்புக்கள், பங்குகள், முறிகள் அத்துடன் ஏற்கத்தகு சாதனங்களின் வழங்கலின் கொள்வனவுக்கு ஒப்பப்பணம் செலுத்துதல் அல்லது பொறுப்பேற்றல்.

(உ) இரத்தினக்கற் கைத்தொழில் அல்லது ஆபரணக் கைத்தொழில் சார்பாக, இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே விலைக்கேள்வி முறிகளையும் உத்தரவாதங்களையும் வழங்குதல் ;

(ஊ) இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியே இரத்தினக்கற்கள் அல்லது ஆபரணம் ஏற்றுமதிசெய்தல் அல்லது இறக்குமதி செய்தல் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழும் நாணயமாற்று உண்டியல்களை அல்லது வாக்குறுதிப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுதல், சேகரித்தல், கழிப்பனவு செய்தல், மீள் கழிப்பனவு செய்தல், விற்றல் அல்லது கொடுத்துமாற்றுதல், அத்துடன் அத்தகைய உண்டியல்களுக்கு அல்லது வாக்குறுதிப் பத்திரங்களுக்கு எதிராக இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கடன்களும் முற்பணங்களும் வழங்கல் ;

(எ) இரத்தினக்கற் கைத்தொழில் அல்லது ஆபரணக் கைத்தொழில் தொடர்பான கடன் கடிதங்களைத் திறத்தல், வழங்குதல், உறுதிப்படுத்துதல் அல்லது புறக்குறிப்பிடுதல் அல்லது அதன்கீழ் வரையப்பட்ட உண்டியல்களை அல்லது வேறு ஆவணங்களைக் கொடுத்துமாற்றுதல் அல்லது சேகரித்தல் ;

(ஏ) இரத்தினக்கற் கைத்தொழிலில் அல்லது, ஆபரணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆளுக்கு, இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல் ;

(ஐ) இரத்தினக்கற் கைத்தொழிலில் அல்லது ஆபரணக் கைத்தொழிலில் பயன்படுத்துவதற்காக பூரண கொள்வனவு அல்லது குத்தகை அடிப்படையில் இயந்திரத்தையும் உபகரணத்தையும் ஏற்றுமதி செய்வதற்கு அல்லது இறக்குமதி செய்வதற்கு நிதியளித்தல் ;

(ஒ) தற்போதுள்ள வெளிநாட்டு நாணயமாற்றுச் சட்டங்களுக்கமைய, அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான வெளிநாட்டு நாணய மாற்றுக்களை வாங்குதல் அல்லது விற்றல் அல்லது அத்தகைய வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் ;

(ஓ) இரத்தினக்கற் கைத்தொழிலில் அல்லது ஆபரணக் கைத்தொழிலில் பயன்படுத்துவதற்காக ஏதேனும் அசையும் அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல் அல்லது கொள்வனவு செய்தல் ;

(ஔ) அதன் கடன்களின் பாகத்தை அல்லது முழுவதையும் இரத்தினக்கற் கைத்தொழிலில் அல்லது ஆபரணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள கம்பெனிகளினால் வழங்கப்படும் முறிகளாக அல்லது தொகுதிக்கடன் முறிகளாக மாற்றுதலும் இரத்தினக்கற் கைத்தொழிலில் அல்லது ஆபரணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள கம்பெனிகளால் வழங்கப்பட்டுள்ள முறிகளுக்கும் தொகுதிக்கடன் முறிகளுக்கும் ஒப்பப்பணம் செலுத்துதல் ;

(க) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வர்த்தக வங்கிகளில் அல்லது வேறு ஏதேனும் நிதி நிறுவனத்தில் கணக்குகளைத் திறத்தலும் இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியே ஏதேனும் வர்த்தக வங்கியுடன் அல்லது வேறு ஏதேனும் நிதி நிறுவனத்துடன் ஏதேனும் முகவராண்மை ஒழுங்கைச் செய்து கொள்ளுதல் அல்லது முகவராக அல்லது நேரொத்த நபராகச் செயலாற்றுதல் ;

(ங) அதனால் வழங்கப்பட்ட கடன்கள் அல்லது முற்பணங்கள் தொடர்பிலான ஏதேனும் சாதனத்தை பிரதிபயனுக்காகக் கைமாற்றுதல் ;

(ச) இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியே கடன்வகையாக அல்லது அதன் பணிகளை நிவைேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான வேறுவகையாக அத்தகைய பணத்தொகைகளைத் திரட்டுதல் ;

(ஞ) வியாபார நோக்கத்திற்கான இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களின் மேலதிகக் கையிருப்புக்களை அல்லது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசிய மாகக்கூடியவாறான வேறுவகையாக வைத்திருத்தல் ;

(ட) சோந்தை ஒன்றை அடைவு ஒன்றை அல்லது வேறு ஒப்பந்த உரிமை ஒன்றை வலியுறுத்துவதற்கு அவசியமான அளவுக்கு பங்குத் தொகுதிகளை, பங்குகளை, முறிகளை, அல்லது தொகுதிக் கடன் முறிகளை கொள்வனை செய்தல் அவற்றிற்கு ஒப்பப்பணம் செலுத்துதல் அவற்றில் முதலீடு செய்தல் ;

(ண) இரத்தினக்கற் கைத்தொழிலை அல்லது ஆபரணக் கைத்தொழிலைத் திட்டமிடுதல், மேம்படுத்துதல், அபிவிருத்திசெய்தல் தொடர்பான ஆராய்ச்சி, அளவீட்டு, தொழினுட்ப பொருளாதார அல்லது வேறு ஆய்வுகளைப் பொறுப்பேற்றலும் அவற்றிற்கு நிதியளித்தலும் ;

(த) இரத்தினக்கல் கைத்தொழிலுக்கும் ஆபரணக் கைத்தொழிலுக்கும் எவ்வகையினதுமான தொழினுட்ப, சந்தைப்படுத்தும் நிருவாக அத்துடன் நிதியுதவி அளித்தல் ;

(ந) வங்கியின் பணிகளை நிறைவேற்றுவது தொடர்பிலான செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய துணைநிலை நிறுவனங்களை அமைத்தல் ;

(ப) இரத்தினக்கற் கைத்தொழில் அல்லது ஆபரணக் கைத்தொழில் தொடர்பில், தகவலைச் சேகரித்தல், திரட்டித் தொகுத்தல் அத்துடன் பரப்புதல், சந்தைப்படுத்துதல் அத்துடன் வரவில் வைத்தல் ;

(ம) சந்தைப்படுத்துதல் அத்துடன் இரத்தினக்கல் மற்றும் ஆபரணம் ஆகியனவற்றை மதிப்பிடுதல், வங்கித்தொழில் அத்துடன் முகாமைத்துவம், அத்துடன் அவற்றோடு இணைந்த விடயங்கள் ஆகியவற்றில் பயிற்சி வசதிகளை அளித்தல் ;

(ய) இரத்தினக்கல் அல்லது ஆபரணக் கைத்தொழிலின் அபிவிருத்திக்காகப் பணச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கிக்கு அல்லது நிதி நிறுவனத்துக்கு மீள நிதியளிப்பு வசதிகளை வழங்குதல் ;

(ர) வங்கியின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் பணிகளை நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே செய்துகொள்ளல் அல்லது நிறைவேற்றுதல் ;

(ல) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளல், வைத்திருத்தல் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடகுவைத்தல், விற்றல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(வ) பொது முகாமையாளர் ஒருவரை நியமித்தல். இவர் வங்கியின் பிரதம நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும்; அத்துடன், வங்கியின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல் ;

(அஅ) சகாய நிதியெமான்றைத் தாபித்தலும், அத்துடன் வங்கியினால் ஊழியத்தில் அமர்த்தப்பட்டுள்ள அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் நலன்புரி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள், வீடுகள், விடுதிகள் அத்துடன் அதேபோன்ற வேறு தங்குமிடங்களை அளித்தலும் ;

(ஆஆ) அதன் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் தொடர்பில் அவர்களின் நியமனம், வேலை உயர்வு, ஊதியம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, நடத்தை அத்துடன் அவர்களுக்கு லீவு வழங்குதல் தொடர்பில் விதிகளை ஆக்குதல் ;

(இஇ) வங்கி அலுவல்களின் நிருவாகம் தொடர்பில் விதிகள் ஆக்குதல் ; அத்துடன்

(ஈஈ) வங்கியின் பணிகளை உகந்தமுறையில் நிறைவேற்றுவதற்கு வசதியளிப்பதற்கு அவசியமானதெனச் சபை அபிப்பிராயப் படுகின்ற எல்லா வேறு கருமங்களையும் செய்தல்.

## பாகம் II

### நிதி

8. (1) வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனமானது, ஒவ்வொரு பங்கும் நூறு ரூபா கொண்ட பங்காக, இருபது மில்லியன் பங்குகளாகப் பிரிக்கப்பட்ட இரண்டாயிரம் மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்.

(2) வங்கியின் ஆரம்ப வழங்கப்பட்ட மூலதனமானது, ஒவ்வொரு பங்கும் நூறு ரூபாவைக் கொண்ட பங்காக, ஐந்து மில்லியன் பங்குகளாகப் பிரிக்கப்பட்ட ஐந்நூறு மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்.

(3) வங்கியானது, (1) ஆம் உட்பிரிவுக்கு அமைய, பணச்சபையின் அங்கீகாரத்துடன், வங்கியின் மூலதனத்துக்கு மேலும் உதவு தொகையாக காலத்துக்குக் காலம் அத்தகைய பணத்தொகைகளைத் திரட்டலாம்.

9. (1) பணச்சபையானது, வங்கியினது பங்குகளின் ஆரம்ப வழங்கலுக்காக விண்ணப்பங்களைக் கோரிப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அத்துடன்அத்தகைய விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டதன்மேல், பின்வரும் விகிதாசாரங்களில் பணச்சபைக்கு, நிதி நிறுவனங்களுக்கு அத்துடன் பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது நியதிச்சட்ட நிறுவனம் எதற்கும் பங்குகளைக் குறித்தொதுக்குதல் வேண்டும்.

| | |
|---|---|
| பணச்சபை :- | வழங்கப்பட்ட அத்தகைய மூலதனப் பங்குகளின் ஐம்பது சதவீதம். |
| பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள் தவிர்ந்த நிதி நிறுவனங்கள் - | வழங்கப்பட்ட அத்தகைய மூலதனப் பங்கின் முப்பது சதவீதம். |
| நிதி நிறுவனங்கள் அல்லது பணச்சபை தவிர்ந்த பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள் அல்லது நியதிச் சட்ட நிறுவனங்கள் - | வழங்கப்பட்ட அத்தகைய மூலதனப் பங்கின் இருபது சதவீதம். |

(2) பங்குகளின் ஆரம்ப வழங்கலின் பின்னர், வங்கியினது பங்குகளது குறித்தொதுக்கல் அல்லது கைமாற்றல் எதுவும், பணச்சபையின் எழுத்திலான அங்கீகாரத்தோடு தவிர, வங்கியினால் செய்யப்படுதல் ஆகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பங்குகள் குறித்தொதுக்கப்படுவதற்கான அல்லது கைமாற்றப்படுவதற்கான அங்கீகாரத்தை வழங்குகையில், பணச்சபையானது, (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, வங்கியின் பங்கு வைத்திருத்தலில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விகிதாசாரங்கள் பேணப்படுவதை உறுதிசெய்வதற்கு முயலுதல் வேண்டும்.

(4) பணச்சபையானது, நியமித்த தேதியிலிருந்து இரண்டாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பின்னர், பணச்சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய விதத்தில் அதன் பங்குகளைப் பொதுமக்களுக்கு வழங்குதல் வேண்டும்.

10. பங்குதாரர் எவரினதும் பொறுப்பானது, அவரின் பங்குகளின் மேல் செலுத்தப்படாத தொகைக்கு, (அவ்வாறு எதுவும் இருந்தால்) வரையறுக்கப்படுதல் வேண்டும்.

11. (1) (அ) வங்கியின் மூலதனத்துக்கு ஒப்பப்பணங்களாக ;

(ஆ) வங்கியின் பணிகளை நிறைவேற்றுகையில் ;

(இ) வங்கியின் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும் பணிகளைப் புரிகையிலும் ; அத்துடன்

(ஈ) வங்கியின் தொழிலையும் அலுவல்களையும் கொண்டு நடாத்துகையில் ;

வங்கியினால் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும், வங்கியின் நிதியில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) வங்கியின் பணிகளை நிறைவேற்றுவதிலிருந்து எழுகின்ற அல்லது அவை நிறைவேற்றுவது தொடர்பில் பெறப்படுகின்ற ;

(ஆ) வங்கியின் தத்துவங்கள் பிரயோகப்படுவதிலிருந்து, அத்துடன் கடமைகள் புரியப்படுவதிலிருந்து எழுகின்ற அல்லது அவை பிரயோகிக்கப் படுவதுடன் அத்துடன் புரியப்படுவது தொடர்பில் உறப்படுகின்ற ;

(இ) வங்கியின் தொழிலும் அலுவல்களும் கொண்டு நடாத்தப்படுவதிலிருந்து எழுகின்ற அல்லது கொண்டு நடாத்தப்படுவது தொடர்பில் உறப்படுகின்ற ;

வங்கியின் நிதிச்செலவுகள் அல்லது பொறுப்புக்கள், வங்கியின் நிதியின் மேல் பொறுப்பிக்கப்படல் வேண்டும்.

12. வங்கியானது, தனது பணிகளை நிறைவேற்றுவதற்கு அத்துடன் தனது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு, கடமைகளைப் புரிவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைக் கடன் என்ற வகையில் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே திரட்டலாம்.

13. வங்கியானது, காலத்துக்குக் காலம் அரசாங்கத்திடமிருந்து கடன் வாங்கலாம். அத்துடன் அரசாங்கம், அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கு அமைய, திரட்டு நிதியத்திலிருந்து பணத்தொகை எதனையும் காலத்துக்குக் காலம், வங்கிக்கு வழங்கலாம்.

14. (1) வங்கியானது –

(அ) சேகரிப்பாளர் விடயங்களாக இரத்தினக்கற்களைப் பேணிப் பாதுகாப்பதற்கும் ;

(ஆ) வியாபாரம் செய்யும் நோக்கத்துக்காகவும் சந்தையில் இரத்தினக்கற்களின் விலையை நிலைப்படுத்தும் நோக்குடனும் இரத்தினக்கற்களைக் களஞ்சியப்படுத்தும்

நோக்கத்துக்காக இரத்தினக்கல் ஒதுக்கு ஒன்றை தாபித்தல் வேண்டும்.

(2) வங்கியானது, பணச்சபையின் முன்னங்கீகாரத்தோடு –

(அ) பேணிப்பாதுகாக்கும் நோக்கத்துக்காக, இரத்தினக்கல் ஒதுக்குக்காகக் கொள்வது விரும்பத்தக்கது என அது அபிப்பிராயப்பட்டால் இரத்தினக்கற்கள் எவற்றையும் கொள்வனவு செய்யலாம் ;

(ஆ) இரத்தினக்கல் ஒதுக்கில் வைத்திருக்கப்பட்டுப் பேணிப் பாதுகாக்கப்படுவதற்காக, உள்ளூர் அல்லது வெளிநாட்டு

ஒழுங்கமைப்புகளிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் இரத்தினக்கற்கள் எவற்றையும் ஏற்றுக்கொள்ளலாம்.

(இ) ஓராம் உட்பிரிவின் (ஆ) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இரத்தினக்கற்கள் எவ்ற்றையும் விற்கலாம் கொடுத்து மாற்றலாம் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கலாம்.

(3) சபையானது, இரத்தினக்கல் ஒதுக்கின் முகாமை அத்துடன் நிருவாகம் என்பனபற்றி, பணச் சபையின் அங்கீகாரத்துடன் விதிகளை ஆக்கலாம்.

இரத்தினக் கல் ஒதுக்க நிதியம்

15. (1) வங்கி (இதனகத்துப் பின்னர் "ஒதுக்க நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இரத்தினக்கல் ஒதுக்க நிதியெமான்றைத் தாபித்து, அதனைப் பேணலாம்.

(2) ஒதுக்க நிதியத்திற்குப் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும்.

(அ) பிரிவு 14 (2) (இ) என்பதன்கீழ் எவையேனும் இரத்தினக்கற்களை விற்பதிலிருந்து தேறும் எவையேனும் பணத்தொகைகள் ;

(ஆ) ஒதுக்க நிதியத்திற்குக் கொடுக்கப்பட்டு வங்கியால் பெறப்படும் எல்லா மானியக் கொடைகளும் ; அத்துடன்

(இ) வேறேதேனும் கணக்கின் வரவிலிருக்கும், நிதியங்களிலிருந்து மாற்றப்படும் எல்லா பணத்தொகைகளும்.

(3) நிதியத்திலிருந்து பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) இரத்தினக்கல் ஒதுக்கத்தின் கொள்வனவுக்குத் தேவைப்படும் எல்லா பணத்தொகைகள் : அத்துடன்

(ஆ) இரத்தினக்கல் ஒதுக்கத்தைப் பேணுவதில் வங்கியினால் உறப்பட்ட ஏதேனும் செலவினங்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவையான எல்லாப் பணத்தொகைகள்.

(4) (அ) இரத்தினக்கல் ஒதுக்கத்திலுள்ள இரத்தினக்கற்களின் கையிருப்பு, ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் மதிப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய மதிப்பிடுகை மூலம் தேறும் எவையேனும் மீள்மதிப்பீட்டு இலாபங்கள் அல்லது, உறப்படும் எவையேனும் மீள்மதிப்பீட்டு நட்டங்கள் "இரத்தினக்கல் ஒதுக்க மீள்மதிப்பீட்டுக் கணக்கு" எனப் பெயரிடப்பட்டு சபையினால் பேணப்பட வேண்டியதான சிறப்புக் கணக்கொன்றுக்கு வரவு வைக்கப்படுதல் அல்லது பற்று வைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) சபையானது, ஒதுக்க நிதியம் இரத்தினக்கல் ஒதுக்க மீள மதிப்பீட்டுக் கணக்கு ஆகியவற்றின் நிருவாகம், முகாமை என்பன தொடர்பாக பணச்சபையின் அங்கீகாரத்துடன் விதிகளை ஆக்கலாம்.

16. (1) சபையானது, பெறுமான மதிப்பீட்டாளரின் குழாமொன்றை அமைப்பதற்குத் தகுந்தவர்களெனக் கருதுகின்றவாறான அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களை ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கும் நியமித்தல் வேண்டும்.

(2) அத்தகைய குழாத்தின், உறுப்பினர் ஒவ்வொருவரினதும் கடமை பின்வருவனவாதல் வேண்டும் :-

(i) வங்கியினால் 14 ஆம் பிரிவின் கீழ் கொள்வனவு செய்யப்படவுள்ள இரத்தினக்கற்களைப் பரிசோதனை செய்து மதிப்பீடு செய்தல் ;

(ii) வங்கியிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் கடன் தொடர்பிலான அல்லது வேறு கடன்வசதி தொடர்பிலான பிணைப் பொறுப்பாகக் கொடைமுனையப்பட்ட இரத்தினக்கற்கள் ஆபரணங்கள் என்பனவற்றின் பெறுமானத்தை மதிப்பீடு செய்தல் அத்துடன் அத்தகைய இரத்தினக்கற்கள், ஆபரணங்கள் என்பன தொடர்பான அறிக்கைகளை சபை அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தும் போது அதற்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(3) பெறுமான மதிப்பீட்டாளர் குழாத்திலுள்ள உறுப்பினர் ஒருவர் இறந்தாலன்றி, அல்லது முன்னதாகக் குழாத்திலிருந்து அகற்றப்பட்டாலன்றி, அல்லது குழாத்திலிருந்து விலகினாலன்றி நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக்காலப்பகுதியொன்றிற்குக் குழாத்தின் உறுப்பினர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

(4) பின்வருவனவற்றை ஆளும் விதிகள் சபையினால் ஆக்கப்படலாம் –

(அ) உறுப்பினர்களின் நியமனம், பெறுமான மதிப்பீட்டாளர்களின் குழாத்திலிருந்து பதவி துறத்தல் அத்துடன் பதவியகற்றுகை மற்றும் அத்தகைய உறுப்பினர்களுக்குக் கொடுபடற்பாலதான ஊதியம் ;

(ஆ) பெறுமான மதிப்பீட்டு அறிக்கைகளைச் சபைக்குச் சமர்ப்பித்தல்.

17. வங்கியின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

18. (1) கணக்காய்வாளர் தலைமையதிபதியானவர், சபை தீர்மானிக்கக் கூடியவாறான பன்னிரண்டு மாதக் காலப்பகுதியொன்றை விஞ்சாததான அத்தகைய கால இடைவெளிகளில் வங்கிக் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் தலைமையதிபதியானவர், வங்கியின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கென தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரை அல்லது கணக்காய்வாளர்களை நியமிக்கலாமென்பதுடன், வங்கிதொடர்பில் கணக்காய்வாளர்

தலைமையதிபதியின் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்காகவும், நிறைவேற்றுவதற்காகவும், அவரது அல்லது அவர்களது சேவைகளையும் தாம் பயன்படுத்த உத்தேசித்திருப்பதாக அத்தகைய கணக்காய்வாளருக்கு அல்லது கணக்காய்வாளர்களுக்கு அறிவித்தலும் வேண்டும் ; அத்துடன் அதன்மீது அத்தகைய கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்கள், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பணிப்பு, கட்டுப்பாடு என்பனவற்றின் கீழ் செயலாற்றுதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்படும் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒவ்வொருவரும், கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) கணக்காய்வாளர் வங்கியின் கணக்குகளைப் பரிசீலித்து, ஐந்தொகையினதும் வேறு கணக்குகளினதும் செம்மைபற்றி நிச்சயப்படுத்துதல் வேண்டுமென்பதுடன்,

(அ) அவர் தேவைப்படுத்திய எல்லாத் தகவலையும் விளக்கங்களையும் அவர் பெற்றுக்கொண்டாரா இல்லையா ; அத்துடன்

(ஆ) அவரது அபிப்பிராயத்தில், அறிக்கையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்தொகையானது வங்கி ஏடுகளினால் காட்டப்பட்டவாறான விளக்கங்களின்படியும், அவரது அறிவுக்கு எட்டியவரையிலும் வங்கியின் அலுவல்களின் உண்மையானதும் செம்மையானதுமான விவரமொன்றை வெளிக்காட்டத்தக்க விதமாக முறையாக எழுதப்பட்டுள்ளதா அல்லவா

என்பது பற்றியும் சபைக்கு அறிக்கையிடுதலும் வேண்டும்.

(5) ஐந்தொகையினதும் வேறேதேனும் கணக்கினதும் செம்மையை நிச்சயப்படுத்தும் நோக்கத்திற்காகக் கணக்காய்வாளர் தலைமையதிபதியானவர், சபையின் அனுமதியுடன் வங்கியின் ஏதேனும் கிளை தொடர்பில், வங்கியின் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டனவும், சபையினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட வங்கி அலுவலரினால் செம்மையானதென அத்தாட்சிப்படுத்தப்பட்டனவுமான கணக்குப் புத்தகங்களிலிருந்தான பிரதிகள் அல்லது பொழிப்புகள் எவற்றையும் ஏற்றுக் கொள்ளலாம்.

(6) இப்பிரிவில் “தகைமைபெற்ற கணக்காய்வாளர்” என்பது –

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர்

ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடைமையில் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப்பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் உள்ளவர்களைக் கொண்ட கணக்காளர் குழுமம் ஒன்று என்று பொருளாகும்.

19. (1) சபையானது, ஏதேனும் ஆண்டு தொடர்பாக, கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையைப் பெற்றுக்கொண்டதன் மேல், அந்த ஆண்டு தொடர்பிலான பின்வரும் ஆவணங்கள் ஒவ்வொன்றினதும் பிரதியொன்றை, அமைச்சருக்கும், எல்லாப் பங்குதாரர்களுக்கும் அனுப்பச் செய்வித்தல் வேண்டும். :-

(அ) கணக்காய்வாளர் – தலைமையதிபதியின் அறிக்கை ;

(ஆ) ஐந்தொகை ;

(இ) இலாப நட்டக் கணக்கு ; அத்துடன்

(ஈ) வங்கியின் வேலைபற்றிய விபரத்தைத் தருகின்றதான தவிசாளரின் அறிக்கை.

(2) அமைச்சரானவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட ஆவணங்களின் பிரதிகளைப் பாராளுமன்றத்தின் முன்பு முன்வைத்தல் வேண்டும்.

20. வங்கிக்குச் சொந்தமான எவையேனும் பணங்கள், சபை தீர்மானிக்கின்றவாறான அத்தகைய விதத்தில் சபையினால் முதலீடு செய்யப்படலாம்.

## பாகம் III

## பொது

21. வங்கியின் ஒவ்வொரு பணிப்பாளரும், வங்கியின் எல்லா அலுவலர்களும் அத்துடன் சேவையாளர்களும், அவர்களது கடமைகளைச் செய்யத் தொடங்குவதற்கு முன்பு வங்கியின் அலுவல்களுடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் கண்டிப்பான இரகசியத்தைக் கடைப்பிடிக்கத் தம்மைப் பிணித்துக்கொள்ளும் வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளிப்படுத்துகை மூலம் –

(அ) சட்டநீதிமன்றமொன்றினால், அல்லது அத்தகைய கருமங்கள் தொடர்புறுத்துகின்ற ஆளினால், அல்லது ஆட்கள் குழுவினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தும்போதும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகும் பொருட்டும் ;

தவிர, அவரது கடமைகளையும், பணிகளையும் புரிகையிலும் நிறைவேற்றுகையிலும், அவரது அறிவுக்கு எட்டக்கூடிய கருமம் எதனையும் வெளிவிடாதிருக்கத் தம்மைப் பிணித்துக்கொள்ளுதல் வேண்டும்.

22. (1) இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்ததாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக வங்கியின் எவரேனும் பணிப்பாளருக்கு அலுவலருக்கு, சேவையாளருக்கு, அல்லது முகவருக்கு எதிராக, துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் அமைதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்துக்கு முன் வங்கியினால் அல்லது வங்கிக்கு எதிரான துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் உறப்பட்ட ஏதேனும் செலவுகள், வங்கியின் நிதியிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் வங்கிக்குச் செலுத்தப்பட்ட அல்லது வங்கியினால் அறவிடப்பட்ட ஏதேனும் செலவுகள் வங்கியின் நிதிக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது, அவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தின்முன் அவருக்கெதிராகக் கொண்டு வரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான, ஏதேனும் அத்தகைய ஆளினால் உறப்பட்ட, ஏதேனும் செலவுகள், அத்கைய செயல் நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்மானித்தால், அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அத்தகைய செலவுகள் அறவிடப்பட்டாலன்றி, அத்தகைய ஆளுக்கு, வங்கியின் நிதியிலிருந்தும் செலுத்தப்படுதல் வேண்டும்.

23. கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்திலுள்ளது எதுவும் , வங்கிக்கு வருமதியான ஏதேனும் கடனுக்கு ஏற்புடையதாகாது.

24. (1) பணச் சட்டத்தின் 117 ஆம் பிரிவிலுள்ளது எது எப்படியிருப்பினும் பணச்சபைக்கு வங்கியின் மூலதனத்திற்கு ஒப்பப்பணம் செலுத்துவதற்கும் ஏதேனும் பங்கை, வாக்குறுதிப் பத்திரத்தை அல்லது வங்கியின் வேறு பிணையைக் கொள்வனவு செய்வதற்கு உத்தரவாதமளிப்பதற்கு அல்லது பிணையாக ஏற்றுக்கொள்வதற்கு, இத்தால் தத்துவமளிக்கப்படுகின்றது.

(2) ஒவ்வொரு நிதி நிறுவனத்தை, பகிரங்கக் கூட்டுத்தாபனத்தை அல்லது நியதிச் சட்டமுறையான நிறுவனங்களைத் தாபிப்பதில், ஏதேனும் சட்டத்தில் அல்லது சாதனத்திலுள்ளதற்கு முரணாக எது எப்படியிருப்பினும்,

அத்தகைய நிதி நிறுவனமும், பகிரங்கக் கூட்டுத்தாபனமும் நியதிச் சட்டமுறையான நிறுவனமும் வங்கியின் மூலதனத்திற்கு, ஒப்பப்பணம் செலுத்துவதற்குத் தத்துவமுடையதாகக் கருதப்படுதல் வேண்டும்.

25. வங்கியானது, பணச் சட்டத்தின் நோக்கங்களுக்கென ஒரு கடன் நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன் பிரகாரம், சபை காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தொகையை மத்திய வங்கியின் நடுத்தர, நீண்டகாலத் தவணை கடன் நிதியிலிருந்து கடனாகப் பெறலாம்.

26. வங்கிக்கெதிராகக் கொண்டு வரப்படும் ஏதேனும் நடவடிக்கையில் சபையின் எவரேனும் பணிப்பாளருக்கெதிராக, ஆளுக்கு அல்லது ஆதனத்திற்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

27. (1) இச்சட்டத்தினால், எந்தக் கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்பட அதிகாரமளிக்கப்பட்டனவோ அல்லது தேவைப்படுத்தப்பட்டதோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பில் அல்லது அந்த எவையேனும் கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதவையாகவிராத விதிகளை சபை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் சபையினால் ஆக்கப்பட்ட விதி எதுவும், அமைச்சரினாலும் பாராளுமன்றத்தினாலும் அங்கீகரிக்கப்பட்டாலன்றிப் பயனுடையதாகாது.

28. (1) (அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியை மீறுகின்ற

(ஆ) வங்கியின் ஒரு பணிப்பாளராக அலுவலராக அல்லது சேவையாளராக இருந்து இச்சட்டத்தின் கீழ் தனது தத்துவங்களைப் பிரயோகித்தல் அல்லது தனது கடமைகளைப் புரிதல் தொடர்பாக அவருக்குக் கிடைக்கப்பெற்ற ஏதேனும் தகவலை, இச்சட்டத்தினால் அத்தகைய தகவலை எந்த ஒரு நோக்கத்தின் பொருட்டு வெளிப்படுத்துவதற்கு அவருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அந்த நோக்கம் தவிர்ந்த ஏதேனும் நோக்கத்திற்கு எவரேனும் ஆளுக்கு வெளிப்படுத்துகின்ற ;

ஆள் எவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிகின்ற ஒவ்வொரு ஆளும், நீதிவான் ஒருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிப்பதன் மேல், நூறு ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலத்திற்கான மறியற்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(3) ஆட்கள் குழுமம் ஒன்றினால் இச்சட்டத்தின் கீழான தவறொன்று புரியப்படுமிடத்து -

(அ) அவ் ஆட்கள் குழு, கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவொன்றானால், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளர் அல்லது அலுவலர் ;

(ஆ) அவ்வாட்கள் குழு ஒரு குழுமமாகவிருக்குமிடத்து, அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளர்,

அத்தவறுக்குக் குற்றவாளியாவர் எனக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒரு பணிப்பாளர் அல்லது ஒரு அலுவலர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர், தனது அறிவில்லாமல் அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அத்தகைய எல்லா விழிப்புக்கவனத்தை அவர் எடுத்திருந்தார் என அவர் எண்பிப்பாரானால், அத்தகைய தவறுக்கு குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

(4) சபையானது, (1) ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்று எந்த சந்தர்ப்பத்தில் புரியப்பட்டதென்பதைக் கவனத்திலெடுத்து, ஐம்பதாயிரம் ரூபாவிற்கு விஞ்சாத ஒரு தொகைக்கு அத்தகைய தவறை இணக்கலாம். இப்பிரிவின் கீழ் தவறொன்றை இணக்குவதில் சபையினால் பெறப்பட்ட எல்லாத் தொகையும் வங்கியின் நிதிக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

29. வங்கியானது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் கருத்தெல்லையினுள் ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகக் கருதப்படுதல் வேண்டும்.

30. பணச் சபையானது, காலத்திற்குக் காலம், வங்கிக்கு கடமைகளைப் புரிவதற்கும், வங்கியின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் தேவையான பொது அல்லது விசேட பணிப்புக்களை எழுத்தில் வழங்கலாம் என்பதுடன் அத்தகைய பணிப்புக்களுக்கு இணங்கியொழுகுதல் வங்கியின் கடமையாதலும் வேண்டும்.

31. சபையின் ஒவ்வொரு உறுப்பினரும், வங்கியின் ஒவ்வொரு அலுவலரும், சேவையாளரும், தண்டனைச் சட்டக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக, அதன் கருத்தெல்லையினுள் பகிரங்க சேவையாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

32. (1) ஒரு பணிப்பாளர் அல்லது சபையினால் வெளிப்படையாக அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆள் தவிர்ந்த எவரேனும் ஆள், இச் சட்டத்தின் கீழ் வங்கிக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன் மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களை, பணிகளை, அல்லது கடமைகளைப் பிரயோகிக்கையில், நிறைவேற்றுகையில், புரிகையில் சபையினால் ஒப்பமிடப்பட வேண்டுமென அல்லது நிறைவேற்றப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்படும் எவையேனும் ஆவணங்களுக்கு ஒப்பமிடப்படுதலோ அல்லது அவற்றை நிறைவேற்றுதலோ ஆகாது.

(2) பணிப்பாளரினால், அல்லது பற்றுச்சீட்டுக்களை ஒப்பமிடுவதற்குச் சபையினால் வெளிப்படையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் ஒப்பமிடப்பட்ட அத்தகைய பற்றுச் சீட்டுக்கள், வங்கிக்குச் செலுத்தப்பட்ட தொகைகளின் பயனுறுதியுள்ள பொறுப்பு விடுவிப்பாகுதல் வேண்டும்.

33. ஒரு கடனுக்கான ஏதேனும் பிணை தொடர்பில், வங்கியினால் செய்யப்பட வேண்டுமென்ற, அல்லது நிறைவேற்றப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் சாதனம் அல்லது, வங்கியினால், வங்கித்தொழில் தொடர்பில் ஆக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனம், அத்துடன் வங்கியின் சார்பாக, எவரேனும் வேறு ஆளினால் ஆக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனம், 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரை வரிச் சட்டத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும், அச்சட்டத்தின் கீழ் தீர்வைக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

34. வங்கியின் பணமாக அல்லது வேறு வகையில் செய்யப்பட்ட ஒவ்வொரு நன்கொடையும், 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு நிதிக்குப் பணமாகவோ அல்லது வேறுவகையாகவோ செய்யப்பட்ட ஒரு நன்கொடையாகக் கருதப்படுதல் வேண்டும்.

35. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

“கடனுதவி” என்பது, எதிர்பாராப் பொறுப்பொன்றை ஏற்றுக் கொள்வதற்கான பொறுப்பு உட்பட, ஏதேனும் கடன் அல்லது மேலதிகப்பற்று அல்லது ஏதேனும் கடனை அல்லது மேலதிகப் பற்றை அல்லது முற்பணத்தை வழங்குவதற்கான ஏதேனும் பொறுப்பு என்று பொருளாகும் ;

“மத்திய வங்கி” என்பது, பணச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும் ;

“இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்” என்பது, (165 ஆம் அத்தியாயமான) அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் எனப் பொருளாகும் ;

“நிதிக் கம்பனி” என்பது, 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிச் சட்டத்தின் கீழ், நிதித் தொழிலை நடாத்துவதற்கெனப் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பனி எனப் பொருளாகும் ;

“நிதி நிறுவனம்” என்பது –

(அ) உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கி,

(ஆ) ஒரு நிதிக் கம்பனி,

(இ) தேசிய சேமிப்பு வங்கி,

(ஈ) இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி,

(உ) அரச ஈட்டு முதலீட்டு வங்கி,

(ஊ) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் எனப் பொருளாகும் :

"இரத்தினக்கல்" என்பது ஓர் அருங்கல் அல்லது ஓரளவான அருங் கல்லொன்றையும் அத்துடன் இரத்தினக் கல்லின் அல்லது அத்தகைய ஏதேனும் கல்லின் உற்பத்திப் பொருள் என்பதை உள்ளடக்கும் ;

"இரத்தினக்கற் கைத்தொழில்" என்பது பின்வரும் வகுப்புகள் அல்லது விவரணத்தின் எல்லா அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றை உள்ளடக்கும் ஏதேனும் வர்த்தகம் அல்லது வியாபாரம் எனப் பொருளாகும்.

(அ) இரத்தினக்கற்களுக்கான அகழ்தல் அல்லது இரத்தினக்கற்களை அகழ்ந்தெடுத்தல் ;

(ஆ) இரத்தினக்கற்களை இலங்கைக்குள் இறக்குமதி செய்தல் அல்லது இலங்கைக்கு வெளியே இரத்தினக்கற்களை ஏற்றுமதி செய்தல் ;

(இ) இரத்தினக்கற்களை விற்றல், கொள்வனவு செய்தல் அல்லது வழங்குதல் ;

(ஈ) இரத்தினக்கற்களை மதிப்பிடுதல் ;

(உ) இரத்தினக்கற்களை வெட்டுதல், மெருகிடுதல், அல்லது செதுக்குதல், அல்லது பொறித்தல் ;

(ஊ) இரத்தினக்கற்களைப் பரிகரிப்பு செய்தலும் வேறெல்லா வகையிலும் இரத்தினக்கல்லின் பெறுமதியை அதிகரித்தலும் ;

(எ) இரத்தினக்கற்களைப் பரிசோதித்து, சான்றுபடுத்தலும் அரும் உலோகங்களை ஆராய்தல் ; அத்துடன்

(ஏ) பட்டை தீட்டுதற் பயிற்சியளித்தல் ;

"ஆபரணம்" என்பது ஆள் சார் அலங்காரத்திற்காக அரும் உலோகங்களிலிருந்து அல்லது அரும் கற்களிலிருந்து செய்யப்பட்ட ஏதேனும் அருங்கலைப் பொருளென அல்லது அத்தகைய உலோகங்களை அல்லது அத்தகைய கற்களைக் கொண்டு செய்யப்பட்ட ஏதேனும் அருங்கலைப் பொருள் எனப் பொருளாகும் ;

"ஆபரணக் கைத்தொழில்" என்பது, ஆளுக்குரிய அலங்காரத்திற்கென அரும் உலோகங்களை கலவை அளவு மதிப்பீடு செய்தல் தொடர்பாக அல்லது அரும் உலோகத்திலிருந்து அல்லது அருங் கற்களிலிருந்து அலங்காரப் பொருட்களின் உற்பத்தி தொடர்பான ஏதேனும் வியாபாரம் அல்லது தொழில் அல்லது அத்தகைய அருங்கலைப் பொருட்களின் ஏற்றுமதி என்று பொருள்படும்.

"உரிமம் பெற்ற வர்த்தக வங்கி" என்பது வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் வரும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கி எனப் பொருளாகும்.

“பணச்சபை” என்பது பணச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை எனப் பொருளாகும் ;

“இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி” என்பது 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி எனப் பொருளாகும்.

“தேசிய சேமிப்பு வங்கி” என்பது 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கத் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி எனப் பொருளாகும் ;

“பகிரங்கக் கூட்டுத்தாபனம்” என்பது கம்பனிகள் கட்டளைச்சட்டம் நீங்கலாக ஏதேனும் எழுத்து மூலமான சட்டத்தால் அல்லது அத்தகைய சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதுவும் அல்லது தாபிக்கப்படுவதுவும் மானியக்கொடை, கடன் அல்லது வேறு வகையில் அரசாங்கத்தால் முழுமையாக அல்லது பகுதியாக நிதி அல்லது மூலதனம் வழங்கப்படுவதுமான ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழுமம் எனப் பொருளாகும் ;

“அரச ஈட்டு முதலீட்டு வங்கி” என்பது 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட அரச ஈட்டு முதலீட்டு வங்கி எனப் பொருளாகும் ;

“நியதிச் சட்ட நிறுவனம்” என்பது ஒரு நியதிச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஒரு பகிரங்க கூட்டுத்தாபனமாயிராத ஏதேனும் குழுமம் அல்லது நிறுவனம் எனப் பொருளாவதுடன், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதுவும் பங்கு மூலதனத்தின் ஐம்பது சதவீதத்திற்கும் கூடுதலாக இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமாயிருப்பதுவுமான ஒரு கம்பனியையும் உள்ளடக்கும்.

36. இச்சட்டத்தின், சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## அட்டவணை

### சபை தொடர்பிலான ஏற்பாடுகள்

1. பின்வரும் சந்தர்ப்பங்களில் ஓர் ஆள் சபையின் பணிப்பாளராகப் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு, தெரிவு செய்யப்படுவதற்கு அல்லது பணிப்பாளராகத் தொடர்ந்திருப்பதற்குத் தகவீனமுடையவராதல் வேண்டும் ;

(அ) அவர் பாராளுமன்ற, ஏதேனும் மாகாண சபை அல்லது உள்ளூர் அதிகார சபை உறுப்பினராக இருந்தால் அல்லது அத்தகைய உறுப்பினராக வந்தால் ;

(ஆ) அவர் ஓர் இலங்கைப் பிரசையாக இல்லாதிருந்தால் அல்லது இல்லாதொழிந்தால் ;

(இ) இலங்கையில் அல்லது ஏதேனும் பிறநாட்டில் வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தின் கீழ் சித்தசுவாதீனமில்லாதவர் எனக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால் ;

(ஈ) இலங்கையில் அல்லது ஏதேனும் பிறநாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட மறியற் தண்டனையை அவர் அனுபவித்தால்.

2. பிரிவு 5 (1) (ஆ) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தவிசாளரும் அத்துடன் பணிப்பாளரும் நீங்கலாக, மற்றைய பணிப்பாளர்கள் ஒவ்வொருவரும் இறப்பினால், பதவி துறத்தலால் அல்லது பதவியினின்றும் அகற்றப்படுவதால் தமது பதவியை முன்னமேயே வறிதாக்கினாலன்றி, மூன்று வருடகாலப் பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், விடயத்திற்கேற்ப மீளப் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது மீளத் தெரிவு செய்யப்படுவதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

ஆயின், இறப்பினால், பதவி துறத்தலால் அல்லது பதவியினின்றும் அகற்றப்படுவதால் தமது பதவியை வறிதாக்கிய ஒரு பணிப்பாளரின் இடத்திற்குப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது தெரிவுசெய்யப்பட்ட ஒரு பணிப்பாளர் அவர் எந்தப் பணிப்பாளரைப் பின்னுறுகின்றாரோ அந்தப் பணிப்பாளரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

பிரிவு 5 (1) (ஆ) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பணிப்பாளர் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையின் தவிசாளராக அவர் இருக்கும் வரையில் பதவி வகிக்க வேண்டும்.

3. சுகயீனம் அல்லது இலங்கையில் இல்லாதிருத்தல் அல்லது வேறு ஏதேனும் காரணத்தின் நிமித்தம் எவரேனும் பணிப்பாளர் ஏதேனும் காலப்பகுதியின்போது தமது கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருந்தால் அவரது இடத்திற் பதிற் கடமையாற்றுவதற்கு மற்றோர் ஆள் பெயர் குறித்து நியமிக்கப்படலாம் அல்லது தெரிவு செய்யப்படலாம்.

4. பிரிவு 5 (1) (அ) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒரு பணிப்பாளர், பணச் சபையால் குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காகப் பதவியினின்றும் அகற்றப்படலாம்.

5. தவிசாளருக்கு முகவரியிட்டு எழுதப்பட்ட கடிதத்தின் மூலம் பணிப்பாளர்கள் (தவிசாளரும் பகுதி 5 (1) (ஆ) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அத்துடன் பணிப்பாளர் நீங்கலாக) தமது பதவியை துறக்கலாம் என்பதுடன் அத்தகைய பதவி துறத்தல், அது தவிசாளரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

6. பணச்சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, நிதிகளிலிருந்து அத்தகைய ஊதியம் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படலாம்.

7. (1) சபையானது ஆகக்குறைந்தது மாதமொரு முறையாவது கூட வேண்டும். அத்துடன் இச்சட்டத்தின் கீழ் சபையின் பணிகளைக் கலந்துரையாடும் நோக்கத்திற்கு அவசியமாயிருக்கக் கூடியவாறாக அடிக்கடி அது கூடவும் வேண்டும்.

(2) ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் மூன்று பணிப்பாளர்களாதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைவாகச் சபையின் கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் தொடர்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை சபையால் ஆக்கப்பட்ட விதிகளால் தீர்மானிக்கப்பட்டவாறானதாதலும் வேண்டும்.

(3) ஏதேனும் கூட்டத்தில், தீர்மானத்திற்கான எல்லாப் பிரச்சினைகளும் சமூகமளித்திருக்கும் பணிப்பாளர்களில் பெரும்பான்மையானோரின் வாக்கால் தீர்மானிக்கப்படல் வேண்டும். வாக்குகள் சமமாக இருக்கும் விடயத்தில் தலைமை தாங்கும் பணிப்பாளர் அறுதியிடும் வாக்கு ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

8. பணிப்பாளர்களிடையே வெற்றிடமொன்று உள்ளது என்ற காரணத்தால் மட்டும் அல்லது அத்தகைய எவேரனும் பணிப்பாளரின் நியமனத்தில் ஏதேனும் குறை உள்ளது என்ற காரணத்தால் மட்டும் சபையின் செயற்பாடு அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படலாகாது.

9. (1) வங்கியின் இலச்சினை தவிசாளரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

(2) வங்கியின் இலச்சினை சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) சபையின் அனுமதியுடனும் இரண்டு பணிப்பாளர்களின் முன்னிலையிலும் அல்லாமல் வங்கியின் இலச்சினை ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படலாகாது. அவ்விரு பணிப்பாளர்களும் தாம் பிரசன்னமாயிருந்ததற்கு அத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் ஒப்பமிடல் வேண்டும்.

(4) வங்கியின் இலச்சினை எந்தெந்தச் சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டதுவோ அந்தந்தச் சாதனங்களினதும் ஆவணங்களினதும் பதிவேடு ஒன்றைச் சபை பேணுதல் வேண்டும்.

10. (1) தவிசாளரின் பதவிக்காலம் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அவர் தவிசாளராக நியமிக்கப்பட்ட தேதியன்றிலிருந்து நான்கு வருடங்களாக இருக்க வேண்டும்.

(2) பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் தவிசாளரின் பதவி வறிதாகுமிடத்து, பணச்சபையானது பிரிவு 5 (1) (அ) இன் நியதிகளின்படி, அவ்வாறு பதவியை வறிதாக்கிய தவிசாளரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்திற்கு பதவி வகிப்பதற்காக வேறோர் ஆளை நியமிக்க வேண்டும்.

(3) பணச் சபைக்கு விலாசமிடப்பட்ட ஒரு கடிதத்தின் மூலம் தவிசாளரானவர் தமது பதவியைத் துறக்கலாம் என்பதுடன், பணச் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டதிலிருந்து அத்தகைய பதவி துறத்தல் பயனுறவும் வேண்டும்.

(4) சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தவிசாளர் தலைமைதாங்க வேண்டும். தவிசாளர் சமூகமளிக்காதவிடத்து ஏனைய பணிப்பாளர்களிலிருந்து ஒரு தவிசாளரை பணச் சபை தெரிவு செய்ய வேண்டும்.

11. வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட அல்லது வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள ஏதேனும் கடனில் அல்லது ஒப்பந்தத்தில் அக்கறை கொண்டுள்ள ஒரு பணிப்பாளர் தனது அக்கறையின் தன்மை பற்றிச் சபையின் கூட்ட மொன்றில் வெளிப்படுத்த வேண்டும். அத்தகைய கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்பில் வெளிப்படுத்துகை பதியப்பட வேண்டுமென்பதுடன், அத்தகைய கடன் அல்லது ஒப்பந்தம் தொடர்பான அத்தகைய சபையின் ஏதேனும் தீர்க்காலோசனையில் அல்லது தீர்மானத்தில் அத்தகைய பணிப்பாளர் பங்கேற்கவும் கூடாது.

# 1993 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

*[1993, திசெம்பர் மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

1994 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்நிதியாண்டின்போது அரசாங்கத்தின் குறித்த முயற்சிகள் தொடர்பில் நிதிகள் ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளின் செலவினத்திற்கு அந்நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச் செய்வதற்கும், திரட்டு நிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் மேற்சொல்லப்பட்ட கருமங்களுடன் தொடர்பான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இச்சட்டத்தில், "நிதியாண்டான 1994 ஆம் ஆண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும், 1994 சனவரி 01 ஆம் தேதி தொடங்கி 1994 திசெம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கான சேவைக்காக பதின்மூவாயிரத்து நானூற்றி எண்பத்தி ஐந்து கோடி நாலு இலட்சத்து இருபதினாயிரம் ரூபாவென மதிப்பிடப்படும் அரசாங்கத்தின் செலவினத் தொகையானது செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்கமின்றி –

(அ) திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தின் அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து வழங்கப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளிலிருந்தும்; அத்துடன்

(ஆ) அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ வெளிநாட்டிலோ திரட்டப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியிலிருந்தும், பெறப்படல் வேண்டும். எவ்வாறாயினும் அத்தகைய வரும்படியின் கூட்டுமொத்தத் தொகையானது ஆறாயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றிஎட்டுக்கோடி எழுபத்து ஐந்து இலட்சத்து ஐயாயிரம் ரூபாவினை விஞ்சுதலாகாது. இதன்கண் முன்னர் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பதின்மூவாயிரத்து நானூற்றி எண்பத்தி ஐந்து கோடி நாலு இலட்சத்து இருபதினாயிரம் ரூபா கொண்ட பணத்தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப் பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அரசாங்கத்துக்காகவும், அதன் சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி பயனுடையனவாதல் வேண்டும்.

3. (1) நிதியாண்டான 1994 ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் அரசாங்கம் பெறும் பெறுகைகள் அத்தகைய முயற்சியின் கணக்கிற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு வரவுவைக்கப்படும் பெறுகைகளின் கூட்டு மொத்தத் தொகையானது, அந்த அட்டவணையின் III ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லையிலும் பார்க்கக் குறைந்ததாக இருத்தலுமாகாது. அத்தகைய முயற்சியின் தேறிய மேன்மிகை ஏதேனுமிருப்பின் அத்தேறிய மேன்மிகையானது நிதியாண்டான 1994 ஆம் ஆண்டு முடிவுற்ற பின்னர் ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான தேறிய மேன்மிகையைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காகப் பின்வரும் கட்டணங்கள், அவையாவன :-

(அ) முயற்சியினது வருமானத்திற்கு முறைப்படி பொறுப்பாக்கப்படற்பாலனவான, கொடுக்கப்பட்டனவாயினுஞ்சரி, அல்லது சேர்மானமானவையாயினுஞ்சரி, முயற்சியினது தொழிற்பாட்டு, தாபன, மற்றும் ஏனைய செலவுகள்; அத்துடன்

(ஆ) முயற்சியினது அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான சொத்தினது தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாடு.

என்பன ஒவ்வொரு முயற்சியின் வருமானத்திலும் எதிரீடு செய்யப்படல் வேண்டும்.

(3) நிதியாண்டான 1994 ஆம் ஆண்டின்போது இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியின்பேரிலும், அரசாங்கத்தால் உறப்படும் செலவினம், அந்த நிதி ஆண்டின்போது அத்தகைய முயற்சியிலிருந்து, அரசாங்கம் பெறும் பெறுகைகளிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். ஆனால், அத்தகைய செலவினம் அந்த அட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆக்ககூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

(4) நிதியாண்டான 1994 ஆம் ஆண்டின் முடிவில், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து நிலுவையாகவுள்ள பற்றுமீதி, அந்த அட்டவணையின் IV ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

4. நிதியாண்டான 1994 ஆம் ஆண்டின்போது எப்போதேனும் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் Iஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து அரசாங்கம் பெறும் பெறுகைகள், அத்தகைய முயற்சியின் மீது அரசாங்கத்தினால் உறப்பட்ட செலவினங்களைச் சமாளிப்பதற்குப் போதியனவாயிராவிடின், அமைச்சர் அத்தகைய செலவினத்திற்கு அவசியமென அவர் கருதும் அத்தகைய தொகைகள் முற்பணங்களாகத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து கொடுக்கப்படற் பாலதாதல் வேண்டுமெனக் காலத்துக்குக் காலம் கட்டளை மூலம் பணிக்கலாம்; எவ்வாறாயினும், அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்படும் பணத்தொகைகளின் கூட்டுமொத்தத் தொகை, அந்த அட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள செலவினங்களின் ஆகக்கூடிய எல்லையை விஞ்சாதிருத்தல் வேண்டும். அத்தகைய முயற்சி தொடர்பில் அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை அமைச்சரால் கட்டளைமூலம் பணிக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் திரட்டு நிதியத்துக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

5. (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, அந்த அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்தத் தலைப்பின் கீழும் தோன்றும் எந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும் மீண்டுவருஞ் செலவினத்திற்குக் குறித்தொதுக்கப்பட்டிருந்து, ஆனால் செலவு செய்யப்படாமலும் அல்லது செலவு செய்யப்படுதல் சாத்தியமில்லாமலும் இருக்கும் எவையேனும் பணங்கள், திறைசேரிச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரின் கட்டளை மூலம் அந்நிகழ்ச்சித் திட்டத்திற்குட்பட்ட ஆக்கப்பொருட் செலவினத்திற்கெனச் செய்யும் குறித்தொதுக்கலுக்கு அல்லது அத்தலைப்பிற்குட்பட்ட வேறேதேனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீண்டுவருஞ் செலவினத்தின் அல்லது மூலதனச் செலவினத்தின் குறித்தொதுக்கலுக்கும் கைமாற்றப்படலாம்.

(2) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பின் கீழுள்ள நிகழ்ச்சித்திட்டமெதன் கீழும் ஆக்கப்பொருட் செலவினத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள பணங்களெவையும் குறித்தொதுக்கலிலிருந்து கைமாற்றப்படல் ஆகாது.

6. (1) வரிகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்தும் பெறப்படும் பெறுகைகள், அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கு என எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகைகளையும் விடக் குறைவாயிருக்குமென; அல்லது

(2) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு முதலில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்படமாட்டாவென, அமைச்சர் திருப்திப்படுமிடத்து, திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழான செலவினத்திற்காக முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முழுமையாக அல்லது பகுதியளவில் அவர் மீளப்பெறலாம்.

7. (அ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் II ஆம் நிரையிலும் IV ஆம் நிரையிலும் V ஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆக்ககூடிய எல்லைகளுள் எதனையும் ;

(ஆ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் III ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைகளையும்,

அமைச்சர் அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு 1995 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டளை மூலம் வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம்.

இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை எதுவும், பாராளுமன்றத்தினாலான தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றிப் பயனுடையதாதலாகாது.

அத்தகைய கட்டளை எதுவும் அதன்கண் அவ்விதம் கூறப்பட்டிருந்தால், அதன்கண் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடியதும் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதிக்கு முந்தியதுமான அத்தகைய தேதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப்படல் வேண்டும்.

8. பாராளுமன்றமானது தீர்மானத்தின் மூலம் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையை, அந்த அட்டவணையின் தோதான நிரைகளுக்கு, ஏதேனும் முயற்சியையும், அத்துடன்

(அ) அத்தகைய முயற்சி தொடர்பான எல்லா ஆகக்கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும் ;

(ஆ) அத்தகைய முயற்சி தொடர்பிலான ஆகக்குறைந்த எல்லையையும்,

சேர்ப்பதன் மூலம் திருத்தலாம்.

9. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் சந்தர்ப்பத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1993 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம்

*[1993, திசெம்பர் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**[1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம் ]**

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கப் பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் விரிவுப் பெயரானது, "முறையே 1992 சனவரி 1 ஆம் தேதியன்றும், 1993 சனவரி 1 ஆம் தேதியன்றும் தொடங்கும் ஆண்டுகளுக்கு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "முறையே 1992 சனவரி 1 ஆம் தேதியன்றும், 1993 சனவரி 1 ஆம் தேதியன்றும் அத்துடன் 1994 சனவரி 1 ஆம் தேதியன்றும் தொடங்கும் ஆண்டுகளுக்கு" என்னும் சொற்களையும், எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "முறையே 1992 சனவரி 1 ஆம் தேதியன்றும் 1993 சனவரி 1 ஆம் தேதியன்றும் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும் என்னும் சொற்களுக்கும், எண்களுக்கும் பதிலாக, "முறையே 1992 சனவரி 1 ஆம் திகதியன்றும் 1993 சனவரி 1 ஆம் தேதியன்றும் அத்துடன் 1994 சனவரி 1 ஆம் தேதியன்றும் தொடங்கும் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டிற்கும்" என்னும் சொற்களையும், எண்களையும் இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(ஈ) அப்பொருளின் ஏற்றுமதி தொடர்பில் இலங்கையில் உள்ள ஏதேனும் வங்கியில் திறக்கப்பட்ட கடன் பத்திரமொன்று அல்லது அப்பொருளானது இலங்கையிலிருந்து உண்மையில் ஏற்றுமதி செய்யப்பட்டதென்பதற்கான வேறு ஆவணச்சான்று சமர்ப்பிக்கப்பட்டதன் மேல் ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்பட்டால், ஏற்றுமதியாளர் எவருக்கும் பொருள் எதுவும் விற்பனை செய்யப்பட்டதிலிருந்து கிடைக்கும் வருமானம்."

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. :-

"(இ) 1992, யூலை 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர், ஆனால் 1994, சனவரி 1 ஆம் தேதிக்கு முன் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும் -

(i) அக்காலாண்டின் முதன் மாதத்துக்கு அவ்வாளினால் பெறப்பட்ட மொத்த விற்பனவு வரவின் மூன்று சதவீதத்திற்குச் சமனான தொகையொன்று, அக்காலாண்டின் இரண்டாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ;

(ii) அக்காலாண்டின் இரண்டாம் மாதத்துக்கு அவ்வாளினால் பெறப்பட்ட மொத்த விற்பனவு வரவின் மூன்று சதவீதத்துக்குச் சமனான தொகையொன்று, அக்காலாண்டின் மூன்றாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் ; அத்துடன்

(iii) இப்பந்தியின் (i) ஆம் (ii) ஆம் உட்பந்திகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரினால் செலுத்தப்பட்ட தொகைகளின் கூட்டுமொத்தத்தைக் கழித்து அக்காலாண்டுக்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டுத் தொகை, அக்காலாண்டு முடிவை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ;

(ஈ) 1994, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும் -

(i) அக்காலாண்டின் முதல் மாதத்துக்கு அவ்வாளினால் பெறப்படும் மொத்த விற்பனவு வரவின் மூன்றரைச் சதவீதத்துக்குச் சமனான தொகையொன்று, அக்காலாண்டின் இரண்டாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ;

(ii) அக்காலாண்டின் இரண்டாம் மாதத்துக்கு அவ்வாளினால் பெறப்படும் மொத்த விற்பனவு வரவின் மூன்றரைச் சதவீதத்துக்குச் சமனான தொகையொன்று, அக்காலாண்டின் மூன்றாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ;

(iii) இப்பந்தியின் (i) ஆம் (ii) ஆம் உட்பந்திகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரினால் செலுத்தப்பட்ட தொகைகளின் கூட்டுமொத்தத்தைக் கழித்து அக்காலாண்டுக்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டுத் தொகை, அக்காலாண்டு முடிவை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்"

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(1) அப்பிரிவின் (i) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(1) வங்கி ஒவ்வொன்றும் -

(அ) ஏதேனும் இயைபான காலாண்டில் வரும் ஏதேனும் மாதத்தில் பொருளொன்றின் இறக்குமதியாளராக இச்சட்டம் ஏற்புடைத்தாகும் எவரேனும் ஆளினால் அதன் பொருட்டுச் செய்யப்படும் விண்ணப்பமொன்றின்மீது, அது ஏதேனும் கடன்பத்திரத்தைத் திறக்கும்போது, அத்தகைய ஆளிடமிருந்து -

(i) அத்தகைய கடன்பத்திரம் 1992 ஆகஸ்ட் 7 ஆம் தேதிக்கு முன் திறக்கப்பட்டிருக்குமிடத்து, அக்கடன் பத்திரத்தின் பெறுமதியின் ஒருசதவீதத்தை ;

(ii) அத்தகைய கடன்பத்திரம் 1992 ஆகஸ்ட் 7 ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின் ஆனால் 1994, சனவரி 1 ஆம் தேதிக்குமுன் திறக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய கடன்பத்திரத்தின் பெறுமதியின் மூன்று சதவீதத்தை ; அத்துடன்

(iii) அத்தகைய கடன் பத்திரம் 1994, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின் திறக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய கடன் பத்திரத்தின் பெறுமதியின் மூன்றரைச் சதவீதத்தை ;

(ஆ) (அத்தகைய வங்கியினால் அப்பொருள் தொடர்பில் கடன் பத்திரமொன்று திறக்கப்பட்டிருக்கும் பொருள் ஒன்றாக இல்லாதிருக்கின்ற) பொருள் ஒன்று தொடர்பிலான கொடுப்பனவு ஆவணங்களில் ஒன்று, இச்சட்டம் எவ்வாளுக்கு ஏற்புடைத்தாகுமோ அவ்வாளினால் 1994 சனவரியிலோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்கும் இயைபான ஏதேனும் காலாண்டில் வரும் ஏதேனும் மாதத்தில் சமர்ப்பிக்கப்படும் நேரத்தில் அத்தகைய பொருள் தொடர்பில் வங்கிக்கு அத்தகைய ஆவணம் சமர்ப்பிக்கப்பட்ட தேதியன்று வங்கியினால் கடன்பத்திரமொன்று திறக்கப்பட்டிருந்தால், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்க எத்தொகையைத் திரட்டுமாறு அத்தகைய வங்கி தேவைப்படுத்தப் பட்டிருக்குமோ அத்தொகைக்குச் சமனான தொகை ஒன்றை அத்தகைய ஆளிடமிருந்து, திரட்டுதல் வேண்டும் ; அத்துடன், அவ்வாறு திரட்டப்பட்ட தொகையை அத்தொகை எம்மாதத்தின்போது திரட்டப்பட்டதோ, அம்மாதத்தை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர், ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்ட அத்தகைய படிவத்திலான வெளிப்படுத்துகை யொன்றுடன் ஆணையாளர்தலைமையதிபதிக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்."

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "அத்தொகை எந்தக் கடன்பத்திரம் தொடர்பில் திரட்டப்பட்டதோ அந்தக் கடன்பத்திரம் தொடர்பான இறக்குமதிப் பொருட்பட்டியலில் புறக்குறிப்பொன்றைச் செய்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "விடயத்துக்கேற்றவாறு, அத்தொகை எந்தக் கடன்பத்திரம் அல்லது (i) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கொடுப்பனவு ஆவணம் தொடர்பில் திரட்டப்பட்டதோ அந்தக் கடன்பத்திரம் அல்லது ஆவணம் தொடர்பான இறக்குமதிப் பொருட்பட்டியலில் புறக்குறிப்பொன்றைச் செய்தல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, "மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் v ஆம், viii ஆம், ix ஆம் x ஆம் அத்துடன் xii ஆம் அத்தியாயங்களின் ஏற்பாடுகளும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் v ஆம் viii ஆம், ix ஆம், x ஆம், xii ஆம் அத்துடன் xivஅ ஆம் அத்தியாயங்களின் ஏற்பாடுகளும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "ஆணையாளர் தலைமையதிபதி", "ஆள்" மற்றும் "காலாண்டு" என்னும் சொல்லமைப்புகளுக்குப் பதிலாக "ஆணையாளர் தலைமையதிபதி" மற்றும் "காலாண்டு" என்னும் சொல்லமைப்புகளை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) "உற்பத்தியாளர்" என்பதற்கான வரைவிலக்கணத்தை அடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-

"ஆள்" என்பது, கம்பனியொன்றை அல்லது ஆட்கள் குழுவொன்றை அல்லது அரசாங்கத் திணைக்களம் எதனையும் உள்ளடக்கும், ஆனால் ஐக்கிய நாடுகள் சபையினையோ அல்லது அத்தகைய ஒழுங்கமைப்பின் ஏதேனும் விசேடத் தன்மை வாய்ந்த முகவர் நிலையம் எதனையுமோ அல்லது ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தின் இராஜதந்திர தூதுக்குழுவினையோ அல்லது அத்தகைய தூதுக்குழுவின் இராஜதந்திர பணியாட்டொகுதியினரின் உறுப்பினர் எவரையுமோ உள்ளடக்காது.

8. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :-

| "அட்டவணை காலாண்டு | (பிரிவு 3) வீதம் |
|---|---|
| 1992 சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கும் காலாண்டுக்கு | 1 சத வீதம். |
| 1992 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் காலாண்டுக்கு | 2.3 சத வீதம். |
| 1992, யூலை 1 ஆம் தேதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்கி, ஆனால் 1994, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னுள்ள ஒவ்வொரு காலாண்டுக்கும் | 3 சத வீதம். |
| 1994, சனவரி 1 ஆம் தேதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்கி, ஆனால் 1995, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னுள்ள ஒவ்வொரு காலாண்டிற்கும் | 3.5 சத வீதம்." |

9. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1993 ஆம் ஆண்டின் 63 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம்

*[1993, திசெம்பர் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

## 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 63 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைத் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 1994 ஆம் ஆண்டு சனவரி ஓராந் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. 1993 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகிறது :-

(1) அப்பிரிவின் (20 அ) என்னும் பந்தியில் "ஏதேனும் விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியில் அல்லது 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைக் கடன் தகவல் பணியகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கடன் தகவல் பணியகத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைக் கடன் தகவல் பணியகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கடன் தகவல் பணியகத்தில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (20 ஆ) என்னும் பந்தியில் "ஏதேனும் விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியில் அல்லது 1990 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, இலங்கைக் கடன் தகவல் பணியகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கடன் தகவல் பணியகத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைக் கடன் தகவல் பணியகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கடன் தகவல் பணியகத்தில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

3. 1993 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ii) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் :

"(ii) வங்கி அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவராண்மை, நிறுவனம், கம்பனி ஒவ்வொன்றும் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்குத்

தொகுதி தரகர் ஒவ்வொருவரும் அல்லது ஒவ்வொன்றும் அதனால் எடுக்கப்பட்ட (காசோலை ஒன்று தவிர்ந்த) மாற்றுண்டியல், வாக்குறுதிப்பத்திரம், நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டு, நம்பிக்கைப் பொறுப்புக் கடிதம் அல்லது நம்பிக்கைப் பொறுப்பு வெளிப்படுத்துகை ஒவ்வொன்றின் தொடர்பிலும், அசையும் பருப்பொருள்கள் தொடர்பாக அதற்குச் செய்யப்பட்ட அடகு ஒவ்வொன்றினதும் நாணயக் கடிதம் ஒன்றுக்காக, அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றினதும் அதனால் வழங்கப்பட்ட வைப்புச் சான்றிதழ் ஒவ்வொன்றினதும் (நாணயக் கடிதம் எந்த அசையும் பருப்பொருள்கள் தொடர்பில் திறக்கப்படவில்லையோ அந்த ஏதேனும் அசையும் பருப்பொருளாகிய) ஏதேனும் அசையும் பருப்பொருள் தொடர்பாக அதற்கு வழங்கப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்று அதனால் வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழ், விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியில் பங்குக் கைமாற்றத்தைப் பயனுறுத்தும் அவரினால் அல்லது அதனால் நிறைவேற்றப்பட்ட சாதனம் என்பன தொடர்பில் செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையைச் சேகரித்தல் வேண்டும்" ; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் :-

"(4) (காசோலை ஒன்று தவிர்ந்த) ஒரு மாற்றுண்டியல், வாக்குறுதிப் பத்திரம், நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு, நம்பிக்கைப் பொறுப்புக் கடிதம், நம்பிக்கைப்பொறுப்பு வெளிப்படுத்துகை, அசையும் பருப்பொருள்கள் மீதிலான அடகு, நாணயக் கடிதமொன்றுக்காக செய்யப்பட்ட விண்ணப்பம், அல்லது வைப்புச் சான்றிதழ் (எந்த அசையும் பருப்பொருள்கள் தொடர்பில் அதனுடன் நாணயக் கடிதம் ஒன்று திறக்கப்படாததாயுள்ளதோ அந்த ஏதேனும் அசையும் பருப்பொருளான) ஏதேனும் அசையும் பருப்பொருள் தொடர்பாக, அதற்கு அளிக்கப்பட்ட கொடுப்பனவு ஆவணங்களுள் ஏதேனும் ஒன்று, பங்குச் சான்றிதழ் அல்லது விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றிலான பங்குக்கைமாற்றமொன்றைப் பயனுறுத்துகின்ற சாதனம் என்பனவற்றுக்கான முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவு ஒவ்வொன்று தொடர்பிலும் இப்பிரிவுக்கிணங்க விடயத்துக்கேற்றாற்போன்று ஒத்திணைக்கப்பட்டுள்ள விடத்து அல்லது சேகரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளவிடத்து விடயத்துக் கேற்றாற்போன்று, வங்கி அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மை, நிறுவனம், கம்பெனி அல்லது உரிமம்பெற்ற பங்குத் தொகுதி தரகர் (காசோலை ஒன்று தவிர்ந்த) அத்தகைய மாற்றுண்டியல், வாக்குறுதிப்பத்திரம், நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச் சீட்டு, நம்பிக்கைப் பொறுப்புக் கடிதம், நம்பிக்கைப்பொறுப்பு வெளிப்படுத்துகை, அசையும் பருப்பொருள்கள் மீதிலான அடகு, நாணயக்கடிதம் ஒன்றுக்கான விண்ணப்பம் அல்லது வைப்புச்

சான்றிதழ், கொடுப்பனவு ஆவணம், அல்லது விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியில் பங்குக் கைமாற்றத்தைப் பயனுறுத்தும் சாதனம் என்பன மீதிலான முத்திரைத் தீர்வை, விடயத்துக்கேற்றாற்போன்று ஒத்திணைக்கப்பட்டுள்ளது அல்லது சேகரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என அவ்வவற்றின் மீது அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும். அத்தகைய சான்றிதழ் பொருளளவில் பின்வரும் படிவத்தில் இருத்தல் வேண்டும் :-

"இச்சாதனம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையானது, அதாவது ரூ. ........ முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒத்திணைக்கப்பட்டுள்ளது அல்லது சேகரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என இத்தால் அத்தாட்சிப்படுத்தப்படுகிறது."

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ள "அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மையின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மையின், நிறுவனத்தின், கம்பெனியின் அல்லது ஓர் உரிமம்பெற்ற பங்குத் தொகுதி தரகரின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் உள்ள "அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மையொன்றிலுள்ள என்னும் சொற்களுக்குப் பதிலாக "அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மை, நிறுவனம், கம்பெனி, அல்லது ஓர் உரிமம்பெற்ற பங்குத் தொகுதி தரகர் என்பனவற்றிலுள்ள" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(4) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், ஒரு பகிரங்க அலுவலகத்திற்கு, கூட்டுத்தாபனத்திற்கு, வங்கிக்கு, அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவராண்மைக்கு, நிறுவனத்திற்கு அல்லது கம்பெனிக்கு பொறுப்பாகவுள்ள எவரேனும் ஆளுக்கு உரிய அறிவித்தல் கொடுத்தபின்னர், அத்தகைய சாதனம் உரியமுறையில் முத்திரையிடப்பட்டுள்ளதா என நிச்சயிக்கும் வகையில் அத்தகைய அலுவலகத்தில், கூட்டுத்தாபனத்தில், வங்கியில், முகவராண்மையில், நிறுவனத்தில் அல்லது கம்பெனியில் உள்ள ஏதேனும் சாதனத்தை பரிசீலித்து, அது அவ்வாறு முத்திரையிடாதிருப்பின், அத்தகைய சாதனத்தை ஒன்றிணைத்தலும் வேண்டும்."

5. ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்து மூன்றாம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவு "சாதனம் என்னும் சொல்லை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

> "உரிமம் பெற்ற பங்குத் தொகுதி தரகர்" என்பது 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ், எந்த ஆள் ஓர் உரிமம் அளிக்கப்பட்ட பங்குத் தொகுதி தரகராக உரிமம் அளிக்கப்படுகின்றாரோ அந்த ஆளொருவர் என்று பொருள்படும்.

6. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.